ஜூலை-2012

# இதயநிலா

IDHAYANILA

July 2012 Vol 3 Issue 1 Rs:10 /- Annual subscription Rs:120

ரூ.10



கலைவாணி சொக்கலிங்கம்

5 குக்கர் பரிசு

## ரோஜா மலரே ராஜகுமாரி

# ரோஜா மலரே... ராஜகுமாரி....



ஞாயிறு என்பது கண்ணாக...
திங்கள் என்பது பெண்ணாக...
செவ்வாய் கோவை இதழாக...
சேர்ந்தே நடந்தது அழகாக...

உயரமாய் கம்பீரமாய் நின்று கொண்டிருந்த அந்த ஏழு அடுக்கு மாடிக்கட்டிடத்தின் முன்னே வரிசையாய் நின்றிருந்த கொன்றை மரத்தின் அடியில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்தி, அதன் மீது சாய்ந்து நின்று கொண்டிருந்தான் சங்கர்.

கொளுத்திய வெயிலுக்கு இதமாய் கண்களில் குளிர்கண்ணாடி. நாகரீகமான சுத்தமான உடை. கைகளைக் கட்டிக்கொண்டு நிமிர்ந்த நிலையில் நின்று கொண்டிருந்தவனை கடந்துசென்ற சில இளம்பெண்கள் நின்று திரும்பி

சொ.கலைவாணி சொக்கலிங்கம்



## புதிய இணைப்பு:

கலகலப்பாய் இருந்த
திருமணவீடெங்கும்
நிசப்தம் நிலவி
துயரம்பட புன்னகை
தொலைத்தது...!
மாப்பிள்ளையின்...
மனங்கவர்ந்த 'புதிய' கார்
வரதட்சணைப்பட்டியலில்
'புதிதாய்'
இணைக்கப்பட்டதால்!

-ஜி.வி.மனோ-
கொலுவை நல்லூர்.

பார்த்துவிட்டு தங்களுக்குள் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டே செல்ல, அவஸ்தையாய் கட்டிடத்தின் வாசலைப் பார்த்தான்.

வாசலில் சீருடையில் நின்ற இரு பாதுகாவலரைத் தவிர வேறு யாரும் வெளியே தென்படவில்லை. கண்ணாடிக் கதவு இறுக சாத்தப்பட்டிருந்தது. சலிப்பாய் பார்வையை வேறுபுறமாய் படரவிட்டான்.

கட்டிடத்தின் வெளிப்பக்க சுவர் முழுக்க, நீலநிறக்கண்ணாடியால் மூடப்பட்டு பளபளத்தது. சூரியனின் ஒளியில் அவை வானவில்லாய் வர்ணங்களை வாரியிறைக்க, புன்னகையோடு அதை ரசித்தான்.

உயர்தர தங்கும் விடுதி அது. சுற்றிலும் பசுமையான மரங்கள் சூழப்பட்டிருக்க, கட்டிடத்தின் வலப்பக்கமாய் கடற்கரை தன்னில் மிதக்கும் கட்டுமரங்களோடும் கப்பலோடும் காட்சியளித்தது.

கடற்கரைக் காற்று வெப்பத்தோடு சேர்த்து அனல் காற்றாய் வீசிக்கொண்டிருந்தது. சொர்க்கபுரி என தங்கநிறத்தில் தகதகத்த எழுத்துக்களை பார்த்து தனக்குள் சிரித்துக்கொண்டான் சங்கர்.

எத்தனை ரசனையான பெயர்? குளுகுளு அறையில் அமர்ந்து கொண்டு மொத்தக் கடலையும், நகரத்தின் அழகையும் ஒருங்க கண்டு ரசிக்கலாம். வெளியில் இருந்து பார்க்கும்போதே இத்தனை அழகு என்றால் உள்ளே இன்னும் எத்தனை அழகாய் இருக்குமோ?

இந்தக் கட்டிடத்தின் உரிமையாளர் நிச்சயம் ரசனை உடையவராகத் தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் கடற்கரை ஓரமாய் இத்தனை பெரிய விருந்தினர் மாளிகையைக் கட்டி அதற்கு சொர்க்க புரி என்ற பெயரும் வைத்திருப்பாரா?

இதில் வேலை கிடைத்தால் அக்காவிற்கு அதிர்ஷ்டம்தான். ஏசியிலேயே உட்கார்ந்து வேலை பார்க்கலாம். சம்பளம் கூட நிச்சயம் அதிகமாய்த் தான் இருக்கும்.



இனி அப்பாவை வெயிலில் அலைந்து திரியவிடக்கூடாது. அப்பா உழைத்தது போதும். இன்னும் ஓராண்டில் தன் படிப்பும் முடிந்துவிடும். உடனே ஒரு வேலையைத் தேடிக்கொண்டால் போதும். அப்பாவை உட்கார வைத்து சாப்பாடு போடலாம்.

கண்ணாடிக் கதவு திறக்கப்படுவதைக் கண்டதும் பார்வையை திருப்பினான். ரோஜாதான் வெளியே வந்தாள். சட்டென நகர்ந்து முன்னோக்கி நடந்தான்.

தமக்கையை நெருங்கும் போதே முகம் மாறினான். காலையில் குளித்து முடித்து பளிச்சென்ற ரோஜா மலராய் தன்னுடன் வந்தவள் இப்போது உச்சிவெயில் பட்டு வதங்கிய ரோஜாவாய் வெளியே வந்து கொண்டிருந்தாள்.

"அக்கா! என்னாச்சு? சக்ஸஸ்தானே?" ஆர்வமாய்க் கேட்ட தம்பியை சோர்வாய் பார்த்து மறுப்பாய் தலையசைத்தாள் அந்த அழகான ரோஜா.

"ம்ப்ச்! இல்லடா"

"ஏங்க்கா?"

"இது நமக்கு சரிப்படாது சங்கர். வா போலாம்" என்றவாறே மார்போடு அணைத்திருந்த பைலோடு மரத்தடி நிழலில் நின்ற வண்டியை நெருங்கினாள். கூடவே நடந்த சங்கர் பொறுமையின்றி கேட்டான்.

"என்னக்கா? டெபாசிட் எதுவும் கேட்கிறாங்களா?"

"அது கேட்டாக்கூட பரவாயில்லையே. நிறைய ரூல்ஸ் போடுறாங்கடா."

"ரூல்ஸா?"

"ம். தலைமுடிய கழுத்து வரை வெட்டிவிடணுமாம். முகத்தில மேக் அப் எப்பவும் கலையாம இருக்கணுமாம். கண்டிப்பா லிப்ஸ்டிக் போட்டுக்கணுமாம். அப்புறம்..." தயங்கி நிறுத்தினாள்.

"என்னக்கா?"

"கையில்லாத ரவிக்கைதான் போடணுமாம்." முகச்சுளிப்போடு கூறினாள். சங்கரின் முகத்தில் கோபம் தொனித்தது.

"வாட் நான்சென்ஸ்? இவனுங்க என்ன வேலைக்கு ஆள் தேடுறாங்களோ? இல்ல சினிமாவில நடிக்க ஆள் தேர்ந்தெடுக்கராங்காளா?"

"நானும் இதையேத்தான் கேட்டேன். உங்களை மாதிரி ஆட்களுக்கெல்லாம் இந்த வேலை சரிப்படாதுன்னு சொல்லிட்டார் எம்.டி."

"யாருக்கு வேணும் இவனுங்க வேலை? வாக்கா போகலாம். இப்படின்னு தெரிஞ்சா இவ்வளவு தூரம் வந்திருக்கவே வேண்டாம்"

"எல்லாம் அந்த மனோப்பய செய்த வேலைடா. அவன் நம்மகிட்ட என்ன சொன்னான்? ப்ளோர் மானேஜர் போஸ்ட்டுக்குதானே ஆள் எடுக்கிறதாச் சொன்னான்?"

"ஆமா"

"இங்கே ரிஸப்னிஷ்ட் வேலைக்குதான் ஆள் தேவையாம்."

"என்ன?"

"அதான் நானே வேணாம்னு சொல்லிட்டு வந்திட்டேன்"

"விடுக்கா! நீ வேலை செய்துதான் சாப்பிடணும்ற நிலையில நம்ம வீடு இல்ல. வா போலாம்" என்றவாறே வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

புடவைத் தலைப்பை இழுத்து செருகிக் கொண்டு பின்னால் ஏறி அமர்ந்து தம்பியின் தோளைப் பற்றிக்கொண்டாள் ரோஜா. பைக் சீறிக்கொண்டு புறப்பட, தம்பியை அழைத்தாள் ரோஜா.

"தம்பி!"

"என்னக்கா?"

"அம்மாகிட்ட இதையெல்லாம் சொல்லவேண்டாம்."

"ஏங்க்கா?"

"ஏற்கனவே நான் இன்டர்வியூவுக்கு கிளம்பினதே அம்மாவுக்கு பிடிக்கல. வேண்டாம்னு பத்துவாட்டி சொன்னாங்க. இதுல இவங்க சொன்ன கன்டிஷன்ஸ சொன்னா அவ்ளோதான்."

சங்கர் சிரித்தான். "எதை விடுவாங்களோ இல்லையோ உன் தலைமுடியை வெட்டச்சொன்னது தெரிஞ்சாப் போதும். சொன்னவனைத் தேடி வந்து உதைப்பாங்க."

"ம். செய்வாங்க தான்" ஆமோதித்தாள் ரோஜா. இடையைத் தாண்டி நீளமாய் ஊசலாடிய தடிமனனான பின்னலை முன்பக்கமாய் எடுத்துப் போட்டு அதை பெருமையாய் வருடினாள்.

இந்தக் கூந்தலை வளர்க்க அம்மா பட்டபாட்டை அறிந்தவள் ஆயிற்றே. சோப்பு, ஷாம்பூ, கன்டிஷனர் என எதையும் யூஸ்பண்ணவிடமாட்டாள் தேவகி. எத்தனை அவசரம் என்றாலும் பதறமாட்டாள்.

பொறுமையாய் உட்கார வைத்து வடிகஞ்சியில் தானே தயாரித்த சிகைக்காய் பொடியை பக்குவமாய் கலந்து தலையில் தேய்த்து முடியை அலசி விடும் அம்மா இதை வெட்ட அனுமதிப்பாளா? வெட்ட வேண்டும் என்று சொன்னதற்கே அந்த ஆளை சாத்தினாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

"அக்கா! இறங்கு" தம்பியின் குரலில் கலைந்தாள். அதற்குள் வீடு வந்துவிட்டதா? கண்களை சுழற்றியவள் குழப்பமாய் தம்பியை ஏறிட்டாள். "என்ன சங்கர்! ஏன் வண்டியை நிறுத்தின?"

"ரொம்ப தாகமா இருக்குக்கா. வா! ஒரு ஜூஸ் சாப்பிட்டு போலாம்"

"இங்கேயா" வியப்பாய் விழிகளை விரித்து அந்த ஜூஸ் கார்னரை ஏறிட்டாள் ரோஜா. இரண்டு மாடிகளைக் கொண்ட அந்தக் கடையில் ஏராளமான கூட்டம் திரம்பி வழிந்தது.

சுவரில் பதிக்கப்பட்டிருந்த மரத் தடுப்புகளில் மலை போல் அனைத்து வகை பழங்களும் குவிக்கப்பட்டிருந்தன. வரிசையாய் ஏழெட்டு மிக்ஸிகள் சுழன்றுகொண்டிருக்க, சீருடை அணிந்த பணியாளர்கள் அதை சுத்தமாய்



# முதுமை நமக்கு சுமை அல்ல...

-அ.யாழினி பர்வதம், சென்னை.

**75 வயது** இத்தாலியரை எதிர்த்து போராடிய போது உமர் முக்தாருக்கு...

**86 வயது** பெஞ்சமின் பிராங்ளின் அமெரிக்கச் சட்டம் எழுதிய போது...

**84 வயது** சர்ச்சில் இங்கிலாந்து பிரதமர் ஆன போது...



**76 வயது** டால்ஸ்டாய் சைக்கிள் ஓட்ட கற்றபோது...

**85 வயது** ராஜாஜி புதுக்கட்சி துவங்கிய போது...

**72 வயது** பிரெஞ்சு புரட்சிக்கு வால்டேர் வித்திட்ட போது....

**85 வயது** அமெரிக்க நடிகர் ஜார்ஜ் ஆஸ்கர் விருது பெற்ற போது...

வடிகட்டி உயரமான கண்ணாடி டம்ளரில் ஊற்றி அதில் ஐஸ் துண்டுகளை மிதக்கவிட்டு பணிவோடு பரிமாறிக் கொண்டிருந்தனர்.

டோக்கன் எடுக்குமிடத்தில் கூட்டம் அலைமோதியது. உள்ளே இருந்த இருக்கைகள் ஏறத்தாழ அனைத்தும் நிரம்பியிருந்தது. ரோஜா தயக்கமாய் தம்பியிடம் திரும்பினாள்.

"சங்கர்!"



## விவசாயி நிலை

செடிகளில் கனி இருந்தபோது
சந்தையில் நல்ல விலை இல்லை!
சந்தையில் நல்ல விலை இருந்தபோது
செடிகளில் கனிகள் இல்லை!
பாவம் விவசாயி!

**-ஜி.வி.மனோ- கொலுவை நல்லூர்.**

''என்னக்கா நின்னுட்ட. வா''

''இல்ல.இவ்வளோ பெரிய கடையிலயா குடிக்கணும்?''

''பிரெஷ்ஷா ஜூஸ் கிடைக்கும். நாம என்ன ஜூஸ் கேட்கிறோமோ அதை நம்ம கண்ணு முன்னாலயே செய்து தருவாங்க. வா.''

''கூட்டமா இருக்கேடா.''

''கூட்டத்தைப் பார்த்தா முடியுமா? நீ உள்ளே போய் ஏதாவது சீட் இருந்தா பார்த்து உட்கார். நான் டோக்கன் வாங்கிட்டு வந்திடுறேன்.

''சரி''

''அக்கா! கிரேப் ஜூஸ் ஓகேவா?''

''சொல்லு'' என்றாவாறு தயக்கமாய் உள்ளே நுழைந்தாள் ரோஜா. சங்கர் டோக்கன் கொடுக்குமிடத்தை நெருங்க. கூட்டத்தின் நடுவே எந்த இருக்கை காலியாக இருக்கிறது என பார்வையை சுழற்றியவாறே நடந்த ரோஜா எதிரே வந்தவனை கவனிக்கத் தவறினாள்.

எதிரில் வந்தவனும் கையில் இருந்த ட்ரேயில் நிரப்பப்பட்டிருந்த மாதுளை ஜூஸ் திரும்பிவிடாமல் கவனமாக மெதுவாகவே நடந்து வர. ரோஜாவின் நேருக்கு நேரான மோதலில் கையிலிருந்த ட்ரேயை தவறவிட்டான்.

தான் யார் மீதோ மோதிவிட்டோம் என்பதை உணர்ந்து பதறி. ''ஐ ம் ஸோ ஸாரி'' என்றவள் திகைத்துப் போனாள்.

எதிரே நின்ற அந்த இளைஞனின் பளிச்சென்ற உடை முழுவதும் மாதுளை ஜூஸ் வழிந்து கொண்டிருக்க, மூன்று கண்ணாடி தம்ளர்களும் நொறுங்கி சிதறியிருந்தன. சத்தம் கேட்டு மற்றவர்களும் திரும்பிப் பார்க்க, ரோஜா வெகுவாய் பதறிப்போனாள். ''ஸாரிங்க! நீங்கவர்றதை நான் கவனிக்கல. ஸாரி. வெரி ஸாரி.''

அந்த இளைஞன் மௌனமாகவே நிற்க இரண்டு சர்வர்கள் ஓடிவந்தனர். ஒருவன் அவசரமாய் கீழே கிடந்த கண்ணடாடித் துகள்களை சுத்தப்படுத்த,



மற்றவன் கடுப்பாய் அவளை ஏறிட்டான்.

''ஏன் மேடம்! பார்த்து வரக்கூடாதா?''

''ஸாரி''

''ஸாரி சொன்னாச் சரியாய் போச்சா? உங்களால மூணு கிளாஸ் மூணு ஜூஸ் எங்களுக்கு லாஸாயிடுச்சி. அதோட...''

''ஹரி'' அழுத்தமாய் அழைத்தான் கௌதம்.

''ஸாரி''

''கஸ்டமர் ஜூஸீக்காக வெயிட் பண்ணுவாங்க. முதல்ல அவங்களைக் கவனி''

''எஸ் ஸார்'' என்றவாறு அவன். நகர, சற்று பயமாய் எதிரே நின்றவனை நிமிர்ந்து பார்த்தாள் ரோஜா. சுற்றியுள்ளவர்களின் பார்வையில் அவமானத்தால் முகம் சிவந்து, கண்களில் துளி நீர் எட்டிப்பார்த்தது.

''ஸாரி ஸார்! நான் நீங்க வந்தத கவனிக்கல''

அவளது முகமும் கண்களில் தெரிந்த பயமும் கௌதமின் முகத்தில் புன்னகையை வரவழைத்தது.

''இட்ஸ் ஓகே. என்ன சாப்பிடுறீங்க?''

''ம்?''

''ஜூஸ் சாப்பிடத்தானே வந்தீங்க?

''ம்.ம்''

''என்ன ஜூஸ் சாப்பிடுறீங்க?''

''ஸார்! உங்களுக்கு எம்மேல கோபமே வரலையா?'' நம்ப முடியாமல் விழிகளை விரித்து அவள் கேட்ட விதம் ரசிக்க வைத்தது.

''ஏன் கோபப்படணும்?''

''இல்ல.. வந்து.. என்னால உங்களுக்கு ஜூஸ், கிளாஸ் எல்லாம் லாஸாயிடுச்சே.''

''அப்போ இது?'' என தன் ட்ரெஸ்ஸைக் காட்டினான்.

''அச்சச்சோ! ட்ரஸ் எல்லாம் ஜூஸ் அப்போ இதுவும் வேஸ்டாப் போச்சா? இது துவைச்சா போகாதா?''

''மாதுளை ஜூஸ் பட்டா கறை போகாது''

''வெரி ஸாரி ஸார். நான் வேணும்னா இதுக்கான பணத்தை தந்திடட்டுமா?''

''என்ன?'' புருவம் உயர்த்திக் கேட்டான்.

''அதான் ஸார்! நஷ்ட ஈடு.''

''ஓ! எவ்வளவு தருவீங்க?'' குறுநகையோடு கேட்டான்.

''உடைஞ்ச கிளாஸ், ஜூஸ் எல்லாத்துக்கும் சேர்த்து எவ்வளவு ஆகும்?''

''என் டிரெஸ்ஸோடச் சேர்த்து ஒரு ட்டு தௌஸண்ட் ஆகும்'' அவன் இலகுவாய்ச் சொல்ல, ரோஜாவின் விழிகள் அதிர்ச்சியில் விரிந்தது.

''என்ன? ரெண்டாயிரமா?''

''ம். ஜஸ்ட் ட்டு தௌஸண்ட்''

''அக்கா! என்ன இங்க நின்னிட்டு இருக்க?'' சங்கரின் குரலில் பீதியோடு திரும்பினாள்.

''ச..ங்கர்''

''என்னக்கா! ஏன் உன் முகம் இப்படி இருக்கு? யார் இவர்?'' கௌதமை பார்த்துக் கொண்டே கேட்டான்.

''சங்கர்! இவர்...சர்வர் டா. இவர் கொண்டு வந்த ஜூஸ் மேல நான் மோதி...''

''எக்ஸ்கியூஸ்மீ! சின்ன திருத்தம். நீங்க மோதினது எம்மேல''

''ஆமாம். ஆமாம். இவர் மேல மோதினதில ஜூஸ் எல்லாம் கீழே சிந்தி கிளாஸ் உடைஞ்சிபோச்சு''

''என்னக்கா நீ! பார்த்து வரக்கூடாதா? ஸாரி ஸார்.''

''இட்ஸ் ஓ.கே. நீங்க உட்காருங்க.''

''சங்கர்! நஷ்ட ஈடா ரெண்டாயிரம் ரூபா கேட்கிறார்டா''

''ஹலோ! நஷ்ட ஈடு தர்றேன்னு சொன்னது நீங்க. நானா கேட்டேன்?''

''கேட்கல தான். ஏதோ பாவம்! மாசச் சம்பளக்காரர். இந்த அமௌண்ட்ட சம்பளத்தில பிடிச்சிப்பாங்களேன்னு அனுதாபப்பட்டு கேட்டா அநியாயமா ரெண்டாயிரம் கேட்கிறீங்களே. இது உங்களுக்கு ஓவராத் தெரியல?''

''தேவைதான்.''

''என்ன?''

''நீங்களே வந்து மோதிட்டு நீங்களே நஷ்டஈடு தர்றேன்னு சொல்லிட்டு இப்ப என்னையே குறை சொல்றீங்களா?''

''நீங்க கேட்டது மட்டும் சரியா?''

''அக்கா! சும்மா இரு. ஸாரி ஸார். எங்களால உங்களுக்கு நஷ்டமாகிப்போச்சி. எவ்வளவுன்னு சொனனா...''

''நோ ப்ராப்ளம். நீங்க ஜூஸ் சாப்பிட்டு கிளம்புங்க. நான் வர்றேன்.''

''ஆனா உங்க சம்பளத்தில பிடிச்சுப்பாங்களே'' என்றவளை பார்த்து புன்னகைத்தான் கௌதம்.

''இது ஒரு விபத்து. இதுல உடையுற பொருளுக்கெல்லாம் எங்க முதலாளி கணக்கு பார்க்க மாட்டார். டோண்ட் வொர்ரி''

''பரவாயில்லையே! உங்க முதலாளி ரொம்ப நல்லவரா இருப்பார் போலிருக்கே''

''அப்படித்தான் சொல்றாங்க ப்ளீஸ் ஸிட் டவுன். என்ன ஜூஸ் ஆர்டர் பண்ணியிருக்கீங்க?''



''கிரேப் ஜூஸ் சொல்லியிருக்கேன்.'' சங்கர் சொல்லும் போதே குளிர்ச்சியான திராட்சை பழச்சாறை ஒரு சர்வர் கொண்டு வர.

''இதோ வந்திடுச்சி. சாப்பிடுங்க.'' என்றவாறு புன்னகையோடு விலகிச் சென்றான். வந்து நின்றவனிடம் ஜூஸை வாங்கிக் கொண்டனர்.

கையிலிருந்த சான்றிதழ் அடங்கிய பைலை டேபிள் மீது வைத்துவிட்டு ஜூஸை வாங்கிக் கொண்டாள் ரோஜா.

''பாவம்பா அந்த ஆளு. ட்ரெஸ் முழுக்க ஜூஸாஆயிடுச்சே. என்ன பண்ணுவாரோ?''

''துவைச்சிப் போடுவார்.''

''விளையாடாதே சங்கர்''

''பின்னே! நீ ஏன் அவர் மேல போய் மோதின?''

''நான் என்ன வேணும்னா மோதினேன்? டேபிள் ஏதாவது காலியா இருக்கான்னு பார்த்திட்டே வந்தேனா? எதிர்ல வந்தவரைக் கவனிக்கல.''

''என்னவோ உன் நல்ல நேரம். அவர் பணம் எதுவும் வேணாம்னுட்டார். இல்லன்னா இன்னிக்கு பர்ஸ் காலியாகியிருக்கும்.''

'' இன்னிக்கு விடிஞ்ச நேரமே சரியில்லடா. எல்லாமே இப்படித்தான் நடக்குது''

''ஏங்க்கா?''

''எவ்வளவு ஆசையா இன்டர்வியூ போனேன். ம்ப்ச்! பெயிலியராப் போச்சே!''

''விடுக்கா! எல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சுக்க. ஏற்கனவே அப்பாவுக்கோ அம்மாவுக்கோ உன்னை வேலைக்கு அனுப்புற ஐடியா இல்ல. பேசாம அப்பா பார்க்கிற மாப்பிள்ளைய கல்யாணம் பண்ணிட்டு குடும்ப இஸ்திரி ஆயிடு''

''ந ஒருத்தன் தான் பாக்கி. நீயும் ஆரம்பிச்சிட்டியா?''

''அம்மா சொல்றதுலயும் நியாயம் இருக்குதுக்கா.''

''என்ன பொல்லாத நியாயம்?''

''பருவத்தே பயிர் செய்யுன்னு சொல்வாங்களே. அதே மாதிரி உன்னை மாதிரி பொண்ணுங்களுக்கு கல்யாண வயசை நெருங்கினதும் முகத்திலே ஒரு களை வந்திடுமாம். அதான் தேஜஸ். அந்த சமயத்தில உங்க அழகு ரெண்டு மடங்கு அதிகமாகிடுமாம்.

அந்த மாதிரி அழகோட இருக்கும் போதே கல்யாணம் பண்ணிக் கொடுத்திடணுமாம். வயசு கடந்து போனா அந்த தேஜஸ் மங்கிப் போயிடுமாம்''

''இதெல்லாம் உனக்கு யாருடா சொல்றது?'' சிரித்தவாறே ஜூஸைக் குடித்து முடித்து டம்ளரை டேபிள் மீது வைத்தாள். கைக்குட்டையை எடுத்து நாசூக்காய் உதட்டை ஒற்றியெடுத்தவாறே தம்பியுடன் சேர்ந்து எழுந்தாள்.

''இது என்ன பிரமாதம்? இன்னும் எவ்வளவோ தெரியும் எனக்கு''

''ஓஹோ! காலேஜ்ல இதைத்தான் சொல்லித்தர்றாங்களா உனக்கு?'' மெலிதாய் சிரித்துக் கொண்டே கேட்டபடி, நடக்கத் துவங்கினர். உள் அறையிலிருந்து வெளியே வந்த கௌதம், அவளது சிரிப்பில் மெய்மறந்து போனான்.

இருவரும் பேசிக்கொண்டே கடந்து வெளியேற, ஏதோ ஒரு ஆர்வமிகுதியில் அவர்களுக்கு பின்னே தொடர்ந்து செல்ல, அவனது கண்ணில் அது இடறியது. நின்று கவனித்தான்.

அவள் அமர்ந்திருந்த இடத்தில் டேபிளின் மீது அந்த பைல் இருந்தது ஆகாய வண்ண பிளாஸ்டிக் அட்டையோடு இருந்த பைலை ஆர்வமாய் எடுத்தான்.

## 2

உன்னைப் பார்த்த பின்பு நான்
நானாக இல்லையே
என் நினைவு தெரிந்து நான்
இது போல இல்லையே!

நண்பகல் வெயில் சுட்டெரிக்க, சாலை முழுக்க தகித்தது. மதிய உணவுவேளை என்பதால் சாலை முழுவதும் வாகனங்கள் போவதும் வருவதுமாய் இருக்க, சங்கர் நிதானமான வேகத்தில் பைக்கைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

பின்னால் அமர்ந்திருந்த ரோஜா வெயில்தாளாமல் புடவைத் தலைப்பை தோள்வரை போர்த்தியிருந்தாள். சிக்னலில் சிவப்பு விளக்கு எரிய, முன்னே சென்ற வாகனங்கள் தங்கள் வேகத்தைக் குறைத்துவிட, தானும் பைக்கை நிறுத்தினான்.

பின்னால் நின்ற வாகனங்களின் ஹாரன் ஒலி காதைப்பிளந்தது. காதைப் பொத்திக் கொண்டாள். ரோஜா. ச்சே! இந்த மனிதர்களுக்கு ஏன் பொறுமை என்பதே இல்லாமல் போயிற்று? எப்படியும் சிக்னல் விழாமல் வண்டி நகராது. பிறகேன் இத்தனை அவசரம்?

காதை செவிடாக்கும் படியான ஹாரன்? கொஞ்சநேரம் பொறுமையாய் இருந்தால் என்ன? மீண்டும் தொடர்ச்சியாய் ஒலித்த ஹாரனில் கடுப்பாகி பின்னால் நின்ற வாகனத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

இளம்பச்சை நிறத்தில் நின்ற காரிலிருந்துதான் ஹாரன் ஒலித்துக்கொண்டிருந்தது. முழுக்க கண்ணாடியால் மூடப்படிருந்த காரின் முன்பக்க இருக்கையை உற்றுப்பார்த்தவளுக்கு தூக்கிவாரிப்போட்டது.

சற்று முன் ஜூஸ் கடையில் நின்றவன் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருக்க, அதைவிட அதிர்ச்சி அவன் இவளைப் பார்த்து ஏதோ ஜாடை செய்ததுதான். சட்டென முன்புறமாய் திரும்பிக் கொண்டாள். உள்ளம் படபடத்தது.



ராஸ்கல்! என்ன திமிர் இருந்தால் தன்னைப் பார்த்து ஜாடை செய்வான்? சேச்சே! இவனுக்காக பரிதாபப்பட்டோமே. இதற்குத்தான் அறிமுகம் இல்லாத ஆட்களிடம் பேச்சு வைத்துக் கொள்ளக்கூடாது என்பது. ரெண்டு வார்த்தை பேசியவுடன் பின்னாலயே வந்துவிட்டானே! இடியட்'' பற்களைக் கடித்தவாறே இருக்க, மீண்டும் ஹாரன் பலமாய் ஒலித்தது.

'ம்ஹூம்! திரும்பக் கூடாது. பக்கா பொறுக்கியாய் இருப்பான் போலிருக்கிறதே? கடவுளே! இந்த சிக்னல் சீக்கிரம் விழுந்துவிடக்கூடாதா?

மீண்டும் ஹாரன் ஒலிக்க சங்கர் திரும்பினான்.'' எவன் அது? சிக்னல்ல நின்னு ஹாரன் அடிச்சிட்டே இருக்கான்?''

''சங்கர்! திரும்பாதே''

''ஏங்க்கா''

''அது...அவன் தான்'' என்றாள் படபடப்பாய்.

''யாருக்கா?''

''அதான்டா! ஜூஸ் கார்னர்ல பார்த்தோமே. அவன்தான். ஏதோ ஜாடை செய்யுறான்டா''

''என்னது?'' கோபமாய்க் கேட்டுக்கொண்டே வண்டியை விட்டு இறங்க முயல, அதற்குள் பச்சைநிற விளக்கு ஒளிர்ந்தது. அதற்காகவே காத்துநின்ற வாகனங்கள் ஒன்றையொன்று முந்திக் கொண்டு செல்ல, வேறு வழியின்றி தன் வாகனத்தை உசுப்பினான்.

வாகன நெரிசலில் ஊர்ந்த வாறே ரோஜாவை அழைத்தான்.

''அக்கா''

''என்னடா?''

''நீ பின்னால திரும்பாதே. வண்டி வேற எங்காவது போகுதான்னு பார்ப்போம். நம்மளைத் தான் ஃபாலோ பண்றான்னு தெரிஞ்சா பாலம் கடந்ததும் நின்னு என்னன்னு கேட்போம்.''



- துணிகளுக்கு நீலம் போடும் போது கொஞ்சம் வாஷிங் சோடாவையும் சேர்த்துக் கொண்டால் நீலம் திட்டுத் திட்டாய்த் துணிகளில் தெரியாது.
- அலமாரியில் உட்பக்கத்தை வெள்ளை நிறத்தில் பெயிண்ட் அடித்தால் நல்ல வெளிச்சமாக இருக்கும். இருட்டைத் தேடி வரும் பூச்சிகளும் சேராது.

**–சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி.**

ரோஜா பதறினாள்.''ஐயோ! வேண்டாம் தம்பி! இன்னும் பத்து நிமிஷத்தில வீட்டுக்குப் போயிடலாமில்ல. பேசாம வீட்டுக்குப் போவோம். நமக்கெதுக்கு வீண் வம்பு?''

''என்னக்கா பேசுற? பார்த்தியா வண்டி நம்ம பின்னாலயே தான் வருது. இந்த ஆள் நிச்சயமா நம்மைத்தான் ஃபாலோ பண்றான் என்றான் சங்கர் தனது ரியர்வியூ மிர்ரரில் பார்த்துக் கொண்டே.

ரோஜா சற்று பயமாய் திரும்பி ஓரக்கண்ணால் பார்க்க அந்த இளம்பச்சை நிறக் கார் நிதானமாய் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

''சங்கர்! அதெப்படி அவ்வளவு உறுதியாய் சொல்ற? ஒருவேளே இதே ரோட்டோரமா நிறுத்துறேன். வண்டி நேரே போகுதா இல்ல நமக்காக ஸ்லோ பண்ணுதான்னு பார்த்திடலாம்''

''எனக்கு பயமா இருக்குடா''

''என்னக்கா நீ! இந்தப்பட்டபகல்ல அவனால நம்மல என்ன செய்ய முடியும்?''

''ஆமா! அதுவும் சரிதான்''

''ஆனா எனக்கு ஒன்னுதான் சந்தேகமா இருக்கு''

''என்னடா?''

''இல்ல.. சர்வர்ன்னு தானே சொன்னே? அவன் எப்படி இந்தக்கார்ல வர்றான்?''

''டேய்! அந்த ஓனரோட ட்ரைவரா இருப்பான்.''

''என்னடா குழப்புற?''

''எனக்கென்னவோ இவன் சர்வர் மாதிரி தெரியலக்கா''

''ஏன்?''

''மத்தவங்க எல்லாம் யூனிபார்ம்தானே போட்டிருந்தாங்க. இந்த ஆள் போடலையே கவனிச்சியா?'' சங்கர் சொன்னதும் திகைத்தாள்.

'ஆமா! இவன் வேறு நிறத்தில் தானே ஆடை அணிந்திருந்தான். அதுவும் அந்த சர்வரிடம் உத்தரவு போட்டானே. அவன்கூட சார் என பணிவாய் அழைத்தானே! அப்படியென்றால் இவன்...?'

''ஆமா சங்கர்! அப்போ இவன் யாராய் இருக்கும்?''

''யார்ன்னு தெரியல. ஆனா நிச்சயம் சர்வர் இல்ல. நான் பிரண்ட்ஸ் கூட நிறைய தடவை அங்கே போயிருக்கேன். இவரை பார்த்ததேயில்ல.''

''ஒரு வேளை புது சர்வரா இருக்கலாம். யூனிபார்ம் இன்னும் கிடைச்சிருக்காது.''

''நமக்குள்ள ஏன் குழப்பம்? அவர்கிட்டயே கேட்டுடலாம்''என்றவாறே சாலையோரமாய் நின்ற பருத்த புளியமரத்தடியில் தன் வண்டியை நிறுத்தினான்.

''இங்க ஏன்டா நிறுத்துற?''

''ஷ்! பேசாதே. நம்ம ரோமியோவோட காரும் நிக்குதுபார். நீ இங்கேயே நில்லு. நான் போய் அவனை என்னன்னு கேட்டுட்டு வர்றேன்.'' என்றவாறே சட்டைக்கையை மடித்துவிட்டுக் கொண்டு சங்கர் காரை நோக்கிச் செல்ல, கலவர முகத்துடன் இறங்கி நின்றாள் ரோஜா.

அதே மரத்தடியில் சற்று தள்ளி தானும் காரை நிறுத்திவிட்டு பைலுடன் இறங்கினான் கௌதம். கோபமாய் அவனை நெருங்கிய சங்கரின் முகம் அவன் கையிலிருந்த நீலநிற பைலைக்கண்டதும் மாறியது.

அதற்குள் அதைக்கவனித்து விட்ட ரோஜா பதட்டமும் உற்சாகமுமாய் அவர்களை நெருங்கினாள்.

''ஐயோ! இது என்னோட சர்டிபிக்கேட்ஸ் பைல்''

''ஏங்க! சர்டிபிக்கேட்ஸ இவ்வளவு அலட்சியமா விட்டுட்டு வரலாமா? நல்ல வேளை என் கண்லபட்டது. இல்லன்னா என்ன ஆகியிருக்கும்? உரிமையாய் அவன் கடிந்துகொள்ள. அவஸ்தையாய் தம்பியை ஒருமுறை பார்த்துவிட்டு அவனிடம் திரும்பினாள்.

''ஸாரி! எப்படியோ மறந்துட்டேன்''

''பார்த்து! இனிமே இப்படி அஜாக்கிரதையா இருக்காதீங்க''

''ம்'' தலையாட்டிய வாறே அவன் நீட்டிய பைலை பெற்றுக் கொண்டாள்.

''இதைக் கொடுக்கிறதுக்காக இத்தனை கிலோ மீட்டர் உங்க பின்னாலயே வந்திருக்கேன். எவ்வளவு நேரமா ஹாரனடிச்சேன்? அக்கா தம்பி ரெண்டுபேரும் திரும்பிப் பார்த்தீங்களா?''

சங்கர் அவஸ்தையாய் புன்னகைத்தான். ''ஸாரி ஸார் நாங்க என்னவோ நினைச்சோம். ஆனா... ''தயக்கமாய் இழுக்க, கௌதம் இருவரையும் கூர்ந்து பார்த்தான்.

''என்ன நினைச்சீங்க? ரோமியோ பாலோபண்றான்னு...''

''நோ நோ. அப்படி இல்ல'' அவசரமாய் மறுத்தாள் ரோஜா.

''அதான் முகத்தைப் பார்த்தலே தெரியுதே''

''வந்து... ஸாரி!''

''பரவாயில்ல விடுங்க சும்மா ஒருத்தர் ஃபாலோ பண்ணினா சந்தேகம் வர்றது சகஜம்தானே? அப்போ... இப்ப வண்டிய நிறுத்தினது கூட என்கூட பைட் பண்ணத்தானா?''

''சேச்சே! இல்லை ஸார்''

''உங்க தோரணையைப் பார்த்தேனே. பரவாயில்ல இப்படி ஒரு தம்பி இருக்கணும். ஓ.கே. நைஸ் மீட்டிங் யூ'' புன்னகையோடு கைநீட்டியவனிடம் கைகுலுக்கினான் சங்கர்.

'ஐ'ம். கௌதம்''

''நான் சங்கர். இது என்னோட சிஸ்டர் ரோஜா''என்றதும் லேசாய் புருவம் சுருக்கினான். பின் தனக்குள்ளாக சிரித்துக் கொண்டு தோளைக் குலுக்கினான்.

"ஓ.கே.பார்க்கலாம்.ஸீயூ"

"ஒன் மினிட் ஸார்"

"என்ன?"

"ரொம்ப நன்றி"

"எதுக்கு?"

"அக்காவோட பைலை பத்திரமா கொண்டு வந்து தந்ததுக்கு"

"இட்ஸ் ஓ.கே. ஆமா! ரெண்டு பேரும் படிக்கிறீங்களா?"

"நோ ஸார். நான் எம்.எஸ்.ஸி பர்ஸ்ட் இயர் பண்றேன். அக்கா எம்.காம் முடிச்சிட்டு இப்ப வேலைதேடிட்டு இருக்கா. இன்னிக்கு கூட ஒரு இன்டர்வியூ அட்டெண்ட் பண்ணிட்டு வர்ற வழியிலதான் உங்க ஜூஸ் கார்னருக்கு வந்தோம்"

"அது என் அப்பாவோட ஜூஸ் கார்னர்"

"ஓ" இருவரும் மீண்டும் அவஸ்தையாய் புன்னகைத்தனர்.

"இன்டர்வியூ என்னாச்சி?"

"அது...அந்த வேலை அக்காவுக்கு பிடிக்கல"

"ஏன்?"

"நான் போனது வேற வேலைக்காக ஆள் வேணுமாம். அது ஒத்துவராதுன்னு வேண்டாம்னு சொல்லிட்டேன்."


"ஏன்? நல்ல ஜாப்தானே? அழுக்கு ஒட்டாம மேக்அப் கலையாம எப்பவும் புன்னகையோட செய்யுற ஜாப்தானே?"

"ஸாரி! எனக்கு செயற்கையா புன்னகைக்க தெரியாது." பட்டென சொன்னவளைப் பார்த்து மீண்டும் புன்னகைத்தான்.

"வெரிநைஸ். ஆமா! எங்கே இன்டர்வியு போனீங்க?"

"டிரிப்ளிக்கேன்ல சொர்க்கபுரின்னு ஒரு"...சங்கர் தொடங்க கௌதமின் முகம் சட்டென மாறியது.

"என்ன? சொர்க்கபுரியா?"



அமெரிக்காவில்
வேர்க்கடலையை
விட, பாதாம் பருப்பின்
விலை மலிவு. இதனால்
அங்குள்ள இந்துக்
கோயில்களில்
பாதாம் பருப்பு பிரசாதமாக
வழங்கப்படுகிறது.

–பச்சைமுத்து,
கிருஷ்ணகிரி



ஆமா ஸார். உங்களுக்குத் தெரியுமா?" காத்து நின்றாள் தேவகி. மென்மையும் அமைதியும் தோய்ந்த தெய்வீக முகம்.

"வாடாப்பா. எவ்வளவு நேரமா உங்களைத் தேடுறது. வெளிய போனா நேரத்தொட வீடு வந்து சேரப்படாது?"

"அம்மா! நாங்க என்ன சொந்தக்காரங்க வீட்டுக்கா போயிட்டு வர்றோம்? இன்டர்வியூம்மா. அவங்க கேள்வி கேட்டு முடிச்சி போகச் சொன்னாத்தான் வெளியே வரமுடியும்." என்றவாறே ரோஜா வீட்டிற்குள் நுழைய, ஒப்படை தட்டிக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி தன் பிள்ளைகளை ஆர்ப்பாட்டமாய் வரவேற்றார்.

"வாங்கடா கண்ணுகளா! வாங்க! வாங்க"

"என்னப்பா இது உலக மகா அதிசயமா இருக்கு?"

"என்னடாக் கண்ணு? நான் ஒப்படை தட்டுறதா?"

"ம்ஹூம். இந்த நேரத்தில நீங்க வீட்ல இருக்கிறது" என்றவாறே மர அலமாரியைத் துறந்து பைலை பத்திரப்படுத்திவிட்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தாள் ரோஜா.

"என்னடாக் கண்ணு? உட்கார்ந்திட்ட?"

"டயர்டா இருக்குப்பா. ரொம்ப வெயில் இன்னிக்கு"

"தேவகி! தர்பூசணி ஜூஸ் பண்ணியிருந்தியே. எடுத்திட்டு வா ரொம்ப சோர்ந்திட்டா பாரு" தந்தை குரல் கொடுக்கும் முன்னே இரண்டு டம்ளரில் பழச்சாறுடன் வந்தாள் தேவகி.

"ஏன் சோர்வு வராது. இந்த வெயில்ல அவ்வளவு தூரம் இவளை யார் போகச் சொன்னது? இவ வேலைபார்த்துத்தான் நம்ம வீட்ல அடுப்பு எரியணுமா? பொட்டபுள்ள காலாகாலத்தில கல்யாணம் பண்ணிட்டு குடும்பம் நடத்துறத விட்டுட்டு..."

"ஐயோ அம்மா! இதுக்கு வெயிலே பரவாயில்ல"

"என்னடி? எம்பேச்சு உனக்கு வெயிலைவிட கொடுமையாத் தெரியுதா?"

"ஏம்மா! இப்படி ஒப்பனா சொல்ல முடியாதுன்னு தானே அக்கா சிம்பாலிக்கா சொல்றா" சிரிப்போடு சொன்ன மகனை முறைத்தாள் தேவகி.

"முதல்ல உன்னைச் சொல்லணும். அவதான் கூப்பிட்டான்னா உனக்கு எங்கேடா போச்சு புத்தி? அவளைக்கூட்டிட்டு அவ்வளவு தூரம் போனியா? இவனுக்கு வண்டி வாங்கிக் கொடுத்ததுக்கு உங்களை மொதல்ல சாத்தணும்"

"அப்படிப்போடு! பரவாயில்லம்மா. தயவு தாட்சண்யம் இல்லாம ஒட்டுமொத்தமா திட்டுறீங்க. ஐம் ப்ரௌடு ஆப் யூ"

"ஏன் சொல்லமாட்ட? நான் பேசுறது உங்களுக்கெல்லாம் காமெடியாத் தெரியுது இல்ல" மனைவியின் முகம் வாடியதும் தன் வேலையை நிறுத்திவிட்டு வந்தார் சுந்தரமூர்த்தி.

"என்ன தேவகி இது? நம்ம வீட்ல எப்பவுமே இப்படி கலகலப்பா இருக்கிறதுது சகஜம்தானே? இன்னிக்கு ஏன் உனக்கு இவ்வளவு கோபம் வருது"

''பின்ன என்னங்க! அந்த சம்பந்தம் கூடி வர்ற மாதிரி இருக்கு. இந்த நேரம் பார்த்து இவ வேலைக்குப் போகணும்னு ஒத்தைக் கால்ல நிக்கிறா. நீங்களும் தட்டிக் கேட்காம அவ பேச்சுக் கெல்லாம் தலையாட்டிட்டு இருக்கீங்க. எம்பேச்சை யார் மதிக்கிறாங்க?'' குறைப்பட்டுக் கொண்டே ஓரமாய் அமர்ந்து கொண்ட தாயைப் பார்த்து மனம் கனிந்தார் ரோஜா.

கையிலிருந்த டம்ளரை மேசை மீது வைத்துவிட்டு தாயை நெருங்கினாள். தரையில் அமர்ந்து தாயின் மடிமீது தலையை வைத்துக் கொண்டாள்.

''அம்மா! உங்க பேச்சைக் கேட்காம விட்டிருக்கோமா நாங்க. எப்பவோ நடக்கப் போற கல்யாணத்துக்காக இப்பவே வீட்ல அடைஞ்சி கிடக்கணுமா? கொஞ்சநாள் என் மனதிருப்திக்காக வேலைபார்க்கிறேனே.''

''எப்பவோ நடக்கப் போற கல்யாணமா? இன்னும் நாற்பத்தி அஞ்சு நாள் தான் இருக்கு'' தாயின் பதிலில் திடுக்கிட்டாள்.

''என்ன?''

''என்னம்மா சொல்றீங்க?'' சங்கரும் தாயை நெருங்கினான். சுந்தர மூர்த்தி வெள்ளையாய் சிரித்தார்.

''சங்கரா! உங்க அக்காவுக்கு கல்யாண ராசி வந்திடுச்சி. நாம பார்த்த மொத வரனே அமைஞ்சி போச்சு.''

''அப்பா! என்னப்பா சொல்றீங்க?''

''ஆமம்மா! நம்ம தேசிகன் இருக்கானில்ல. அவன் மகன் திருவள்ளுர்ல சொந்தமா பாத்திரக்கடை வெச்சிருக்கானாம். போன வாரம் தேசிகன் நம்ம வீட்டுக்கு வந்தானில்ல. அப்பத்தான் உன் படிப்பு முடிஞ்சி போச்சுன்னு சொன்னேன்.

உடனே உன் ஜாதகத்தை வாங்கிட்டு போயிட்டான். எல்லா பொருத்தமும் அமோகமா இருக்காம். இன்னிக்கு காலையில தான் போன் பண்ணினான். சாயந்திரம் ஆறுமணிக்கு பெண்பார்த்து நிச்சயம் பண்ணிட்டு போக வர்றாங்க.' தந்தை சொன்ன பதிலில்பலமாய் அதிர்ந்தாள்.

''என்னப்பா! எங்கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லாம...''

''நீ இன்டர்யூக்கு போன பிறகுதாம்மா போன் வந்தது. அதான் நீ வந்ததும் சொல்றேன். பையன் ரொம்ப நல்ல பையன்மா. குடும்பமும் நமக்கு தெரிஞ்ச குடும்பம். எந்த டென்ஷனும் இல்லாம உன்னை கல்யாணம் பண்ணிக் கொடுத்திடலாம்.''

''மாப்பிள்ளையும் பனிரெண்டு வரைக்கும் படிச்சிருக்காராம். சொந்தத் தொழில் வேற. வீடுகடை எல்லாமே சொந்தமா இருக்குதாம். எங்களுக்கு ரொம்ப சந்தோஷம் ரோஜாம்மா. உனக்கு... உனக்கு சம்மதம் தானேம்மா''

தயக்கமாய்க் கேட்ட தாயையும் உற்சாகமாய் பேசிய தந்தையையும் மாறி மாறி பார்த்தாள்.

இவர்களது சந்தோஷத்தை விட புதிதாய் கிடைக்கும் வேலை தனக்கு பெரிய சந்தோஷத்தைத்தந்துவிடாது என்று தோன்றியது. அதோடு இது அம்மாவின்




வெகு நாளைய எதிர்பார்ப்பு . பிரார்த்தனை இதை ஏன் நிராகரித்து இவர்களது மனதை நோகடிக்க வேண்டும்? நடக்கட்டும். பெற்றவர்களின் விருப்பம் நிறைவேறட்டும். புன்னகையோடு தலையசைத்து சம்மதித்தாள் ரோஜா.

## 3

யாரோடு யாரோ யார்
சேருவாரோ விதி போடும்
பாதை மாறாது நினைவாகி
வந்து கனவாகிப் போனால்தளிர்
போன்ற பெண்மை தாளாது!

மகளைத் தானே முன்னின்று அலங்கரித்தாள் தேவகி. முதன் முதலாக பட்டுப்புடவை கட்டும்போது மஞ்சள் நிறம்தான் கட்டணும். அப்பத்தான் வாழ்நாள் முழுக்க மங்களம் தங்கும்' என்றவாறு மஞ்சள் நிற பட்டுடுத்தி தலைநிறைய பூச்சூடினாள்.

அட்டிகை, ஆரம், ரெட்டைவடச் சங்கிலி கைகளுக்கு வளையல் காதுகளில் கல் பதித்த ஜிமிக்கி என நகைகளைப் பூட்ட, முகம் சுணங்கினாள் ரோஜா.

''ம்மா! என்னம்மா இது?''

''எது?''

''சும்மா பெண்பார்க்கத் தானே வர்றாங்க? அதுக்கு எதுக்கு இவ்ளோ அலங்காரம்? கழுத்து நிறைய நகைய அள்ளிப்போட்டா நல்ல இருக்கானும்மா''

''ஏய்! எதையும் கழற்றிடாதே. உனக்க இருபத்தி அஞ்சு சவரன் போடறதா சொல்லியிருக்கோம். இதையெல்லாம் பார்த்தால் அவங்களுக்கு நம்பிக்கை வரும்''

''என்ன?''

''ஆமாண்டா. அவங்க பெரிய இடம். நாம நகையை பாக்கி இல்லாம போடுவோமா என்னவோன்னு ஒரு சந்தேகம் வந்திடக்கூடாதில்ல?''

''ஏம்மா! நம்ம மேல இந்த அளவுகூட நம்பிக்கை இல்லாதவங்ககிட்ட ஏம்மா நாம சம்பந்தம் வெச்சிக்கணும்?'' ஜன்னல் திரைகளை மாற்றிக் கொண்டிருந்த சங்கர் கேட்க, பதறினாள் தேவகி.

''டேய்! அவளே இப்பத்தான் மனசு மாறி சம்மதிச்சிருக்கா.நீ வேற ஏதாவது பேசி காரியத்தைக் கெடுத்திடாதே.''

''இல்லம்மா! நான்...

''வேண்டாம்ப்பா. நிச்சயம் முடியுற வரைக்கும் நீ ஒன்னுமே பேச வேண்டாம். உன் வேலையை மட்டும் பார்த்தால் போதும்.''

''சங்கர் சொல்றதுல என்னம்மா தப்பு?''

''ரோஜாம்மா. நீங்க குழந்தைங்கடா. இதெல்லாம் பெரியவங்க விஷயம். கல்யாணம்னா கொடுக்கல் வாங்கல் சகஜம்தான்! இது எங்க கவலை. நீ எதைப்பத்தியும் கவலைப்படாம கல்யாணப் பொண்ணாட்டாம் சிரிச்ச முகமா இருக்கணும். அப்பத்தான் வர்ற மாப்பிள்ளைக்கு உன்னை உடனே பிடிக்கும்'' என்ற தந்தையை ஏறிட்டாள்.

''அப்பா''

''என்னடா?''

''கல்யாண செலவுக்கு என்னப்பா பண்ணப் போறீங்க?''

''எல்லாம் சேர்த்து வெச்சிருக்கேம்மா. யார்கிட்டேயும் கையேந்த வேண்டியதில்லை. நீ ஏன் இதையெல்லாம் நினைச்சி பயப்படுற?''

''இல்லப்பா! நகை விலை விஷம் மாதிரி ஏறிப்போச்சே''

''ரோஜாம்மா! உனக்குத்தான் எல்லா நகையும் செய்தாச்சே. இனி கல்யாணச் செலவு மட்டும்தானே. எல்லாம் அப்பா பார்த்துப்பேன். நீ கவலைப்படாதேம்மா.''

''ச..சரிப்பா'' என்றபோதும் தமக்கையின் முகம் தெளிவற்றே இருக்க, சங்கர் அவளது கன்னத்தைத் தட்டினான்.

''அக்கா! பீ ஹேப்பி! அப்படியே பணம் தேவைப்பட்டாலும் தாம்பரத்தில இடம் இருக்கே. அதை வித்து ஜமாய்ச்சுடலாம்.''

அவசரமாய்த் தடுத்தாள் ரோஜா. ''டேய்! விளையாட்டுக்குக் கூட அப்படியெல்லாம் சொல்லாதே. அது அப்பா கஷ்டப்பட்டு சம்பாதிச்ச முதல் சொத்து. எக்காரணம் கொண்டும் அதை விற்கக்கூடாது. உன் படிப்பு முடிஞ்சதும் உனக்கு அதுலதான் அப்பா பார்மஸி கட்டித் தர்றதா சொல்லியிருக்காங்க. அது வெறும் இடம் இல்ல சங்கர். உன்னோட பியூச்சர். நம்ம குடும்பத்தோட ஆதாரம். நினைவு வெச்சிக்க.''

''அடடா! நல்ல காரியம் நடக்கும் போது ஏன் தேவையில்லாத பேச்செல்லாம் பேசறீங்க? சங்கர்!அவங்க வர்ற நேரமாச்சு. நீ ஹால்ல எல்லாம் கரெக்டா இருக்கான்னு பாரு. என்னங்க! நீங்க வேட்டி சட்டை மாத்திட்டு வாசல்ல போய் நில்லுங்க.

வர்றவங்கள வாசல்ல நின்னு வரவேத்தாத்தான் மரியாதை. நான் போய் பாலைக் காய்ச்சிடுறேன். வந்ததும் காபி கலக்க வசதியா இருக்கும். ரோஜாம்மா! கண்ணுக்கு மை இட்டுக்கோ. இன்னும் கொஞ்சம் பவுடர் போட்டுக்க. பேன் பக்கத்திலே உட்காரு. வியர்த்தால் பவுடர் கரைஞ்சிடும்'' ஆளுக்கொரு உத்தரவை இட்டுவிட்டு அடுக்களைக்குள் தேவகி நுழைந்த சில நொடிகளில் வாசல்ல கார்கள் வந்து நிற்கும் ஓசை கேட்டது. அக்கம் பக்கம் உள்ள ஒரு சிலர் வரத்துவங்கினர்.

ரோஜாவிற்குள் படபடப்பு கூடியது. என்னதான் பெரியவர்களுக்காக சம்மதம் என்று தலையசைத்தாலும் இப்போது பயமும் பதட்டமும் ஆட்கொண்டது. மஞ்சள் நீரூற்றி பூமாலை சூட்டி அலங்கரித்து கூட்டிச்செல்லும் பலிகடாவைப்



போல் தானும் இருப்பதை உணர்ந்தாள்.

பதட்டத்தைக் குறைப்பதற்காக மெல்ல எழுந்து கதவோரமாய் நின்று ஹாலிற்கு பார்வையைச் செலுத்தியவளின் முகம் மாறியது. ஹாலின் நின்ற தந்தையோடு சேர்ந்து தம்பியின் முகமும் கூட மாறியிருந்தது. பெண் பார்த்து நிச்சியிக்க வந்ததற்கான அறிகுறியே அங்கு தென்படவில்லை.

வந்திருந்தது மொத்தம் நான்கே பேர். நால்வருமே பெரியவர்கள். இரு பெண்கள். இரு ஆண்கள் என நால்வருமே வீசினகையும் வெறும்கையுமாய் வந்து நின்றனர். சம்பிரதாயத்திற்குக் கூட ஒரு முழம்பூவோ ஒரு சீப்பு வாழைப்பழமோ கொண்டு வந்திருக்கவில்லை.

தேவகியும் அடுக்களையை விட்டு அவசரமாய் வெளியேறி, வந்தவர்களை வரவேற்று அமரச்சொன்னவள் சற்று முகம்மாறி குழப்பமாய் கணவனை ஏறிட்டாள். சங்கர் ஏதோ பேசவாயெடுக்க, அவனை கைப்பற்றி அமர்த்திவிட்டு, வரவழைத்துக் கொண்ட சிரிப்போடு கேட்டார் சுந்தரமூர்த்தி.

கையில் வரைந்து கரன்ஸியை முதன் முதலில் வெளியிட்ட நாடு இங்கிலாந்து 1694-ஆம் ஆண்டு இங்கிலாந்து வங்கி இதனை வெளியிட்டது.



''என்ன தேசிகா! நாற்பது பேர் வருவோம்னு சொன்ன? நீங்க மட்டும் வந்து இருக்கீங்க? மாப்பிள்ள கூட வரலையே!''

கண்ணாடி அணிந்திருந்த தேசிகன் பெரிதாய் புன்னகைத்தார்.

''சுந்தரம்! முதலே அப்படித்தான் பிளான் பண்ணியிருந்தோம். இப்ப எல்லாமே மாறிப்போச்சுப்பா'' அவர் வேடிக்கையாகவே சொல்லி அனைவரின் முகமும் மாறியது. ரோஜா கூர்ந்து கவனிக்க, சுந்தரமூர்த்தி அவஸ்தையாய் புன்னகைத்தார்.

''என்னப்பா சொல்ற?''

''பயப்படாதே சுந்தரம். நான் பாட்டுக்கு இன்னிக்கு நல்ல முகூர்த்தநாளன்று இன்னிக்கே நிச்சயம் பண்ணிடலாம்னு முடிவு பண்ணிட்டேன். ஆனா என் பையன் போன் பண்ணி இன்னிக்கு வேண்டாம்ப்பா. இன்னொரு நாள் வச்சிக்கலாம்னு சொல்லிட்டான்''

''ஏன்? ஏன்? ஏன்?'' பெற்றவர்களோடு சேர்ந்து சங்கரும் பதறினான். ஒரே கேள்வியை மூவரும் கேட்க, தேசிகனின் மனைவி ஆர்ப்பாட்டமாய் வாய் திறந்தாள்.

''அது ஒண்ணுமில்லை தேவகி. எம்புள்ளைக்கு எப்பவுமே வியாபாரம்தான் முக்கியம். இன்னிக்கு முகூர்த்த நாள் இல்லியா? ரெண்டு நாளா சீர்வரிசை சாமான் வாங்க கடையில கூட்டம் அலைமோதுதாம். அதான் வியாபாரத்தை விட்டுட்டு வர முடியாது. ஞாயிற்றுக்கிழமை லீவு. அப்போ நிச்சயத்தை வெச்சிக்கலாம்னு போன் பண்ணிச் சொன்னான்.

அதான் நாங்க மட்டும் வந்து பேசவேண்டியதை பேசி விஷயத்தைச் சொல்லிட்டுப் போலாம்னு வந்தோம். இது என் தங்கச்சி. இவர் இவ மாப்பிள்ளை'' என வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்த, சங்கர் கடுப்பாய்க் கேட்டான்.

''ஏன்? கடையப் பார்த்துக்க வேற ஆள் எதுவும் இல்லையா?''

''ரெண்டு பையனுங்கவேலைக்கு இருக்காணுங்கப்பா. ஆனா அவனுங்கள நம்பி கடைய விட்டுட்டு வரமுடியுமா? எம்புள்ள எதிலயும் உஷாரா முன் ஜாக்கிரதையா இருப்பான்'' என்றார். தேசிகன் பெருமையாய்.

''போன் எப்பப் பண்ணினார்?''

''மதியம்தான் பண்ணினான்''

''முன்ஜாக்கிரதையா இருக்கிறவர் நேற்றே போன் பண்ணி சொல்லக்கூடாதா? நீங்க வருவீங்கன்னு அம்பது பேருக்கு ஹோட்டல்ல சாப்பாடு ஸ்வீட் எல்லாம் ஆர்டர் பண்ணியிருக்கோம். இன்னும் பத்து நிமிஷத்துல வந்திடும். அதையெல்லாம் என்ன ஸார் பண்றது?'' சங்கர் சற்று கோபமாகவே கேட்க, தேவகி வேகமாய் வந்து மகனைப் பற்றிக் கொண்டாள்.

''டேய்! அமைதியா இரு. அப்பா பேசட்டும்''

''சும்மா இருங்கம்மா. நாம இவ்வளவு ஏற்பாடு பண்ணிவெச்சிருக்கோம். இவங்க இவ்வளவு கூலா வந்து சொல்லிட்டு இருக்காங்க.''

''தம்பி! பொண்ணு வீட்டுக்காரன் இவ்வளவு கோபப்படராரப்பா'' தேசிகன் அமர்த்தலாய்ச் சொல்ல, சீறினான் சங்கர்.

''ஏன்? பொண்ணுவீட்டுக்காரன்னா எங்க மானரோஷத்தையெல்லாம் உங்ககிட்ட அடமானம் வெச்சிடணுமா?''

''சுந்தரம்! என்னப்பா உம்புள்ள இப்படிப் பேசறான்?''

''சங்கர்! உள்ளே போ''

''அப்பா''

''உள்ளே போன்னு சொன்னேன்'' தந்தையின் குரல் உயர, தன் கையைப் பற்றியிருந்த தாயின் கையை கோபமாய் உதறிவிட்டு உள்ளே சென்றான். சுந்தரமூர்த்தி சிரித்துக்கொண்டே திரும்பினார்.

''இந்தக் காலத்து பிள்ளைகளுக்கு என்ன இருக்கோ இல்லையோ மூக்குமேல கோபம் மட்டும் வந்திடுது. சின்னப்பய... தேசிகா! நீ சொல்லுப்பா.. இனி என்ன செய்யலாம்?''

''வர்ற ஞாயிற்றுக்கிழமை காலையில வெச்சிக்கலாமா?''

''ஞாயிற்றுக்கிழமை அஷ்டமி'' தேவகி மெல்ல குரல் கொடுத்தாள்.



''எங்களுக்கு இந்த அஷ்டமி நவமி மேல எல்லாம் நம்பிக்கை கிடையாது''.

''ஆனா எங்களுக்கு இருக்கு. ஒத்தப்பொண்ணை வெச்சிருக்கோம். அத நாள் கிழமை பார்த்து நல்லபடியா கல்யாணம் பண்ணிக்கொடுக்க வேண்டியது எங்க கடமை இல்லியா?'' தேவகி அதே மெல்லிய குரலில் சொல்ல, மாப்பிள்ளையின் தாயார் முகம் சுருங்கியது. தேசிகன் சட்டென சமாளித்தார்.

''அதுக்கென்ன? அடுத்த ஞாயிற்றுக்கிழமை வெச்சிக்கலாம்''

''சரி''

''ம்... அப்புறம்... நாம பேசவேண்டியத இன்னிக்கே பேசிடலாம். கூட்டத்தை கூட்டி வெச்சிட்டு வரவு செலவு பேசவேண்டாம். என்ன சொல்றே'' தேசிகன் பூடகமாய் பேச, உள்ளே இருப்புக்கொள்ளாமல் நின்ற சங்கர், கைப்பற்றி தடுத்த, தமக்கையை விலக்கிவிட்டு வெளியே வந்தான். கூடியிருந்தவர்கள் சுவாரஸ்மாய் நிமிர்ந்தனர்.

சுந்தரமூர்த்தி மௌனமாய் ஒருமுறை மனைவியைப் பார்த்து விட்டு நண்பனிடம் திரும்பினார்.

''என்ன பேசணும்? சொல்லுப்பா''

''உம்பொண்ணுக்கு என்ன போடப்போறே?''

''அதான் அன்னைக்கே சொன்னேனேப்பா. இருபத்தி ஐந்து சவரன் நகை போட்டு, கையில அம்பதாயிரம் ரொக்கம் தந்திடுவேன். சீர்வரிசை எல்லாம் குறைவில்லாம செய்திடுறேன்.''

''என்ன? இருபத்தி அஞ்சு பவுனா?''

''ஆமம்மா! அப்படித்தான் பேசிகிட்டோம் நாங்க. சொல்லு தேசிகா'' நண்பரை துணைக்கழைத்தார் சுந்தரமூர்த்தி.

''அவர் என்ன சொல்றது. நாட்டு நடப்பு தெரியாதவர். அவர் பேசியதையெல்லாம் கணக்குல எடுத்துக்காதீங்க. பொண்ணுக்கு எழுபத்தஞ்சு பவுன் போட்டுடுங்க. கையில் ரெண்டு லட்சம் ரொக்கம் தந்திடணும்!


அப்புறம் சீர் செய்யிறேன்னு வெறும் தட்டு, செம்பு, பாய், தலையணையோட அனுப்பிடாதீங்க. மரக்கட்டில், மெத்தை, ஆறடி பீரோ உங்க மக துணிமணியை வெக்கத்தான். அப்புறம் அவ துணிகளைத் துவைக்க மிஷின் வாங்கிக் கொடுத்திருங்க. மத்த ஜாமானெல்லாம் உங்க இஷ்டம்போல வாங்கிக் கொடுங்க.

கல்யாணத்தை பெரிய மண்டபத்தில சும்மா ஜாம்ஜாம்னு பண்ணிடலாம். பதினாறு வகை கூட்டோடு சாப்பாடு. இனிப்பு மட்டும் அஞ்சு வகை வெக்கணும். இதுல எது குறைஞ்சாலும் எனக்கு கோபம் வந்திடும். செய்யுறத ஒரு குறையில்லாம சிறப்பா செய்திடணும். அதுதான் என் கொள்கை'' என்றவனைப் பார்த்து உறைந்து போனார் சுந்தரமூர்த்தி. ரோஜா விக்கித்துப்போய்விட, சங்கர் கொதித்துப் போனான்.

மனைவி சொன்னதற்கெல்லாம் ஒப்புதலாய் தேசிகன் தலையை ஆட்டிக்கொண்டிருக்க தேவகி, தர்மசங்கடமாய் கணவனை ஏறிட்டாள்.

கரணம், திதி, நட்சத்திரம்,
யோகம், வாரம் ஆகிய
ஐந்து அங்கங்களைக்
கொண்டதாலேயே பஞ்சாங்கம்
என்று பெயர் ஏற்பட்டது.

—டி.பச்சமுத்து, கிருஷ்ணகிரி.



''என்னங்க இதெல்லாம்?''

''தேசிகா! நான் ஏற்கனவே என்னால...''

''எங்கிட்ட பேசுங்க. அவருக்கு காரசாரமா பேசத்தெரியாது. வெறும் ஏமாளி'' என்றாள் ராஜேஸ்வரி.

''இதோ பாருங்கம்மா. நான் என்னால இவ்வளவு தான் முடியும்னு சொல்லித்தான் எம்பொண்ணு ஜாதகத்தையே கொடுத்தேன்''.

''இது நல்லாயிருக்கே. கடையில சம்பளம் வாங்குறவன் கூட முப்பது நாற்பது பவுன் கேட்கிறான். என்மகன் கடைக்கே ஓனர். அவனுக்கு நூறு பவுன் போடுறேன்னு கேட்டு ஆள் வந்திட்டு இருக்கு. இவர்தான் என் சிநேகிதன் பொண்ணைக் கேட்டுட்டேன்னு சொல்லி இங்க கூட்டிட்டு வந்தாரு. நீங்க என்ன இருபத்தி அஞ்சுன்றீங்க?'' தேசிகனின் மனைவி குரலை உயர்த்த, அவளது தங்கை அதை ஆமோதித்தாள்.

''அதானே! எங்க கார்த்திக்கு எழுபது எண்பதுன்னு வந்த வரனைக்கூட வேண்டாம்ன்னு சொல்லிட்டோம். அக்கா! இது ரொம்ப லோ கிளாஸா இருக்கும் போலிருக்கே'' கழுத்தில் வெறும் மஞ்சள் கயிறும் கைகளில் மஞ்சள் நிற கவரிங் வளையலோடு இருந்த அந்த அம்மாள் சொல்ல, சங்கர் சீறி எழுந்தான்.

''யாரும்மா லோ கிளாஸ்? கழுத்திலே காதுல குன்றிமணி தங்கம் போடக்கூட வக்கில்லாத நீ எம்பேமிலிய லோகிளாஸ்ன்றியா? எழுந்திரும்மா நீ'' சங்கரின் கோபத்தில் மற்றவர்கள் மிரள, தேசிகனின் மனைவி வாயிலடித்துக்கொண்டாள்.

''ஐயோ ஐயோ! இது என்ன அநியாயம்? வீடு தேடி வந்தவங்கள இப்படி மட்டுமரியாதையில்லாம பேசுறானே! என்னங்க! என்னமோ என் சிநேகிதன் குடும்பம் மாதிரி ஊர்ல உலகத்தில உண்டான்னு சொன்னீங்க... இதுதான் இவங்க குடும்பலட்சணமா?

எழுந்திருங்க.... வாங்க போகலாம்.... என் தங்கச்சிக்கு மரியாதை இல்லாத வீட்ல நமக்கென்ன சம்பந்தம் வேண்டிக்கிடக்கு. ம்... வாங்க''' என்றதும் நால்வரும் எழுந்து புறப்பட, சுந்தரமூர்த்தி பதறி தடுத்தார்.



''மன்னிச்சிடுங்கம்மா. சின்னப்பய ஏதோ தெரியாம பேசிட்டான். அவன் பேசினதை மனசில வெச்சுக்காதீங்க.''

''என்னது? சின்னப்பயலா? எவ்வளவு பெரிய பேச்செல்லாம் பேசுகிறான். இவ்ன சின்னப்பயலா?''

''இதோ பாரும்மா...'' என கை நீட்டிய சங்கரை அதட்டினார் சுந்தரமூர்த்தி. ''சங்கர்! இதென்ன புதுப்பழக்கம்? பெரியவங்களை மரியாதையில்லாம கைநீட்டிப் பேசறது? முதல்ல அவங்ககிட்ட மன்னிப்புக்கேள்''

''அப்பா! நான் ஏன் மன்னிப்பு கேட்கணும்?''

''கேளுடா! உங்க அக்கா வாழப்போற வீடுடா அது. உன் கோபத்தையோ ரோஷத்தையோ காட்டுற இடமில்லை. மன்னிப்பு கேளு''.

''முடியாதுப்பா. நான் என்ன தப்பு பண்ணினேன்?''

''சங்கர்''

''அப்பா! நமக்கு இந்த சம்பந்தம் வேண்டாம். இதுகளைப் பார்த்தாலே கொள்ளையடிக்கிற கும்பல் மாதிரி தெரியுது. இதுங்க வீட்ல அக்கா நிச்சயமா சந்தோஷமா வாழமாட்டா''

''ஏய்! என்னப்பா இப்படி மரியாதையில்லாம பேசுற. நாங்க பையனை பெத்தவங்க. எங்களுக்கு இந்த இடம் இல்லன்னா ஆயிரம் இடம்''.

''பிச்சைக்காரனுக்குக் கூடத்தான் ஆயிரம் வீட்ல சாப்பாடு கிடைக்கும். நீங்களும் பிச்சைகேட்டுத்தானே வந்திருக்கீங்க?''

''சங்கர்! வாயை மூடுடா''

''சும்மா இருங்கப்பா. வந்தானுங்களே! எதுக்கு வந்தாங்க? பெண்ணைப் பார்க்கத்தான வந்தாங்க? யாராவது அக்காவை பார்த்தாங்களா? தங்களோட வியாபாரத்தைத் தானே பேசுறாங்க''

''சங்கர்''

''அப்பா! உடனே இந்தக்கும்பலை வெளியே விரட்டுங்க. என் அக்காவுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கணும்னு எனக்குத்தெரியும். போகச் சொல்லுங்கப்பா இவங்களை...'' என்ற மகனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் சுந்தரமூர்த்தி.

சங்கர் பொறிகலங்கிப்போய்விட, ரோஜாவும் தேவகியும் அதிர்ந்துபோனார்கள். பெரியவர்கள் இருக்கையில் இப்படி பேசக் கூடாது என உள்ளே இருந்த ரோஜா, பதறி ஓடிவந்து தம்பியை பற்றிக்கொண்டாள்.

''அப்பா! என்ன காரியம் பண்றீங்க?''

''இவனை வெளியே போகச்சொல்லும்மா. வீடு தேடி வந்த சம்பந்திகளை இப்படியா பேசுறது? போடா வெளியே'' என்ற தந்தையை திகைப்பாய் பார்த்தான் சங்கர்.

''அ...ப்...பா''

''கூப்பிடாதே. என்னை அப்படிக் கூப்பிடாதே''

''அப்பா?''

''எம்பிள்ளையா இருந்தா எம்பேச்சை மதிக்காம இஷ்டத்துக்கு பேசுவியா? போடா வெளியே''

''அப்பா! இவங்க நல்லவங்களாத் தெரியலப்பா. பணத்...''

''வாயை மூடுடா.. உன்னை வெளியே தானே போகச்சொன்னேன்? எம்பொண்ணுக்கு எது செய்யணும் எப்படிச் செய்யணும் எனக்குத் தெரியும். நீ வெளியே போ''

சங்கருக்கு மீண்டும் கோபம் எழுந்தது. ''போறேன்! இனிமே இங்கே எனக்கென்ன வேலை? ஆனா ஒன்னு! இந்தக் கொள்ளைக் கூட்டத்தில, எங்க அக்காவைக் கொடுக்கிறதுக்குப் பதிலா... அம்மா! நீங்களே இவளை நம்ம வீட்ல இருக்கிற கிணத்திலே பிடிச்சித் தள்ளிடுங்க.

இந்த ஓநாய்ங்க கூட்டத்தில மாட்டிட்டு அவ சாகுறதவிட உங்க கையால சாகட்டும். விடுக்கா என்னை'' வேகமாய் கையை உதறிவிட்டு விருவிருவென வெளியேறினான். அக்கம் பக்கத்தவர் கலைந்து செல்ல, தேவகியும், ரோஜாவும் அவன் பின்னால் ஓட... சுந்தரமூர்த்தி மனதைக் கல்லாக்கிக் கொண்டு வந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, அமரவைத்தார். மானம் மரியாதை என்று குதித்தவர்கள் சட்டென அவற்றையெல்லாம் மறந்து தங்களது பேரத்தைத் துவங்க, சுந்தரமூர்த்திக்கு தலை சுற்றத் துவங்கியது. லேசாய் நெஞ்சை பிசையத்துவங்கியது.

## ▸▸▸ 4 ◂◂◂

துள்ளித் திரிந்த பெண் ஒன்று
துயில் கொண்டதேன் இன்று
தொடர்ந்து பேசும் கிளி ஒன்று
பேச மறந்ததேன் இன்று!

இரவு வெகு நேரம் சென்ற பிறகே, சோர்வாய் வீடு திரும்பினார் சுந்தரமூர்த்தி. கதவு திறந்தே இருக்க, கதவருகே சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த மனைவியைக் கண்டதும் மனம் கலங்கியது. கணவனைக் கண்டதும் அவசரமாய் எழுந்தாள் தேவகி.

''இவ்வளவு நேரமா எங்கே போயிட்டீங்க?''

''இந்தப் பயலைத்தான் தேடி அலைஞ்சேன் தேவகி. எங்கே போனான்னே தெரியல. அவன் பிரெண்ட்டுக்கிட்ட எல்லாம் விசாரிச்சுப் பார்த்திட்டேன் ஒருத்தருக்கும் தெரியல''

''அவன் அப்பவே வந்திட்டான்'' என்றவாறே கதவை பூட்டிவிட்டு வெளி விளக்குகளை அணைத்தாள் தேவகி. உற்சாகமாய் மனைவியை பின் தொடர்ந்தார். ''என்ன சொல்ற தேவகி? சங்கர் வந்திட்டானா?''



''ம்...ம்...''

''எப்போ?''

''இப்போ கொஞ்சம் முன்னாடிதான்''

''அவனே வந்திட்டானா?''

''எப்படி வருவான்? சும்மாவே ரோசக்காரன். இதில அத்தனை பேர் முன்னால வளர்ந்த பிள்ளையை கைநீட்டி அடிச்சா?''

''தப்பு தான். அவனும் அப்படி பேசலாமா?''

''அவன் பேசினதுல என்னங்க தப்பு? உங்க நண்பரும் அவங்க வீட்டுக்கார அம்மாவும் பேசினது மட்டும் சரியா?''

''நானே அதை எதிர்பார்க்கல தேவகி. எங்கோபத்தை காட்ட முடியாம நின்னப்பதான் இவன் இப்படிப் பேசி என் ஆத்திரத்தை அதிகமாக்கிட்டான். சரி அதை விடு... புள்ள சாப்பிட்டானா? என்ன பண்றான்?

''யாருமே சாப்பிடல. ரெண்டு பேரும் தூங்கியாச்சு''

''என்ன? சாப்பிடாம தூங்கிட்டாங்களா? வெறும் வயத்தோட படுக்கக்கூடாது தேவகி. நீ சாப்பாடு எடுத்துவை. புள்ளைங்கள எழுப்பிட்டு...''

''வேணாங்க''

''என்ன?''

''அவங்க தூங்கட்டும். சாயந்திரத்தில இருந்து ரோஜா அழுதிட்டே இருந்தா. தம்பியத் தேடி அலைஞ்சி, இப்பத்தான் கையோட கூட்டிட்டு வந்தா. ரெண்டு பேரும் சாப்பாடு வேணாம்ட்டு படுத்து தூங்கியாச்சி. நிம்மதியாத் தூங்கட்டும். எழுப்ப வேண்டாம்.''

''இல்ல தேவகி. நான் போய்...''

''நீங்க வந்து சாப்பிடுங்க''

சோர்வாய் மறுத்தார் ''வேண்டாம் தேவகி. எனக்கும் பசியில்ல'' என்றவாறே அறைக்குள் நுழைந்து அப்படியே படுத்துவிட்டார். அறை முழுக்க மாலையில் ஹோட்டலில் இருந்து வந்த சாப்பாடு மீந்துகிடந்தது. வந்தவர்கள் சாப்பிட்டதைத் தவிர மீதம் அப்படியே கிடந்தது.

மனம் கனக்க எழுந்து அமர்ந்தார். தேவகி உள்ளே நுழைந்ததும் நிமிர்ந்தார்

''தேவகி! சாப்பாடெல்லாம் வீணாப்போச்சே. பக்கத்தில உள்ளங்களுக்காகவது கொடுத்திருக்கலாமே''

''ஏங்க! நான் என் புள்ளையைத் தேடுவேனா? வந்து கேட்கிறவங்களுக்கு பதில் சொல்வேனா? இந்த சாப்பாட்டைத் தூக்கிட்டு அலைவேனா?''

''ம்ச்! அதுவும் சரிதான். முழுசா பதினைஞ்சாயிரம் வீணாப்போச்சு'' பெருமூச்சு விட்ட வரை தயக்கமாய் ஏறிட்டவாறே அவர் அருகே அமர்ந்தாள் தேவகி.

''என்னங்க! எனக்கென்னவோ சங்கர் சொல்றதுதான் சரின்னு தோணுது''

''என்ன?''

''நமக்கு இந்த இடம் வேணாங்க''

''தேவகி! நீ என்ன சொல்ற? நீயும் சம்மதிச்சதாலதானே அவங்களை வீட்டுக்கே வரச்சொன்னேன்''

''சம்மதிச்சேன் தான். ஆனா தேசிகன் பேசினது வேற மாதிரி இருந்தது. இப்போ வேற மாதிரி பேசுறாங்களே''

''தப்பு நம்மமேலதான் தேவகி''

''என்னங்க சொல்றீங்க?''

''தேசிகன் பேசினதை மட்டும் நம்பி நாம எல்லாமுடிவையும் எடுத்தது பெரியதப்பு. நிச்சயத்தார்த்தம், திருமணத்தேதின்னு எல்லாத்தையும் முடிவு பண்ணிட்டு இப்ப வேண்டாம்னு எப்படிச் சொல்ல முடியும்? நம்ம இக்கட்டான நிலமையைத்தெரிஞ்சுக்கிட்டுத்தான் அவங்க அதிகமா எதிர்பார்க்கிறாங்க.

நாம முதல்லயே நிதானமா பேசியிருக்கணும். பார்த்த முதல் இடமே அமைஞ்சுபோன சந்தோஷத்தில மத்த எதைப்பத்தியும் அலசி ஆராயாம தேதி குறிச்சது பெரியதப்பு. இதுக்குத்தான் கல்யாண விஷயத்தில அவசரப்படக்கூடாது. ஆற அமர யோசிச்சு முடிவெடுக்கணும்னு பெரியவங்க சொல்வாங்க.''

''இப்ப என்னங்க பண்றது?''

''இனிமே என்ன பண்ண முடியும்? அவங்க கேட்கிறத போட முயற்சி பண்ண வேண்டியதுதான். வேறவழி?''

''என்னங்க இப்படிச் சொல்றீங்க?''

''வேற என்னப் பண்ணச்சொல்றே? சொந்தபந்தம் எல்லார்க்கிட்டேயும் கல்யாணம் முடிவானதைச் சொல்லியாச்சி. எல்லாரும் தூரத்தில இருந்ததால நிச்சயத்துக்கு வரல்ல. ஆனா அக்கம்பக்கம் உள்ள எல்லோரும் வந்தாங்கள்ல. இங்க நடந்த எல்லாக்கூத்தையும் பார்த்தாங்களே. இப்பவே தெரு முழுக்க பரவியிருக்கும்.

இனி ஊர் முழுக்க பரவிடும். இப்பப் போய் இந்த இடம் வேண்டாம்னு சொன்னா ஆளுக்கு ஒரு காரணம் சொல்வாங்களே. எதுக்காக கல்யாணம் நின்னு போச்சுன்னு. துருவி எடுப்பாங்களே. அவங்களுக்கெல்லாம் நாம என்ன பதில் சொல்லப் போறோம்?'' இடப்பக்க நெஞ்சை நீவி விட்டுக்கொண்டே கண்களை மூடினார் சுந்தரமூர்த்தி. தேவகி பதறிப்போனாள்.

''என்னங்க! என்ன பண்ணுது?''

''எனக்கு பயமா இருக்கு தேவகி''

''ஏங்க?''

''ஒத்தைப் பொண்ணையே கட்டிக்கொடுக்க முடியாம இப்படி மூச்சுத் திணறுதே. ரெண்டு மூணு பொண்ணு வெச்சிருக்கிற தகப்பன் எல்லாம் எப்படி தவிப்பான்?''

''என்னங்க! முதல்ல படுங்க. எல்லாம் பிறகு பேசிக்கலாம்.'' என கணவரை





ஜவஹர்லால் நேரு சிறுவனாக இருந்த போதும், வருடந்தோறும் அவரது பிறந்தநாளில் அதிகாலையில் அவரை பெரிய தராசில் அமர வைத்து நிறுத்துவது வழக்கம். தராசின் மறுபக்கம் எடைக் கற்களுக்கு பதிலாக கோதுமை அல்லது அரிசி மூட்டைகளை வைப்பார்கள் பின்னர் அவற்றை ஏழைகளுக்கு கொடுப்பார்கள்.

*-ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி.*

படுக்கவைத்தாள்.

''தேவகி!''

''என்னங்க''

''மாப்பிள்ளையை பார்த்து பேசிப் பார்க்கட்டுமா?''

''ஐயோ! அதுக்கு வேற அந்தப் பொம்பள எதுவும் சொல்லப்போறா. வேண்டாங்க.''

''வேற என்ன பண்ணலாம்? பேசாம அந்த அம்மாகிட்ட போய் கேட்டுப்பார்க்கலாமா?''

''அதுக்கு என்னங்க அவசியம்? நாம ஏன் அவங்க கால்ல போய் விழணும்? எனக்கு அவங்க பேசின தோரணையே பிடிக்கல. பேசாம வேற இடம் பார்த்துக்கங்கன்னு சொல்லிடலாம். தலைக்கு வந்தது தலைப்பாகையோட போச்சின்னு விட்டுடலாம்.''

''அதெப்படி விடமுடியும் தேவகி. இப்பதானே சொன்னேன் ஊரு உலகம் கதைகட்டி பேசிச் சிரிக்குமே. பொண்ணுகிட்டே... பொண்ணுகிட்டே என்னவோ குறை போலிருக்கு. அதான் வேண்டாம்னு சொல்லிட்டாங்கன்னு கூட கூசாம பேசுவாங்களே''.

''ஊரைப் பத்தி ஏன் கவலைப்படுறீங்க? பேசுறவங்க வந்து மிச்ச நகையைப் போடுவாங்களா? நமக்கு இந்த இடம் வேணாங்க. பேசுறவங்க என்னவேனா பேசிட்டுப் போகட்டும். நாம நம்ம கிட்ட உள்ள வசதிக்கு ஏத்தமாதிரி வேற வரன் பார்த்துக்கலாம்.''

''எந்த வரனைப் பார்த்தாலும் பணம் வேணும் தேவகி. பையனைப் பெத்த எல்லாருமே பொண்ணு வீட்ல எவ்வளவு கறக்க முடியுமோ அவ்வளவு கறக்கத்தான் பார்ப்பாங்க. தேசிகன் நல்லவன்தான். அவன் குடும்பமும் நல்ல குடும்பம்தான்.

இப்பக் கொஞ்சம் பணம் சேர்ந்ததும் வசதியான இடமாத்தேடுறாங்க போலிருக்கு. நம்ம பொண்ணை வசதியான இடத்தில கட்டிக்கொடுத்தா அவ சந்தோஷமா வாழ்வால்ல. அதுக்காகவாது நாம சமாளிச்சுத்தான் ஆகணும் தேவகி.

எதுக்கும் விடிஞ்சதும் நான் ஒரு தரம் தேசிகன் வீட்டுக்கு போய்ப் பார்த்திட்டு வந்திடுறேன். கூடக்குறையப் பேசி இதே இடத்தை முடிக்கப் பார்ப்போம். இது நம்ம கௌரவப் பிரச்சினை மட்டுமல்ல தேவகி! பொண்ணோட வாழ்க்கைப் பிரச்சனையும்''

''அதுக்காகத்தாங்க நான் பயப்படுறேன்''

''நீ ஏன் வீணாப் பயப்படுற. அவங்க கேட்டதைக் கொடுத்திட்டா நம்ம பொண்ணு அமோகமா வாழப்போறா. நீ கண்டதையும் நினைச்சி பயப்படாத. புள்ளைகளுக்கும் தைரியத்தைச் சொல்லிவை. பேசின இடத்தையே முடிக்கப்பார்ப்போம். மத்தது மேல இருக்கிறவன் நினைச்சபடி நடக்கட்டும்'' ஒரு நீண்ட பெருமூச்சோடு சுந்தரமூர்த்தி கண்களை மூடிக்கொள்ள, உறக்கம் வராமல் தவித்தாள் தேவகி.

வேலைக்குப் போகிறேன் என்ற பெண்ணை வற்புறுத்தி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தோமே? இந்தத் திருமணம் நல்லபடியாய் நடக்குமா? பயமும் சந்தேகமும் தேவகியை ஆட்கொண்டது.

ஆனால் தன் அறையில் படுத்திருந்த ரோஜாவின் மனமோவேறுவிதமாய் சிந்தித்துக் கொண்டிருந்தது. மாலையில் நடந்த நிகழ்வுகளை தனக்குள் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தாள். வந்திருந்த பெரியவர்கள் ஒரு சம்பிரதாயத்திற்குக் கூட தன்னைப் பார்க்கவில்லை.

அவர்களது கவனம் முழுக்க வரதட்சணை பேரத்தில்தான் இருந்தது. பேச்சில் கூட எத்தனை ஆணவம்? எங்கிருந்து வருகிறது. இந்த ஆணவம்? ஆண்பிள்ளைகளை பெற்றுவிட்டோம் என்பதிலா? தனக்கும் கூடத்தான் தம்பி இருக்கிறான். அவனுக்கும் பெண்பார்ப்பார்கள்.

தன் அம்மாவோ அப்பாவோ இப்படி பேரம் பேசுவார்களா? மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை தங்கள் மகனுக்கு அருமையான ஒரு மனைவி. இந்த வீட்டிற்கு குணமுள்ள ஒரு மருமகள். இப்படித்தான் தேர்வுசெய்வார்கள்.

அந்த அம்மாள் ஏன் அப்படி தேர்வு செய்யவில்லை. பணமும் நகையும் கிடைத்தால் போதுமா? இந்த அம்மாளே இப்படி இருந்தால் இவள் பெற்ற பிள்ளை எப்படி இருப்பான்? அதுவும் வியாபார நேரம் என்று நிச்சயத்தார்த்தத்தையே கடைசி நேரத்தில் மாற்றி வைக்கச் சொன்னவன்.

நிச்சயமாய் தாயின் பிரதிபலிப்பாய்த் தான் இருப்பான். இவர்களை நம்பி அந்த வீட்டிற்கு வாழப்போவதா? அதற்கு சங்கர் சொன்னபடி நம் வீட்டுக் கிணற்றில் குதித்துவிடலாம் தான்.

தன்னை விடச் சிறியவன் என்றாலும் தம்பி புத்திச்சாலிதான். அதனால் தான் வந்தவர்களை சரியாக கணித்துவிட்டான். தைரியமாய் பேசவும் செய்தான். அவன் கேட்ட கேள்விக்கு வேறு யாராய் இருந்தாலும் எழுந்து இடத்தை காலி செய்திருப்பர்.



இவர்கள் என்னவென்றால் இருந்து வயிறுமுட்டத் தின்று, அதிலும் சில குறைகளைக் கூறிவிட்டு போயிருக்கிறார்கள். என்ன குடும்பம் இது? இந்த அப்பா ஏன் இப்படிக் கெஞ்ச வேண்டும்? இவன் இல்லையென்றால் வேறு மாப்பிள்ளை என்று விடவேண்டியதுதானே?

எப்படிப் பார்த்தாலும் இனி தன்னால் அந்தக்குடும்பத்தில் போய் வாழ இயலாது. விடிந்ததும் முதல் வேலையாய் அப்பாவிடம் தன் முடிவைச் சொல்லிவிடவேண்டும். ஒரு கூலிக்காரனை மாப்பிள்ளையாய் கொண்டு வந்தாலும் சரி.

வருகிறவன் தன்னையும் தன் குணத்தையும் பார்ப்பவனாய் இருக்க வேண்டும் என்று உறுதியாய்ச் சொல்லிவிடவேண்டும். இனியாவது தன் திருமண விஷயத்தில் அவசரப்பட வேண்டாம் என்று அம்மமவிடம் சொல்ல வேண்டும்.

இவர்கள் மாப்பிள்ளையைத் தேடி கண்டுபிடிப்பதற்குள் தன் மனதிருப்திக்காக கொஞ்சநாட்களாவது ஏதேனும் ஒரு வேலையில் சேர்ந்துவிடவேண்டும். ம்... இதுதான் சரியான முடிவு. இனி அம்மாவிடம் அதிக எதிர்ப்பு இருக்காது. முதலில் ஒரு வேலையை தேடிக்கொள்ள வேண்டும்.

வேலை என்றதும் காலையில் பார்த்தவனின் நினைவு வந்தது. அட அவன் கூட ஏதோ வேலை தருவதாகச் சொன்னானே? விஸிட்டிங் கார்டு கூட கொடுத்தானே? சங்கர் எங்கே அதை வாங்கி அப்பாவிடம் கொடுத்து போன் செய்யச் சொல்ல வேண்டும்.

உடனடியாய் வேலை கிடைத்தால் பரவாயில்லை. இன்று நடந்த நிகழ்வுகளை மறப்பதற்காக வேணும் வேலையில் சேர்ந்துதான் ஆக வேண்டும். இந்தக் கூத்திலும் சில நன்மைகள் இருக்கத்தான் செய்கிறது. நல்லவேளை. அந்த மாப்பிள்ளை வரவில்லை. அதனால் எந்தப் பிரச்சனையும் இல்லை.

இதற்கு மேலும் அவர்கள் நம் வீட்டுப்பக்கம் வந்தால் சங்கரை விட்டே விரட்டியடிக்கவேண்டும். இல்லையென்றால் தானே அடித்துவிரட்டிவிடவேண்டும்.' பற்களைக் கடித்தாவறே தனக்குள் முடிவெடுத்துக்கொண்டு, படுத்து உறங்க முயற்சித்தாள் ரோஜா.

## 5

நினைப்பதெல்லாம நடந்துவிட்டால்

தெய்வம் ஏதுமில்லை நடந்ததையே

நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை!

பொழுது நன்றாய் விடிந்திருக்க, கண்விழித்தார் சுந்தரமூர்த்தி. அடுக்களையில் ஏதோ தாளிக்கும் மணம் வந்து நாசியைத் தீண்டியது. வெகு நேரமாய்த் தூங்கிவிட்டோமோ என்றவாறே சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தவர் பதறி எழுந்தார்.

மணி எட்டைத் தொட்டிருந்தது. வேகமாக எழுந்து அறையை விட்டு

வெளியேற, ஹாலில் இருந்த பெரிய நிலைக்கண்ணாடி முன் நின்று தலைசீவிக்கொண்டிருந்தான் சங்கர். தயக்கமாய் மகனை நெருங்கினார்.

''ச... சங்கரா''

''ம்?''

''சீக்கிரமா எழுந்திட்டியாப்பா?''

''ம்''

''காபி குடிச்சிட்டியா?''

''ம்... ம்...''

''காலேஜிக்கா கிளம்புற?''

''ம்'' கேட்ட கேள்விக்களுக்கெல்லாம் திரும்பியும் பாராமல் மகன் பதிலளிக்க, மெதுவாய் அவனது தோளைத் தொட்டார். தலை சீவிக்கொண்டிருந்த சங்கரின் கைகள் தங்கள் பணியை நிறுத்தியது. கண்ணாடியில் தெரிந்த தந்தையின் உருவத்தைப் பார்த்தான்.

வெகுவாய் சோர்ந்திருந்தார் அப்பா. சட்டென மனம் இளகிவிட, சீப்பை ஸ்டாண்டில் வைத்துவிட்டு தந்தையின் புறமாய்த் திரும்பினான்.

''என்னப்பா?'' மகனின் கனிவான குரலில் உடைந்துபோனார் சுந்தரமூர்த்தி. கண்கள் கலங்க. மகனின் கன்னத்தை வருடினார்.

''என்னை மன்னிச்சிருய்யா! அப்பா ஏதோ தெரியாம...''

''அப்பா! என்னப்பா நீங்க போய் எங்கிட்ட மன்னிப்பு கேட்கிட்டு?''



* நாம் தூங்கும் போது எல்லா உறுப்புகளும் ஏக காலத்தில் ஓய்வெடுப்பது இல்லை. முதலில் கண்கள், பிறகு வாசனையை அறியும் உறுப்புகள், பின் சுவை மொட்டுகள் அதன்பின் காது, கடைசியில் தோல் இவ்வரிசையில் தான் உறுப்புகள் ஓய்வெடுக்கத் தொடங்குகின்றன.

-ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி.

''நான் செய்தது பெரியதப்புய்யா. தோளுக்கு மேல வளர்ந்த புள்ளையை கைநீட்டி அடிச்சிட்டேனே. அதுவும் மத்தவங்க முன்னால...''

''விடுங்கப்பா. நீங்க என் அப்பா. உங்களுக்கு என்னை அடிக்கிற உரிமை இருக்குப்பா'' என்ற மகனை உணர்ச்சிப்பெருக்கோடு அனைத்துக்கொண்டார்.

''எப்படிப்பட்ட பிள்ளையை பெற்றிருக்கிறேன்? என்னுடைய ஆத்திரத்தால் அவசரத்தால் என் பிள்ளை மனம் காயம்பட்டு போயிருப்பானே? தமக்கையன் மீதுள்ள அன்பால்தானே கோபம் கொண்டு பேசினான். அவன் பேசியதில் தவறும் இல்லையே. நான் ஏன் கை நீட்டினேன்?



கிச்சனில் இருந்து வெளியே வந்த தாயும் மகளும் புன்னகைத்தனர்.

''ம்.. நல்லாயிருக்கு. காலேஜிக்கு கிளம்பிவிட்டு இருக்கிற புள்ளைய கட்டிகிட்டு பாசமழைய பொழியுறீங்களாக்கும்?'' தேவகி கேலியாய்க் கேட்க. கண்களைத் துடைத்தவாறே விலகினார் சுந்தரமூர்த்தி.

''தேவகி! புள்ள எங்கிட்ட பேசிட்டான் தெரியுமா?''

''அவன் நம்ம புள்ளங்க''

''ம்... தங்கமான புள்ளையும் கூட''

''அப்பா! போதும்ப்பா. சும்மாவே அவனைக் கையில பிடிக்க முடியாது. இதுல அவனுக்கு புகழாரம் வேற சூட்டினீங்க... அவன் தரையில நடக்கமாட்டான்'' என்றவாறே ரோஜா தம்பியின் முதுகில் தட்ட, சிரித்தான் சங்கர்.

''உனக்கு ஏன் அக்கா பொறாமை? அப்பா! போனாப் போகுது. உங்க ராஜகுமாரியையும் கொஞ்சம் பாராட்டிடுங்க. இல்லேன்னா... அல்சர் இல்லாமல் அக்காவுக்கு வயிறு எரியும்''

''ரெண்டு புள்ளைகளுமே தங்கக் கட்டிங்கதான். போதுமா?''

''போதும் போதும். மொதல்ல பல்தேய்ச்சி முகம் அலம்பிட்டு வாங்க. காபி தர்றேன். அவன் டிபன் பண்ணிட்டு கிளம்பட்டும்.''

''ம்... சரி சரி... முதல்ல புள்ளய கவனிச்சி அனுப்பு. நான் குளிச்சிட்டு வந்துடுறேன். நிறைய வேலை இருக்கு'' என்றவாறே அவர் பின்கட்டிற்குச் செல்ல, தம்பியை ஏறிட்டாள் ரோஜா.

''சங்கர்! நேற்று அந்த ஆள் ஒரு வேலைக்குச்சொன்னாரே. விஸிட்டிங் கார்டு கூட கொடுத்தாரே?''

''யாருக்கா?''

''அதாண்டா! ஜூஸ்கார்னர்ல பார்த்தோமே''

''ஓ! அவரா? ஆமா அவருக்கென்ன இப்போ?''

''அவருக்கு ஒன்னுமில்லடா... ஏதோ வேலை இருக்குன்னு சொன்னாரே. அதான் அவர்கிட்ட, போன் பண்ணிக்கேட்கலாம்னு...''

தேவகி நெற்றியைச் சுருக்கினாள். ''என்ன? யாரைப் பத்திப் பேசுறீங்க?''

''அது வேற ஒண்ணுமில்லம்மா'' என்றவாறே ரோஜா நடந்ததை விவரிக்க முகம் மாறினாள் தேவகி.

''அப்போ நீ நேற்று போன இடத்தில வேலை கிடைக்கலியா? அது என்ன ஆச்சு?''

''ஹூம். இப்பவாவது அதைப்பத்திக் கேட்கணும்னு தோணிச்சே''

''நேத்து ஏதோ நினைப்புல கேட்காம விட்டுட்டேன்''

''ஏதோ நினைப்புல இல்லம்மா. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நினைப்புல'' சங்கர் திருத்தினான்.

''சரிடா! அப்பக் கேட்கல. இப்பக் கேட்கிறேன்னில்ல. என்ன ஆச்சு?''

"அது... அந்த வேலை நமக்கு சரிப்படாதும்மா"

"ஏன்டி?"

"அது... ரொம்ப தூரம்மா... தினமும் போயிட்டு வர முடியாது. போகவர ரெண்டு மூணுமணி நேரமாகுது. அதான் வேண்டாம்னு விட்டுட்டேன்."

"ரொம்ப நல்லகாரியம் பண்ணின? பேசாம வீட்ல இருந்து சமையல் செய்ய கத்துக்க. எல்லாவேலையும் செய்து பழகினாத்தான் நாளைக்கு போற இடத்தில..."

"அம்மா! அந்த வேலைதான் வேண்டாம்னு சொன்னேன். இங்கே பக்கத்திலேயே ஏதாவது ஒரு வேலைய தேடிக்கப்போறேன்"

"ஏய்! என்ன சொல்ற? அப்பா உனக்கு மாப்பிள்ளை பார்த்...."

"அம்மா! தாராளமாப் பாருங்க. நிதானமாப் பாருங்க... எனக்குன்னு பிறந்தவனை நீங்க தேடிக்கண்டுபிடிங்க. அதுவரைக்கும் நான் ஏதாவது ஒரு வேலைக்குப் போறேன். அப்பாவுக்கு கொஞ்சம் ஹெல்பா இருக்கும்".

"நீ வேலைக்குப் போய்த்தான் சம்பாதிக்கணும்னு இல்லம்மா."

"அம்மா! தயவு செய்து என்னை வேலைக்கு போக விடுங்கம்மா. அப்பா ஒரு பக்கம் மாப்பிள்ளை தேடட்டும். எல்லாம் கூடி வந்தா பார்த்துக்கலாம். அதுமட்டுமில்லம்மா நான் வேலைக்கு போகுறதுக்கும் காரணம் இருக்கு"

"என்ன?"

"ஆமாம்மா! வரவர மாப்பிள்ளைங்களோட விலையெல்லாம் ரொம்ப ஏறிப்போச்சே. அதுக்காகவாது நாலுகாசு சேர்க்கணுமே."

"அக்கா! நீ ஒன்னும் கவலைப்படாதேக்கா.. இன்னும் ஒரே வருஷம் பொறுத்துக்க. என் படிப்பு முடியட்டும். நான் சம்பாதிச்சு உனக்கு ஒரு ராஜகுமாரனை தேடிப்பிடிச்சிக் கொண்டு வாரேன்க்கா."

"ராஜகுமாரனை தேடிப்பிடிக்கிறதெல்லாம் இருக்கட்டும். முதலே படிப்பைக் கவனி. சீக்கிரமா டிபன் சாப்பிட்டுக் கிளம்பு. இப்ப காலேஜ் பஸ் வந்திடும்."

"ஓ.கே. அம்மா! ரெண்டே ரெண்டு இட்லிபோதும்"

"சங்கர்! அந்த ஆள் தந்த விஸிட்டிங் கார்டை எங்கேடா?"

"நேத்து போட்ட சர்ட்ல இருக்கும்க்கா. பார்த்து எடுத்துக்க. எனக்கு டயமாகுது.

"நீ சாப்பிடு... நான் பார்த்துக்கிறேன்" என்றவாறே தம்பியின் அறைக்குள் நுழைந்தாள். சுவரில் மாட்டியிருந்த ஹெங்கரில் மூன்று சட்டைகள் தொங்கிக் கொண்டிருக்க. அவற்றில் முந்தைய தினம் சங்கர் அணிந்திருந்த பிங்க் கலர் சட்டையின் பைக்குள் கையை விட்டு துலாவினாள்.

கையில் எதுவோ தட்டுப்பட வெளியே எடுத்தாள். நீல நிறத்தில் சின்னதாய் மினுமினுப்பாய் அந்த அட்டை இருந்தது. கௌதமன். மானேஜிங் டைரக்டர். ஹோட்டல் மாயா என்றிருக்க, கீழே வரிசையில் மூன்று தொலைபேசி எண்கள் கொடுக்கப்பட்டிருந்தது.



ரோஜாவின் விழிகள் வியப்பால் விரிந்தது. ஹோட்டல் மாயாவா? இது ஏற்கனவே தாம்பரத்தில் இயங்கிவரும். ஹோட்டலாயிற்றே. அவன் புதிதாகக் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னான்? குழப்பமாய் அந்த அட்டையோடு வெளியே வர, குளித்து முடித்து விட்டு எதிரே வந்தார் சுந்தர மூர்த்தி.

"என்னம்மா அட்டை இது?"

"இது... ஒரு விஸிட்டிங் கார்டுப்பா. இதுல உள்ள நம்பருக்கு ஒரு போன் பண்ணனும்" என தயக்கமாய் தந்தையிடம் நீட்டினாள்.

"யாருக்கும்மா போன் பண்ணனும்?" என்றவர் அந்த முகவரி அட்டையைப் பார்த்ததும் லேசாய் மலர்ந்தார். "அட! இது நமக்குத் தெரிஞ்ச இடம் தான். இது எப்படிம்மா உங்கிட்ட வந்தது?"

"அப்பா! இவங்க புதுசா ஏதோ ஹோட்டல் கட்டுறாங்களாம்."

"ஆமா! வேளச்சேரி ரோட்ல. நான்தானே அந்த இடத்தை முடிச்சிக் கொடுத்தேன்."

"அந்த ஹோட்டலுக்கு வேலைக்கு ஆள் எடுக்கிறாங்களாம். நேத்து சங்கர்கிட்ட இவர் இந்த அட்டையைக் கொடுத்து வேலைக்கு வரதா இருந்தா போன் பண்ணச் சொன்னாருப்பா"

மகனை வழியனுப்பிவிட்டு வந்த தேவகி சலித்துக் கொண்டாள்.

"எவனோ ஒருத்தன் சொன்னான்னா உடனே நம்பிடுறதா? காலம் கெட்டுக் கிடக்கு. வழியில பார்த்தவன் கூப்பிட்டான்னு அவன்கிட்டயே வேலைக்கு போகப்போறியா?"

"தேவகி! இடம் நல்ல இடம்தான். நமக்குத் தெரிஞ்ச இடம் தான். மாயக்கண்ணன் இருக்காரில்ல. அவர் ஹோட்டல் தான் இது. இப்ப அது பிரச்சனை இல்லை. நீ ஏன்டாம்மா வேலைக்கு போகனும்.?"

"என்னப்பா இது? லைக்குப் போய் சம்பாதிக்கணும்றது என்னோட கனவுப்பா. நிறைய கத்துக்கணும். வாழ்க்கையில சந்திக்கிற போராட்டங்களை எதிர்கொள்ள மனசுக்கு தைரியம் வேணும். வெளியே வேலைக்குப் போனாத்தானேப்பா இதெல்லாம் கிடைக்கும்"

"அது சரிம்மா. ஆனா கல்யாணப் பேச்சு நடந்திட்டு இருக்கும் போது..."

"என்னம்மா சொல்ற?"

"அவங்க கேட்குற அளவு நம்மால கொடுக்கமுடியுமா? அதோட எனக்கு இந்த இடம் பிடிக்கலப்பா. மனுஷங்களை மதிக்கத் தெரியாத, பணத்தை மட்டுமே பார்க்கிற பேமிலியில போய் என்னால நிம்மதியா வாழ முடியாதுப்பா."

"அம்மாடி! அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்திடக்கூடாதும்மா. இது கல்யாண விஷயம். பொறுமையாத்தான் கையாளணும்"

"அப்பா"

"நான்... நான் போயி தேசிகன் வீட்ல பேசிட்டு வரலாம்னு இருக்கேன்" சுந்தர மூர்த்தி தயக்கமாய்ச் சொல்ல. அதிர்ந்தாள் ரோஜா.

"என்ன? என்னப்பா சொல்றீங்க?"

''ஆமம்மா! கொஞ்சம் குறைஞ்சி பேசிப்பார்ப்போம்''

''அப்பா நீங்க என்ன வியாபாரமா பண்ணப் போறீங்க? அவங்க கிட்டபோய் கெஞ்சி கூத்தாடி பேரம்பேச வேண்டிய அவசியம் என்னப்பா?''

''நீ சின்னப் பொர்ண்ணும்மா. உனக்கு விபரம்பாத்தாது. இது கல்யாண விஷயம்மா. எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு முடிவு பண்ணக்கூடாது ராஜாத்தி''

''அப்பா! அதுக்காக நாம போய் அவங்ககிட்ட கெஞ்சனுமா?''

''வேற வழியில்லம்மா. பொண்ணை பெத்திருக்கேனே. கொஞ்சம் பணிஞ்சிதான் போகணும்.''

'' அதுக்கென்னப்பா அவசியம்? அவங்க வந்து பொண்ணைப் பார்க்கல்ல. நாம யாரும் மாப்பிள்ளைய பார்க்கல்லை. வெறும் பேச்சுவார்த்தையோடத்தானே இருந்தது. போனாப் போகட்டும் விடுங்கப்பா.''

''இல்லம்மா! அப்படியெல்லாம்... விடமுடியாது'' தவிப்பாய் அவர்சொல்ல, முகம் மாறினர் இருவரும்.

''ஏம்ப்பா! ஏன் விட முடியாது''

''அது...அது வந்து...''

''சொல்லுங்கப்பா''

''ஏங்க தயங்குறீங்க? எதுவா இருந்தாலும் சொல்லுங்க. ஏன் விட முடியாது. நேற்று நான் கூட விட்டுடலாம்னு சொன்னேன். நீங்கதான் கேட்கல. ஆனா இன்னிக்கு உங்க முகமே சரியில்லையே. எங்களுக்குத் தெரியாம ஏதேனும் காரியம் பண்றீங்களா?'' கணவனின் முகத்தை கூர்ந்து கவனித்தவாறே தேவகி கேட்க. சுந்தரமூர்த்தி பதில் சொல்ல முடியாமல் தடுமாறினார்.

''அப்பா! ஏன் பதறுறீங்க? எதுவா இருந்தாலும் சொல்லுங்க''

''இல்லம்மா! இந்தக் கல்யாணம் எப்படியும் நல்லபடியா முடியணும். நான் போய் சம்பந்தியம்மாகிட்ட பேசுறேன்''

''அப்பா! நாங்க கேட்டதுக்கு முதல்ல பதிலைச் சொல்லுங்க''

''தேவகி! நீ... கொஞ்சம் தண்ணி எடுத்தாயேன்'' என்றவாறே நாற்காலியில் அமர்ந்தார். இருதயம் லேசாய் வலிக்கதுவங்கியது. கணவனின் நிலைகண்டு கலங்கிப் போனவளாய் கையில் நீரோடு வந்தாள் அதை வாங்கி கடகடவென குடித்துமுடித்தார். பெரிதாய் மூச்சு வாங்கியது. தந்தையின் அருகே அமர்ந்தாள் ரோஜா.

''என்னப்பா! உடம்புக்கு எதுவும் பண்ணுதா?''

''இ.. இல்லம்மா''

''ஏம்ப்பா இப்படி பதறுறீங்க? எங்களுக்குத் தெரியாம ஏதாவது தப்பு பண்ணிட்டீங்களா?''

''தப்பா? சேச்சே! அப்படி எதுவும் பண்ணுவேனா?''

''பிறகேப்பா இப்படி உடம்பெல்லாம் உதறுது? ஏன் இந்த சம்பந்தத்த விட முடியாதுன்னு சொல்றீங்க?''



''அது.. அதையெல்லாம் அப்படி சுலபமா உதற முடியாதும்மா''

''அதான் ஏன்?''

''ஏன்னா? ஏற்கனவே எல்லாம் பேசி முடிச்சாச்சு. இனி மாத்தமுடியாது''

''என்னங்க சொல்றீங்க?''

''தே..வ..கி! அது வந்து...''

''சொல்லுங்க''

''அன்னிக்கு ஜாதகம் பொருத்தம் பார்க்க நானும் தேசிகனும் போனோமில்ல?''

''ஆமா''

''ஒன்பது பொருத்தமும் கூடி இருந்ததால... நம்ம நண்பனோட குடும்பத்தில நம்ம பொண்ணைக் கொடுக்கப்போறோம்ற சந்தோஷத்தில.. உன்னைக் கூட கேட்காம...''

''கேட்காம?''

''வந்து...ரொம்ப நல்லநாளா இருக்குன்னு தேசிகன் சொன்னான்னு அவன் வீட்ல வெச்சு... ஆயிரத்து ஒரு ரூபாயை வெத்தில பாக்குல வெச்சு... ஒப்பு தாம்பூலம் மாத்திகிட்டோம்.'' சுந்தரமூர்த்தி தட்டு தடுமாறி சொல்லிமுடிக்க, ரோஜாவும் தேவகியும் பலமாய் அதிர்ந்தனர்.

எ..ன்ன?'' ரோஜா கல்லாய் சமைந்துவிட தேவகி ஆவேசமாய் கணவனின் தோளைப் பற்றினாள்.

''என்ன காரியம் பண்ணி வெச்சிருக்கீங்க? எங்கிட்ட கூட ஒரு வார்த்தை சொல்லாம... எப்படி இருக்க முடிஞ்சது உங்களால?''

''மன்னிச்சிடு தேவகி! இப்படியெல்லாம் நடக்கும்னு எனக்குத் தெரியாது. நல்ல சம்பந்தம் கைதவறிப் போயிடக்கூடாதுன்னு அவங்களும்வற்புறுத்தினதால அப்படிப் பண்ணிட்டேன். ஆனா... இப்பா ஏன் இப்படி மாத்தி பேசுறாங்கன்னு

''என்ன டாக்டர்...
என் ஞாபக மறதிக்கு மருந்து
எழுதித் தருவதா சொல்லிட்டு
ரொம்ப நேரமா எதையோ யோசனை
பண்ணிட்டு இருக்கீங்க...?''
''என்ன மருந்துன்னு மறந்து
போச்சு...!''
-ஆர்.ராஜ்குமார், திருச்சி.



தெரியல..''

''ஏன் பேசமாட்டாங்க? ஒப்புத் தாம்பூலம் மாத்தியாச்சி இனி நம்ம இழுத்த இழுப்புப்கெல்லாம் அவங்க ஆடித்தான் ஆகணும்னுதானே அந்த அம்மா வாய்கூசாம எழுபத்தி அஞ்சு சவரன் கேட்குது.''

''நான் பேசிப்பார்க்கிறேன் தேவகி. நான் சொன்னா தேசிகன் கேட்பான்.''

''அவர் பேச்சை அவர் மனைவியே கேட்கலையே. அவர்கிட்ட பேசி என்ன பிரயோஜனம்? நீங்க அவசரப்பட்டு செய்த காரியத்தால என்னென்ன பாடு படப்போறோமோ?''

''ஒன்னும் ஆகாது. குறிச்சநாள்ல எம்பொண்ணு கல்யாணம் நடக்கும்''

''எப்படி நடக்கும்? ஒரு சவரன் இருபத்தாஞ்சாயிரம் ஆகுது. இன்னும் அம்பது சவரன் எப்படி வாங்குவீங்க? அந்த அம்மா சொன்ன சீர்சாமான் எல்லாம் மறந்து போச்சா? இதுக்கெல்லாம் எத்தனை லட்சம் ஆகும் தெரியுமா? என்ன பண்ணப்போறீங்க?

ஆற அமர யோசிக்காம இப்படி பண்ணிட்டு வந்து நிற்கிறீங்களே. நான் என்ன பண்ணுவேன்? அவ்வளவு பணத்துக்கு எங்கே போறது?'' தேவகி அரற்றிக் கொண்டிருக்க, ரோஜாவிடம் துளியும் அசைவில்லை.

சுந்தரமூர்த்தியின் மனமும் பதைத்துக் கொண்டுதான் இருந்தது. பணத்துக்கு என்னச் செய்யப்போகிறேன்? எப்படி சமாளிக்க போகிறேன்? மனம் பலமாய் சிந்திக்க சட்டென அந்த எண்ணம் தோன்றியது.தன்னிடம் இருக்கும் ஒரே சொத்து. அதை விற்று விட்டால், என்ன? எண்ணம் தோன்றிய உடன் மனபாரம் விலகிவிட, உற்சாகமாய் எழுந்தார்.

## ▸▸▸ 6 ◂◂◂

*பூக்களின் கருவறையில்*
*பிறந்தவள் நீயா - பூவுக்கு*
*ஒரு பூஜை செய்ய*
*பிறந்தவன் நானில்லையா?*

மாடம்பாக்கம் ஈஸ்வரன் கோவில் பிரதோஷ கூட்டத்தல் நிரம்பி வழிய கல்மண்டபத்தில் கண்மூடி அமர்ந்திருந்தாள் ரோஜா. பரவி விரிந்திருந்த மண்டபம் முழுக்க ஆங்காங்கே ஒரு சில பெரியோர்கள் அமர்ந்து தியானித்துக் கொண்டிருந்தனர்.

கோவிலின் ஒலிப்பெருக்கியில் இருந்து ஓம் நமச்சிவாய மந்திரம் ஒலித்துக் கொண்டிருக்க, கோவிலுக்கே உரிய தெய்வீக மணம் கமழ்ந்து மனதை மயக்க, கண்களைத் திறக்க மனமின்றி அப்படியே அமர்ந்திருந்தாள்.

அது வரை மனதை அழுத்திக் கொண்டிருந்த பாரங்கள் மெல்ல, மெல்ல விலக, தனக்கு வெகு அருகே பரிச்சயமற்ற குரல் கேட்க, திடுக்கென கண் விழித்தாள்.



''ஹாய் ராஜகுமாரி'' என்றவாறு புன்னகையோடு அவள் அருகே வந்து அமர்ந்தான் கௌதம். இவனா? லேசான திடுக்கிடலோடு சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு அவசரமாய் எழுந்து கொண்டாள்.

''ஏன் எழுந்திட்டீங்க? ப்ளீஸ் ஸிட்டவுன்.''

''இல்ல.நான் வீட்டுக்கு போகணும்?''

''ஏன்? தியானம் பண்ணி முடிச்சாச்சா?''

''ம்?''

''உட்காருங்க ராஜகுமாரி. உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்''

''என்ன? எங்கிட்டயா? எங்கிட்ட என்னபேசணும்?'' வெடுக்கென கேட்டவளை உற்றுப்பார்த்தான்.

''என்னாச்சு ராஜகுமாரி? ஏன் இவ்ளோ டென்ஷன்? முதல்ல உட்காருங்க ரிலாக்ஸா பேசலாம்.''

''ஹலோ மிஸ்டர்! யார் நீங்க? நான் ஏன் உங்ககூட பேசணும்?''

''அடடா! நான் யாருன்னே தெரியலையா? உங்களுக்கு இவ்வளவு ஞாபக மறதியா? உங்களை நம்பி எப்படி எங்கள் ஹோட்டலில் மேலாளர் பணியைக் கொடுப்பது?'' விளையாட்டாகவே அவன் சொல்ல புருவம் உயர்த்தினாள்.

''என்ன?''

''அதாங்க மானேஜர் வேலை. நீங்க அந்தவேலைக்குத் தானே ட்ரை பண்ணீங்க? அதான் அதே வேலையை இந்த ராஜகுமாரிக்கு கொடுத்திடலாம்னு டிஸைட் பண்ணிட்டேன்.''

''வெயிட்! அதென்ன வார்த்தைக்கு வார்த்தை ராஜகுமாரின்றீங்க?''

''ஏன்? அதானே உங்க பேரு?''

மீண்டும் திகைத்தாள். ''என்ன?''

''ரோஜா என்கிற ராஜகுமாரி தானே?''

''இது...இது எப்படி உங்களுக்கு?''

''சர்டிபிக்கேட்ல பார்த்தேன். ராஜகுமாரி நைஸ் நேம்தானே? பிறகேன் இந்த ரோஜா என்கிற இடைச்செருகல்?''

''அது என் பாட்டி பேரு''

''எது? ரோஜாவா?''

''ம்ச்! ராஜகுமாரின்றது''

''ஓ! பாட்டி பெயரை வெச்சாங்களா? நல்ல பேர் தானே?''

''பேர் நல்ல பேர்தான். ஆனா பிரெண்ட்ஸ் எல்லாம் கேலி பண்ணுவாங்க. அதனால அந்த பேர் எனக்கு பிடிக்காது''

''இதுல கேலி பண்ண என்ன இருக்கு?''

''எந்த நபருக்கு ராஜகுமாரின்னு கேட்பாங்க?''

"சொல்ல வேண்டியது தானே? இந்த தேசத்துக்கே ராஜகுமாரின்னு அவனும் இயல்பாகவே சொல்ல, விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள்."




"ப்பா! என்ன ஒரு கண்ணு? இந்தக் கண்ணைப் பார்த்தாலே எந்த நாட்டு இளவரசனும் சாய்ஞ்சிடுவானே?"

"ஹலோ! மிஸ்டர்..."

"நான் கௌதம். பெயர் நினைவில்லையா?"

"அதெல்லாம் இருக்கட்டும். இப்ப எதுக்காக இங்க வந்து பேச்சை வளர்த்திட்டு இருக்கிங்க?"

"அட! வந்த விஷயத்தை விட்டுட்டு ஏதோ பேசிட்டு இருக்கு. உங்களுக்கு விருப்பம்னா போன் பண்ணி சொல்லுங்கன்னா நீங்க என்ன பண்ணியிருக்கணும்? போன் பண்ணணுமா இல்லையா?"

"அது....வந்து.... வேலையில சேர்ற ஐடியா இல்ல."

"ஏன்?"

"அது என்னோட பெர்ஸனல் மேட்டர்".

"ஓ.கே. அதையாவது போன் பண்ணிச் சொல்லியிருக்கலாமில்ல?"

"ஸாரி! உங்க கார்ட்டை எங்கேயோ மிஸ் பண்ணிட்டேன்."

"நம்பிட்டேன்.... ஓ.கே.. பை.. வாய்ப்பு இருந்தால் மீண்டும் சந்திப்போம்" அவன் எழுந்து புறப்படத் தயாராக, ரோஜா லேசாய் பதறினாள்.

"நீங்க தப்பா எடுத்துக்கக்கூடாது கௌதம்."

"எதை?"

"உங்களுக்கு போன் பண்ணிச் சொல்லாததை. நான் சொல்லியிருக்க வேண்டும். வீட்ல கொஞ்சம்..."

"அதான் பெர்ஸனல் என்று விட்டீர்களே. விடுங்கள். ஏதோ இன்று உங்களைப் பார்த்ததால் கேட்டேன். இல்லையென்றால் வேலைகேட்டு வந்தவர்களை மறுத்துக் கொண்டே இருந்திருப்பேன்."

"ஸாரி"

"இட்ஸ் ஓ.கே. உங்கள் தியானத்தைத் தொடருங்கள். இடையில் தொந்தரவு செய்ததற்கு மன்னிக்கவும்" என்றவன் அதற்கு மேல் நில்லாமல் சென்றுவிட,



காரணமே இன்றி ரோஜாவின் மனம் சோர்ந்தது.

எல்லாம் இந்த அப்பாவால் வந்தது. அவசரப்பட்டு யாரையும் கேளாமல் செய்த காரியத்தில் வீட்டில் அனைவரின் நிம்மதியும் பறிபோய்விட்டது. சங்கரிடம் இப்போதைக்கு எதுவும் சொல்ல வேண்டாம் என முடிவெடுத்து அவனிடம் மறைத்தாயிற்று.

'வேலைக்கு போகவேண்டாம் ரோஜாம்மா. நான் எல்லாம் பேசி முடிவெடுத்துவிட்டேன். குறித்த தேதியில் கல்யாணம் நடக்கும்' என்றதோடு சரி. அடிக்கடி வெளியில் போகிறார் வருகிறார். என்ன செய்கிறார் ஏது செய்கிறார் என்று எதுவுமே புரியவில்லை.

தாயோ மகளோ கேட்டாலும் சரியாக பதில் சொல்வதில்லை. எல்லாம் நல்ல விஷயம்தான் என்று மழுப்பிவிடுகிறார். அப்பாவை எண்ணியே மனம் நொந்தவளை தேவகிதான் கோவிலுக்கு அனுப்பிவைத்தாள்.

"இன்னிக்கு பிரதோஷம். சாய்ந்திர பூஜைக்கு போயிட்டு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வந்திடும்மா. பிரச்சனைகளை ஈஸ்வரன்கிட்ட முறையிடுவோம். எது நடந்தாலும் நல்லதா நடக்கும்' என்று மகளைத் தேற்றி அனுப்பியிருந்தாள்.

வந்து பூஜையைப் பார்த்தப்பிறகு மனம் அமைதியாகத்தான் இருந்தது. ஆனால் வந்த இடத்தில் இவனை பார்த்ததும் மனம் இனம்புரியாமல் கலங்குகிறதே? இவனைப் பார்த்தால் மட்டும் ஏன் மனம் படபடக்கிறது. ம் ஹூம். இனி இவனைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மனதை ஒருமுகப்படுத்திக்கொண்டு பூஜைக்கூடையை எடுத்துக் கொண்டு பொடிநடையாய் நடந்து வீட்டை அடைந்தபோது, அப்பா தனது செல்போனில் யாரிடமோ ரகசியமாய், சற்று பதட்டமாய் பேசிக்கொண்டிருந்தார்.

ரோஜாவின் நெற்றி சுருங்கியது. அப்பா யாரிடம் இவ்வளவு ரகசியமாய் பயந்து பயந்து பேசுகிறார்? ஓசையின்றி செருப்பைக் கழற்றி விட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். தந்தையின் குரல் இப்போது தெளிவாக கேட்டது.

"கரெக்ட்டா பத்துமணிக்கு வந்திடுறேன் ஸார். ரிஜிஸ்ட்ரேஷன் முடிந்ததும் மீதிப்பணத்தைத் தந்திடுங்க. இது எம்பொண்ணு கல்யாண விஷயம்."

மறுமுனையில் பேசியது காதில் விழவில்லை. அப்பா பதறி மறுத்தார்.

"சேச்சே! உங்க மேல நம்பிக்கை இல்லாம இல்லங்க. நான் அந்த இடத்தை விக்கிறதே எம்பொண்ணு கல்யாணத்திற்காகத்தான். அதான் பாக்கியில்லாம செட்டில் பண்ணிடுங்கன்னா..."

ரோஜா துல்லியமாய் அதிர்ந்தாள். என்ன? இடத்தை விற்கிறாரா? எந்த இடத்தை? தங்களிடம் உள்ள ஒரே சொத்து இந்த வீடும் தாம்பரத்தில் உள்ள இடமும்தான்? அது சங்கருக்காக ஒதுக்கப்பட்ட இடமாயிற்றே!

"வேண்டாம் ஸார். நீங்க வீட்டுக்கு வரவேண்டாம். நானே வந்து வாங்கிக்கிறேன். நாளைக்கு வரட்டுமா? இன்னிக்கு பொழுதாகிப்போச்சே. சரி ஸார். நான் காலையில ஒன்பது மணிக்கு உங்களை வந்து பார்க்கிறேன்."

''டாக்குமெண்ட் எல்லாம் பக்காவா இருக்கு ஸார். எந்த வில்லங்கமும் வராது.''

''இல்ல ஸார் நாளைக்கு காலையில நான் டாக்குமெண்ட்டோட வந்திடுறேன். வெச்சிருங்க ஸார்'' என்றவாரே போனை வைத்துவிட, சத்தம் வராமல் கதவின் பின்னே நின்று கொண்டாள் ரோஜா.

சுந்தரமூர்த்தி போனை மேஜை மீது வைத்துவிட்டு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஒரு நிம்மதி பெருமூச்சோடு கொடியில் கிடந்த டவலை உருவிக்கொண்டு பின்கட்டிற்குச் செல்ல, மெதுவாய் வெளியே எட்டிப்பார்த்தாள். அப்பா குளியலறைக்குள் நுழைவது தெரிந்தது.

அவசரமாய் யோசித்தாள். இப்போது என்ன செய்வது? அப்பா இந்தக் கல்யாணத்திற்காக சொத்தை விற்கப் போகிறார். கூடாது... இதை விற்கவிடக்கூடாது... சங்கரின் படிப்பு முடிந்தவுடன் தொழில் தொடங்கவிருக்கும் இடம் இது.

இதை தன் ஒருத்திக்காக விற்பதா? அதுவும் அந்த கொள்ளைக் கூட்டத்தினரின் கையில் கொடுப்பதா? இதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. உடனே தடுத்தாக வேண்டும்.... எப்படி?... எப்படி?.

மூளையைக் கசக்கியவளின் கண்ணில் அப்பா சற்றுமுன் பேசிவிட்டு வைத்த செல்போன் தட்டுப்பட்டது. நிலத்தை வாங்குபவரிடம் தானே பேசினார். நாம் பேசி இதைத் தடுத்துவிட்டால் என்ன? இந்த எண்ணம் தோன்றியவுடன் சட்டென அந்த போனை எடுத்தாள்.

வீட்டிற்குள் ஒரு முறை நோட்டம் விட்டாள். தேவகியைக் காணவில்லை. அம்மா இல்லை என்ற தைரியத்தில்தான் அப்பா பேசியிருக்கிறார் என்பது புரிய, மெல்ல குளியலறையை நெருங்கினாள். குளிக்கும் ஓசை கேட்டது.

கோடை, நேரத்தில் அப்பா காலை மாலை இருவேளையும் குளிப்பது வழக்கம். எப்படியும் அப்பா வெளியே வர பத்து நிமிடங்களாகும் அது போதுமே. வேகமாய் ஹாலிற்கு வந்தாள். ஒரு கண்ணை குளியலறை வாசல் மீது வைத்துக்கொண்டு போனை உயிர்ப்பித்தாள்.

டயல் நம்பர்களை எடுத்தாள். கடைசியாக வந்த எண்ணைப் பார்த்தாள். அப்பாதான் பேசியிருந்தார். அதே எண்ணை அழுத்திவிட்டு தவிப்பாய் போனை காதில் வைத்தாள். ரிங் போனது. பதட்டமாய் குளியலறை வாசலைப் பார்த்தாள். மறுமுனையில் ஆண்குரல் கேட்டது. கூடவே வாகனங்களின் இரைச்சலும் காதைத் துளைத்தது.

''சொல்லுங்க சுந்தரமூர்த்தி''

''ஹ.. ஹலோ! நான்... சுந்தரமூர்த்தியோட பொண்ணு பேசுறேன்'' என்றதும் மறுமுனையில் பேசுபவர் அதிர்வது புரிந்தது. மெல்லிய குரலில் தொடர்ந்தாள்.

''ஹலோ! ஸார்! நான் பேசறது கேட்குதா?''

''ம்... சொல்லுங்க''

''ஸார்! எங்க அப்பா உங்ககிட்ட எந்த இடத்தை விற்கப் போறதா



சொன்னாங்களே!''

''ஆமா''

''நீங்கதான் வாங்குகிறீங்களா?''

''யா! எல்லாம் பேசி அட்வான்ஸ் கூட கொடுத்திட்டோம்''.

''எ...ன்ன? அட்வான்ஸ் கொடுத்தாச்சா? எப்போ? எ...வ்வளவு?''

''நேற்றுதான் கொடுத்தோம். பைவ் லாக்ஸ்''

''எ..ன்..ன? பைவ் லாக்ஸா?'' ரோஜாவின் பேச்சு நின்றது.

''ஹலோ! நான் இப்போ ட்ராபிக்ல நிக்கிறேன் என்ன விஷயம்னு கொஞ்சம் சீக்கிரமா சொன்னா பரவாயில்ல'' அவன் சொல்லும்போதே தொடர்ச்சியாய் வாகனங்களின் இரைச்சல் கேட்டது. அதையும் மீறி தெளிவற்ற அந்தக்குரல் காதிற்குள் குறுகுறுத்தது.

இது யார் குரல்? இந்தக்குரலை நான் கேட்டிருக்கிறேன். அதுவும் வெகு சமீபத்தில். எங்கே கேட்டேன்? ரோஜா குழப்பமாய் சிந்திக்க. மறுமுனையில் கோபம் தொனித்தது.

''ஹலோ! போன் பண்ணிட்டு இப்படி சைலண்டா இருந்தா என்ன அர்த்தம்? போனை வெச்சிடவா?''

''ஸார்! ஸார்! போனை வெச்சிடாதீங்க. ஒரு முக்கியமான விஷயம்''

''சரி சொல்லுங்க''

''ஸார்! நீங்க யாரோ எவரோ தெரியாது. ஆனா உங்ககிட்ட தான் இந்த உதவியைக் கேட்டாகணும். ப்ளீஸ் ஸார்! தப்பா எடுத்துக்காதீங்க''

''முதல்ல விஷயத்தைச் சொல்லுங்க''

''ஸார்! நீங்க வாங்கப்போற இடம் எங்களுக்கு ரொம்ப முக்கியம் ஸார். என் அப்பா கஷ்டப்பட்டு வாங்கின இடம் அது. எங்க குடும்பத்துக்கு எங்க எதிர்காலத்துக்கு அது ரொம்ப தேவை ஸார். தயவு செய்து அந்த இடத்தை நீங்க வாங்காதீங்க ஸார்''.

''வ்வாட்''

''ப்ளீஸ் ஸார்! கோபப்படாதீங்க. எங்க அப்பா எங்களுக்குத் தெரியாம உங்ககிட்ட விலைபேசிட்டார். அந்த இடத்த நான் யாருக்கும் விக்கவிடமாட்டேன்னு தெரிஞ்சி... எங்ககிட்ட சொல்லாம...''

''ஹலோ! என்ன விளையாடுறீங்களா? பொண்ணு கல்யாணம் பணம் இல்லாம நிக்கப்போகுதுன்னு உங்க அப்பா சொன்னதால தான் நான் எல்லா ஏற்பாடும் பண்ணி அட்வான்ஸ் கொடுத்தேன். இப்ப வந்து முடியாதுன்னு சொன்னா எப்படி?''

''ஸார் ப்ளீஸ்! உங்க சிரமம் எனக்கும் புரியுது. ஆனா எங்க நிலைமையும் நீங்க யோசிச்சிருப்பாங்க ஸார். இந்த பணத்தை வெச்சு என் கல்யாணத்தை முடிச்சிட்டா என் தம்பியோட நிலைமை என்னவாகும்? இந்த இடம் அவனுக்கு பார்மஸி கட்டுறதுக்காக முடிவு பண்ணிவெச்சிருக்கோம்.

''அதுக்கு நான் என்ன பண்ணமுடியும்?''

''முடியும் ஸார். உங்களால மட்டும்தான் முடியும்?''

''என்ன?''

''எங்க அப்பா குளிச்சிட்டு இருக்காங்க. நீங்க ஒரு பத்து நிமிஷம் கழிச்சி அவருக்கு போன் பண்ணனும்''.

''எதுக்கு?''

''போன் பண்ணி இப்ப எனக்கு இடம் வாங்கிற ஐடியா இல்ல. அதனால அட்வான்ஸ் திருப்பித் தந்திடுங்கன்னு சொல்லணும்?''

''ஓஹோ! அப்புறம்'' எதிர்முனையில் பேசுபவனின் குரலில் ஏளனமோ நக்கலோ இழையோடுவது புரிந்தது. இருந்தும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்தாள்.

''இதை மட்டும் சொன்னா போதும் ஸார். எங்க இடம் எங்களுக்கு பத்திரமாகக் கிடைச்சிடும்''

''ஏன்? வேறயார் கிட்டயும் உங்கப்பா விற்கமாட்டாரா?''

''மாட்டார். விற்கவும் விடமாட்டேன்.''

''சரி உங்க விருப்பம். அப்போ கல்யாணத்திற்கு பணம்?''

''என் கல்யாணத்தை விட, எங்க குடும்ப எதிர்காலம்தான் முக்கியம். எங்க குடும்பத்திலே உள்ளவங்களோட வயித்துல அடிச்சிட்டு எவன்வீட்டுக்கோ பணமும் நகையும் கொட்டிக்கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை.''

''ம்.... சூப்பர்ப். ஓ.கே. இப்ப நான் என்ன பண்ணனும்?''

''அதான் சொன்னேனே ஸார். ஒரு பத்து நிமிஷம் கழிச்சி போன் பண்ணுங்கன்னு...''

''அப்போ என்னோட பணம்?''

''உடனே அப்பாக்கிட்ட நானே கொடுத்து அனுப்பிடுறேன். ஒத்த ரூபா கூட குறையாது. என்னை நம்புங்க ஸார்.''

''ம்... நம்புறேன். எனக்கு ஒரு சின்ன டவுட்''

''என்ன ஸார்?''

''இவ்வளவு புத்திசாலித்தனமா எனக்கு போன் பண்ணி எனக்கே ஆர்டர் போடுறீங்களே! உங்க பேர் என்னான்னு தெரிஞ்சிக்கலாமா? என்றதும் சட்டென உஷாரானாள்.

''பே...ரா...? அது எதுக்கு? சொன்னதை மட்டும் செய்யுங்க. போதும்''

''ஹலோ! இது உங்களுக்கே ரொம்ப ஓவராத் தெரியல. நான் நினைச்சா... '' என அவன் ஏதோத் தொடங்க. அதற்குள் குளியலறைக் கதவு திறக்கும் ஒலியில் பதறி, போனை அணைத்தாள். சட்டென மேஜை மீது வைத்துவிட்டு சோபாவில் வாசலை நோக்கியவாறு திரும்பி அமர்ந்துகொண்டாள்.



எங்க தாத்தா இறந்துப் போனபோது வீட்டுல யாருக்கும் அழுகையே வரல...!

"அப்படியா...?"

"ஆமா... அப்புறம் டிவி'யில் மெகா சீரியல போட்டு அழவைத்தோம்... சாவு வீடு'ன்று தெரிய வேண்டாமா...!"

-ஆர்.ராஜ்குமார், திருச்சி.



''அடடே! ரோஜாம்மா! எப்படாக் கண்ணு வந்தே?'' தலையைத் துவட்டியவாறே வந்தார் சுந்தரமூர்த்தி.

''இப்பத்தாம்பா... ஆமா! அம்மா எங்கே? வீடு திறந்துகிடக்குது... வீட்ல யாரையும் காணோம்?''

''அம்மா உனக்கு ஏதோ ப்ளவுஸ் தைக்கக் கொடுக்கணும்னு போயிருக்காம்மா. சங்கர் கூடத்தான் போனான். இதோ வந்திட்டாங்களே'' அப்பா சொல்லும் போதே வண்டியை நிறுத்திவிட்டு சங்கர் இறங்க, தேவகி கையில் பாலிதீன் கவரோடு உள்ளே வந்தாள்.

''என்னம்மா? கோவில்ல இருந்து எப்ப வந்தே?''

''இப்பத்தாம்மா வந்தேன். இப்படி எங்கிட்ட வந்து உட்காருங்கம்மா. சங்கர் நீயும்தான்.''

''என்னக்கா? என்ன விஷயம்?''

''உட்காரு சொல்றேன். அப்பா வாங்க உட்காருங்க''

''ஏய்! என்னாச்சு உனக்கு? எனக்கு வேலை இருக்கு. நைட்டுக்கு டிபன் பண்ண வேண்டாமா?'' என விலக முயன்ற அன்னையின் கரம் பற்றி தன் அருகே அமர்த்தினாள் ரோஜா, அவளது முகமாற்றத்தை கவனித்தவாறே சங்கரும் சுந்தரமூர்த்தியும் எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்தனர்.

''என்னம்மா விஷயம்?''

''அப்பா! என்னோட கல்யாண விஷயமெல்லாம் எந்த அளவுல நிக்குது?'' மகளின் நேரிடையான கேள்வியில் லேசாய் தடுமாறி பின் சமாளித்தார் சுந்தரமூர்த்தி.

''என்னம்மா இப்படிக் கேட்கிற? அதான் எல்லாம் பேசி முடிவாகிடுச்சே.

வர்ற ஞாயிற்றுக்கிழமை நிச்சயத்தை வெச்சுக்கலாம்னு மாப்பிள்ளை வீட்டுல சொல்லிட்டாங்கம்மா''

''அதான் தெரியுமே? பணத்துக்கு என்னப்பா செய்யப்போறீங்க?'' தந்தையின் முகத்தை ஊடுவியவாறே கேட்டாள்.

''பணமா? எ...ன்ன... பணம்?''

''அதாம்ப்பா எழுபத்தி அஞ்சு சவரன் கேட்டாங்களா அந்த அம்மா. அதுக்கு பணம் வேணுமே? அந்தப் பணத்துக்கு என்னப் பண்ணப்போறீங்கன்னு கேட்டேன்?'' ரோஜா அழுத்தமாய்க் கேட்க, தேவகி சற்று குழப்பமாய் கணவனை ஏறிட்டாள்.

''ரோஜாம்மா! அதான் அவங்க பேசினதெல்லாம் தப்புன்னு அப்பாகிட்ட மன்னிப்பு கேட்டுட்டு உங்களால முடிஞ்சதப் போடுங்கன்னு சொல்லிட்டாங்களே... பிறகென்ன?''

''அப்படின்னு யாரும்மா சொன்னது?''

''அப்பாதான் சொன்னாங்க. ஏன்?''

''அப்பா! அம்மா சொல்றதெல்லாம் உண்மையாப்பா?''

''ம்...ம்... ஆமாம்மா'' மையமாய் தலையாட்டியவரை சற்று வேதனையாய்ப் பார்த்தாள் ரோஜா. கண்கள் லேசாய் கலங்கியது. குரல் கம்மியது.

''அப்பா! ஏம்ப்பா இப்படி மாறிட்டீங்க? எதுப்பா உங்களை மாத்திச்சி?''

''ரோஜாம்மா?''

''உங்களுக்கு பொய் சொல்றதோ பொய் சொல்றவங்களையோ பிடிக்காதே. உங்களால எப்படிப்பா பொய் சொல்லமுடியுது?''

''ஏய்! நீ என்ன சொல்ற? தேவகி குழப்பமாய் எழுந்திருக்க, கையமர்த்தினாள் ரோஜா.

''உட்காருங்கம்மா. இப்ப அப்பாவுக்கு ஒரு போன் வரும். அது வந்ததும் எல்லாம் தானா தெரியும்'' ரோஜா சொல்ல, சுந்தரமூர்த்தி முகம் முழுக்க கலக்கமாய் தனது செல்போனை பார்த்தார். அது மௌனமாய் இருக்க, மனம் படபடக்க அதை எடுப்பதற்காக எழுந்தார்.

சங்கர் தந்தையின் கையைப் பற்றித் தடுக்க, அதேநேரம் செல்போன் தனது மௌனத்தைக் கலைத்து வீறிட்டது.

## ▸▸▸ 7 ◂◂◂

ஒருவன் இதயம் உருகும் நிலையை
அறியாக் குழந்தை நீ தானோ
உலகம் முழுதும் உறங்கும் போதும்
உறங்கா மனதை நீ காண்க!



போன் வீறிட்டுக் கொண்டே இருக்க, எடுக்க முயன்ற தந்தையை தடுத்து அமரவைத்தாள் ரோஜா.

''சங்கர்! அந்த போனை எடு. ஸ்பீக்கர்ல வை. எல்லாரும் கேட்கலாம்'', மறுவார்த்தை பேசாமல் தமக்கை சொன்னதைச் செய்ய தந்தையிடம் கண்ணைக் காட்டினாள்.

''இப்போ பேசுங்கப்பா''

''ரோ...ஜா...ம்மா''

''பேசுங்க''

''ஹலோ'' சுந்தரமூர்த்தி தயக்கமாகவே குரல் கொடுக்க, எதிர்முனையில் காட்டுக்கத்தாலாய் கத்தினாள் தேசிகனின் மனைவி. இதை எதிர்பாராத ரோஜா திகைத்துப் போனாள். அவன் போன் பண்ணவில்லையா? நான் பெயரைச் சொல்லவில்லை என்றதற்காக போன் செய்யாமல் இருந்து விட்டானோ?

''யோவ்! நான் பேசுறது காதுல விழுதா இல்லையா?'' போனில் ஒலித்த குரலில் அனைவரும் திடுக்கிட்டனர்.

''சம்பந்தியம்மா! சொல்லுங்க. நான்தான் பேசுறேன்''

''யோவ்! இனி சம்பந்தி அதுஇதுன்னு சொல்லி பல்லைக்காட்டிகிட்டு இந்தப் பக்கம் வராதே.'' அனைவரும் மொத்தமாய் அதிர, பதறினார் அப்பா.

''சம்பந்தியம்மா''

''இதோ பாருய்யா... நமக்கு இந்த சம்பந்தம் சரிப்பட்டுவராது. நாங்க வேற இடத்துல எம்புள்ளைக்கு பொண்ணு பார்த்துக்கிறோம். அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன். போனை வை'' என்றதும் பதறித் தடுத்தார் சுந்தரமூர்த்தி.

''வெச்சிடாதீங்கம்மா. என்னம்மா இப்படி ஒரு குண்டை தூக்கிப் போடுறீங்க?''

''ஆமாய்யா! குண்டுதான். ஆனா போட்டது நானில்ல. நீ பெத்துவச்சிருக்கியே ஒரு பேரழகி. அவதான் எங்க எல்லார் தலையிலயும் குண்டைத்தூக்கிப்போட்டுட்டா''

ரோஜாவின் முகம் இருண்டது. மகளைத் தவிப்பாய் பார்த்துக்கொண்டே பேசினார். ''என்னம்மா சொல்றீங்க?''

''இன்னும் என்னத்தைய்யா சொல்றது? அதான் உம்மலட்சணத்தை கண்ணால பார்த்தோமே. ஊர்மொத்தமும் கூடியிருக்கிற கோவில்ல. கொஞ்சமும் கூச்சநாச்சம் இல்லாம ஒரு ஆம்பிளைப் பையன் கூட உரசிவுரசி பேசிட்டு இருந்ததை எங்க சாதிசனம் மொத்தமும் பார்த்திச்சே''

ரோஜாவின் உடல் கூசிப்போனது. கௌதம் தன்னுடன் பேசியதை பார்த்திருக்கிறார்கள் என்பது புரிய, தன்னை பார்வைக் கணையால் துளைத்த அன்னையிடம் மறுப்பாய் தலையசைத்தாள்.

''இல்லம்மா. நானாய் போயி... யார்கிட்டயும் பேசல''

"சம்பந்தியம்மா! தயவுசெய்து எம்பொண்ணைப் பத்தி தப்பாப் பேசாதீங்க. அவளைப்பத்தி எனக்குத் தெரியும்.

"அடப்போய்யா! நீ சரியான மாங்கப்பய போலிருக்கு. இப்பகொஞ்ச நேரம் முன்னாலதான் பார்த்திட்டு வீட்டுக்கு வந்து உனக்கு போன் பண்றேன். தெரியுமாமே இவருக்கு."

"இதோ பாருங்கம்மா..."

"நிறுத்துய்யா! நான் பேசுறத நீ கேளு. எனக்கு உன் வீட்ல சம்பந்தம் வெச்சுக்க எப்பவுமே விருப்பம் கிடையாது. இடத்தை கிரயம் பேசி வித்திட்டு எவன் கமிஷன் தருவான்னு தலைய சொறிஞ்சிட்டு நிற்கிற சாதாரணத்தரகர் வீட்லயா பொண்ணு எடுக்கிறன்னு என் சொந்தபந்தமெல்லாம் என்னை கேலி பேசுறது.

எம்புருஷன் ஆசைப்பட்டார்ன்னு தான் உங்க வீட்டுக்கே வந்தோம். வந்த இடத்துல உன் ரௌடிப்புத்திரனால அவமானப்பட்டது தான் மிச்சம். அப்படியும் நீ கெஞ்சிக் கூத்தாடினதால போனப்போகுதுன்னு சம்மதிச்சோம்.

ஆனா இப்ப உன் குடும்பத்து மேல உள்ள நம்பிக்கை சுத்தமா போயிடுச்சு. இனி உன் வீட்ல பெண் எடுக்கிற எண்ணம் இல்ல. அதனால சம்பந்தம் பேசிகிட்டு இந்தப்பக்கம் வந்திடாதே"

"ஐயோ! எனம்மா இது... என்னவெல்லாமோ பேசுறீங்க. எம்பொண்ணுக்கு நிச்சயம்னு சொல்லி ஊரையெல்லாம் அழைச்சிருக்கேனே?"

"எல்லார்கிட்டயும் சொல்லு. கல்யாணம் நின்னுப்போச்சுன்னு"

"ஐயோ! இப்படியெல்லாம் பேசாதீங்கம்மா."

"வாயை மூடுய்யா... நாங்க வேண்டாம்னு சொல்லியும் நீ வீடுதேடி வந்து கேட்ட நகையெல்லாம் போடுறேன்னு சொன்னப்பவே எனக்கு சந்தேகம்தான்" தேவகி கணவனை வெறித்தாள். சங்கரின் பற்கள் அரைப்பட்டன.

"இருந்தாலும் சரி பொண்ணு விஷயமாச்சேன்னு கொஞ்சம் இறங்கி வந்தா எங்க குடியையே கெடுத்திடுவீங்க போலிருக்கே. அப்பன் இந்தப் பக்கம் மாப்பிள்ளை பார்த்து கல்யாண ஏற்பாட்டை கவனிக்கறான். மக அந்தப்பக்கம் இன்னொருத்தனோட கூத்தடிச்சிட்டு இருக்கா..."

"வாயை மூடும்மா" சீறினான் சங்கர். வேறு குரல் கேட்டதும் மிரண்டவள் சத்தமாகவே குரல் கொடுத்தாள்.

### இனிப்பாய்...

உன் உதடுகளிலிருந்து
வெளியே வரும் வார்த்தைகள்
அத்தனையும் பொய்கள்தான்
ஆனாலும்
இனித்து விடுகிறது!
அத்தருணங்களில் மட்டும்.
- சங்கர், வந்தவாசி.





"யாருடா அது? என் வாயை மூடச்சொல்றது?"

"இதோ பார்! பொம்பளை ஆச்சேன்னு அன்னிக்கு உன்னை சும்மாவிட்டேன். இதுக்கு மேலேயும் எங்க அக்காவைப் பத்தி ஏதாவது பேசினவீடு தேடிவந்து சங்கை அறுத்திடுவேன். ஜாக்கிரதை"

"ஏய்"

"பாவம் தான் உன் அப்பன். பெத்தது ரெண்டுமே சரியில்ல.ஒன்னு ஊர்மேயுது. ஒன்னு அடிதடின்னு உருப்பிடாம அலையுது. நல்ல குடும்பம்டா. உங்க லட்சணம் தெரியாம உன் வீட்டு படியேறி வந்திட்டோமே. நல்ல காலம் கடவுள் தான் காப்பாத்தினான்.

ஆத்திரமாய் வாயைத் திறக்க முயன்ற மகனை அடக்கி போனைக் கையிலெடுத்தாள் தேவகி.

"ஆமம்மா! கடவுள் தான் காப்பாத்தினான். இல்லன்னா நான் பொத்தி பொத்தி வளர்த்த என் கண்மணிய உங்களை மாதிரி ஒரு புதைகுழியில தள்ளியிருப்பேனே. எங்களையும் என் பொண்ணையும் அந்த ஈஸ்வரன் தான் காப்பாத்தியிருக்கான்.

போதும்மா! நீ பேசினதும் போதும். நாங்க கேட்டதும் போதும். ஏதோ பொண்ணைப் பெத்திட்டோமேன்னு அன்னிக்கு அடங்கி நின்னோம். இனி நமக்குள்ளதான் எதுவும் இல்லன்னே ஆகிப்போச்சே. இதுக்குமேல எம்புள்ளங்களை ஒரு வார்த்தை பேசின பேசின நாக்கை இழுத்து வெச்சி அறுத்திடுவேன்.

இனிமே இந்த போன் போடுற வேலையெல்லாம் வெச்சிக்காதே. எல்லாநேரமும் எம்புள்ளைய அடக்க வெச்சிட்டு இருக்கமாட்டேன் வைடி போனை." என்றவாறு போனை கட் பண்ணி சோபாவில் எறிந்தாள் தேவகி.

உடல் முழுக்க தெப்பமாய் நனைந்து நின்ற கணவரை நெருங்கினாள்.

"என்னங்க! அந்தப் பொம்பளைசொல்றதெல்லாம் உண்மையா?"

"தே...வ..கி"

"நீங்க அவங்க வீட்ல போய் கெஞ்சி அவங்க கேட்ட நகையை போடுறதா சொன்னீங்களா?"

"தே..வ..கி"

"கேட்டதுக்கு பதில் சொல்லுங்க" மனைவியின் குரல் உயர இன்னும் வெலவெலத்துப் போனார் சுந்தமூர்த்தி. இதயத்தின் ஓரமாய் தொடங்கிய

வலி இதயம் முழுக்க பரவ, லேசாய் மூச்சுத் திணறியது. வியர்வை ஆறாய் பெருகியது. பேச இயலாமல் தவித்தார்.

''நான்தான் அன்னிக்கே வேண்டாம்னு சொன்னேனே. எங்க யார் பேச்சையும் காதுல வாங்காம அவ கால்ல போய் விழுந்திட்டு வந்திங்களா?''

''தே..வ..கி''

''எப்படி வாக்கு கொடுத்திங்க? எந்த தைரியத்தில அவ்வளவு நகை போடுறேன்னு சொன்னீங்க? சொல்லுங்க''

''கேட்கிறாங்கள்ல? சொல்லுங்கப்பா. யார்கிட்டயாவது கடன் எதுவும் கேட்டீங்களா?'' சங்கரும் தன் பங்குக்கு கேள்வி கேட்க,நிற்க இயலாமல் சோபாவில் பொத்தென அமர்ந்தார் சுந்தரமூர்த்தி.

''தப்பு பண்ணிட்டேன் நான்... பெரிய தப்பு பண்ணிட்டேன்'' திணறலாய் பேசிய தந்தையைக் கண்டு, அதுவரை உறைந்து நின்ற ரோஜா திடுக்கிட்டாள். அவசரமாய் தந்தையை நெருங்கினாள்.

''அப்பா! என்னப்பா! முகமெல்லாம் வேர்த்திருக்கே?என்னப்பா பண்ணுது?''என்ற மகளின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டார்.

''ரோஜாம்மா! நான் தப்பு பண்ணிட்டேன்டா அவசரப்பட்டு பெரிய தப்பு பண்ணிட்டேன்''

''அப்பா?''

''ஒப்புத் தாம்பூலம் மாத்தினபிறகு மாப்பிள்ளைய மாத்தினா அதுக்குப் பிறகு உனக்கு கல்யாணமே ஆகாதுன்னு பயந்து நான்தான் தேசிகன் வீட்லபோய் அவங்க கேட்டதையெல்லாம் செய்யுறேன்னு சொன்னேன்''

''ஏங்க இப்படிச் செய்தீங்க?''

''மன்னிச்சிடு தேவகி அந்தம்மா இவ்வளவு மோசமான புத்தி உள்ளதுன்னு எனக்குத் தெரியாமப் போச்சே இப்பவே இவ்வளவு பேசுறவ நாளைக்கு கல்யாணமான பிறகு என்னவெல்லாம் பேசுவாளோ? எம்புள்ளய பேசியே கொன்னுடுவா போலிருக்கே?''

''அப்பா! இப்படியெல்லாம் நடக்கத்துடாதுன்னு தானே நான் அன்னிக்கே வேண்டாம்ன்னு சொன்னேன். திரும்பவும் ஏம்ப்பா அவங்க வீட்டுக்கு போனீங்க?''

''பொண்ணைப் பெத்திட்டேனேப்பா அதான் கொஞ்சம் பணிஞ்சு போலாம்னு போனேன்.

''தப்புப்பா பொண்ணை பெத்தா என்ன பையனைப் பெத்தா என்ன? நாம ஏம்ப்பா தேவையில்லாம பணிஞ்சு போகணும் நல்ல குடும்பத்து ஆட்களா இருந்தா இப்படியெல்லாம் பேசுவாங்களா? நம்மை விட பெரிய இடம் ஏதாவது தேடி வந்திருக்கும்.

அதான் அந்தப்பொம்பளை நம்மளை உதறிட்டா. அதுக்காக அக்காமேல வீண் பழியப் போட்டு... ச்சே! பொம்பளையா அவ? சரி விடுங்கப்பா. ஏதோ இதோட போச்சுன்ன விடுங்க''.



''இல்லய்யா! அப்பா வேற ஒரு தப்பும் பண்ணிட்டேன்''

தேவகி நெற்றியிலறைந்து கொண்டாள். ''இன்னும் வேற என்ன பண்ணிவெச்சிங்க?''

''தேவகி! நிச்சயதார்த்த அன்னிக்கு பொண்ணு கழுத்தில மொத்த நகையும் இருக்கணும். அப்பத்தான் தட்டைமாத்துவோம்னு அவங்க சொன்னதால நான்...நான்...''

''சொல்லுங்கப்பா! என்ன பண்ணீங்க?''

''அதை நான் சொல்றேன் சங்கர்! அப்பா நம்ம இடத்தை விலைபேசி அட்வோன்ஸூம் வாங்கிட்டாங்க. நாளைக்கு காலையில ரிஜிஸ்ட்ரேஷன் இறுகிய குரலில் ரோஜா சொல்ல, தேவகி பலமாய் அதிர்ந்தாள்.

''என்ன?''

''என்னை மன்னிச்சிடு தேவகி. எனக்கு வேற வழி தெரியல''

கடவுளே! உங்க புத்தி ஏன் இப்படியெல்லாம் போகுது. எங்களுக்குத் தெரியாம இன்னும் எதையெல்லாம் மறைச்சிட்டு இருக்கீங்க? முதல்ல அதைச் சொல்லுங்க''

''தேவகி! எனக்கு...எனக்கு நெஞ்சையெல்லாம் அடைக்குது'' திணறலாய் பேசிய கணவரை அப்போதுதான் கவனித்தாள் தேவகி. முகம் முழுக்க வலியால் சுருங்க அவர் வேதனை தாளாமல் துடிப்பது புரிந்ததும் பதறி வந்து கணவனைப் பற்றிக் கொண்டாள்.

''என்னங்க! என்ன பண்ணுது உங்களுக்கு?''

''அப்பா! என்னாச்சுப்பா! பேசுங்கப்பா! அப்பா''

''முடியலம்மா எனக்கு... மூச்சுத் திணறுது. முடியல... நான்..போயிடுவேன் போலிருக்கு''

''ஐயோ! என்ன வார்த்தை சொல்றீங்க?'' வீறிட்டாள் தேவகி

''சங்கர்! சிக்கிரமாப் போயி டாக்ஸி பிடிச்சிட்டுவா. ஹாஸ்பிடலுக்கு போவோம்''

''இதோ... இதோ வந்திடுறேன்'' சங்கர் வெளியில் ஓட, ரோஜா தலைவலி தைலத்தை எடுத்துவந்து தந்தை நெஞ்சில் தேய்த்துத் தடவினாள். சுந்தரமூர்த்தியின் உடல் சில்லிட்டு போயிருக்க, கண்கள் செருகியது.

ரோஜாவின் உடலும் மனமும் துடித்தது. ''அப்பா! அப்பா! கண்ணைத்திறங்கப்பா. எனக்கு பயமா இருக்குப்பா. அப்பா!''

''போச்சேம்மா! எல்லாம் போச்சே! எம்பொண்ணோட கல்யாணம் நின்னுபோச்சே'' கண்களைத் திறவாமலே முனகினார்.

''இடமும் போச்சேம்மா. உன் கல்யாணமும் நடக்கல. எம்பிள்ளைக்காக வெச்சிருந்த இடமும் போச்சு. தேவகி! உங்க எல்லாரையும் அநாதையா விட்டுட்டு போயிடுவேன் போலிருக்கே?''

''ஐயோ! அப்படியெல்லாம் பேசாதீங்க. எதுபோனாலும் போகட்டுங்க.

நீங்க மட்டும் இருந்தா எங்களுக்குப் போதும். கண்டதையும் நினைச்சி கலங்காதிங்க. என்னங்க... என்னங்க...'' தேவகி பேசிக்கொண்டிருக்கும்போதே சுந்தரமூர்த்தியின் தலை ஒரு பக்கமாய் சரிந்தது.

''என்னங்க...'' தாயின் வீறிடலில் காரோடு வந்த சங்கர் விக்கித்துப்போனான்.

## ▸▸▸ 8 ◂◂◂

ஊரெல்லாம் தூங்கையிலே
விழித்திருக்கும் என் இரவு
உலகமெல்லாம் சிரிக்கையிலே
அழுதிருக்கும் அந்த நிலவு!

அவசர சிகிச்சைப்பிரிவின் முன் அமர்ந்து விடியவிடிய அழுதுகொண்டிருந்தாள் ரோஜா. அவ்வப்போது மயங்கிச் சரிந்த தாயை ஒரு படுக்கையில் சேர்த்துவிட, ஒருபுறம் உணர்வின்றி கிடக்கும் தாய், மறுபுறம் உயிருக்குப்போராடிக்கொண்டிருக்கும் தந்தை என இருவருக்கும் மருந்து மாத்திரை வாங்கவென்று சங்கர் நில்லாமல் ஓடிக்கொண்டே இருக்க, மொத்தக் கண்ணீரும் வற்றும் வரை அழுது தீர்த்துவிட்டாள் ரோஜா.

ஒவ்வொரு முறை கதவைத் திறந்து நர்ஸோ டாக்டரோ வெளியே வரும்போதெல்லாம் என்ன சொல்லப்போகிறார்களோ என அஞ்சித்துடித்தது அவளது இளம் நெஞ்சம். விதம்விதமான பரிசோதனைகளை எல்லாம் செய்துவிட்டு ஒரு வழியாக மருத்துவர் குழு வெளியே வரும்போது பின்னிரவாகி விட்டிருந்தது.

''டாக்டர்! அப்பாவுக்கு...'' கண்ணீரோடு கேட்டவளை சற்று வேதனையோடு பார்த்தார் தலைமை மருத்துவர்.

''உங்க கூட இருந்தாரே ஒருத்தர். அவரை எங்கேம்மா?''

''தம்பி அம்மாகிட்ட இருக்கான் டாக்டர். அப்பாவுக்கு எப்படி இருக்கு டாக்டர்? ஒன்னும் பயப்படுற மாதிரி இல்லையே?'' கேட்கும்போதே மீண்டும் கண்ணீர் பொங்கியது.

''பெரியவங்க யாரும் வரவில்லையா?''

''எங்க வீட்ல மொத்தம் நாலுபேருதான் டாக்டர்''

''உங்க ரிலேஷன்ஸ் யாராவது பக்கத்தில இருக்காங்களா?''

''டாக்டர் ப்ளீஸ்! எதுவா இருந்தாலும் எங்கிட்ட சொல்லுங்க. எங்க சொந்தக்காரங்க எல்லாரும் வெளியூர்ல இருக்காங்க. அப்படியே அவங்க வந்தாலும் எந்த யூஸூம் இருக்காது. நீங்க எங்கிட்டயே சொல்லுங்க''

''அக்கா!'' என்றவாறு ஓட்டமும் நடையுமாய் வந்தான் சங்கர்.



டாக்டர் தொழிலை
விட்டுடலாம்னு பார்க்கிறேன்...
ஏன் பேஷண்ட் யாரும்
வர்றதில்லையா...?
இல்ல, பேஷண்ட் யாரும்
பிழைக்க மாட்டேங்கிறாங்க.

-எஸ்.பொருநை பாலு, கரூர்.



''சங்கர்! அம்மாவைத் தனியா விட்டுட்டு ஏன் வந்தே?''

''அம்மா தூங்குறாங்கக்கா. டாக்டர் என்ன சொல்றாங்க? டாக்டர்! எங்க அப்பாவுக்கு எப்படி இருக்கு?''

''ப்ளீஸ் கம்'' என்றவாறு டாக்டர்கள் முன்னே நடக்க, இனம் புரியாத பயத்துடன் அவர்களைப் பின்தொடர்ந்தனர் இருவரும். மற்ற மருத்துவர்கள் தங்கள் பிரிவிற்கு விலகிச்செல்ல, தலைமை மருத்துவர் தன் அறைக்குள் நுழைந்து, எதிர் இருக்கையில் இருவரையும் அமரச்சொல்லிவிட்டு, தன் இருக்கையில் அமர்ந்தார்.

இருவரையும் பொதுவாய் ஒருமுறை பார்த்துவிட்டு நேரிடையாய் விஷயத்துக்கு வந்தார்.

''இதோ பாருங்கம்மா... உங்க அப்பாவுக்கு இதுக்கு முன்னால இதுமாதிரி அட்டாக் வந்திருக்கா?''

''இல்லே டாக்டர்''

''ஷ்யூர்?''

''ஷ்யூர் டாக்டர். அப்பாவுக்கு உடம்புக்கு முடியாம வந்திருந்தா எங்களுக்கு தெரியாம இருக்காது.''

''இல்ல தம்பி, இதுக்கு முன்னால வந்திருக்கு. ஒன்னு அதை அவர் மறைச்சிருக்கணும். இல்ல நீங்க கவனிக்காம விட்டிருப்பீங்க.''

''டாக்டர்''

''முதல்லயே கவனிச்சிருந்தா இப்போ இவ்வளவு தீவிரமாக அட்டாக் பண்ணியிருக்காது. இது சிவியர் அட்டாக்.''

''டாக்டர்'' இருக்கையை விட்டே எழுந்தாள் ரோஜா.

''யெஸ்! ரொம்ப கிரிட்டிக்கல் பொஸிஸன்ல இருக்கார்.''

''டாக்டர்! அப்படின்னா... அப்பாவை...''

''நிச்சயமா காப்பாத்திடலாம்மா. அது விஷயமா பேசத்தான் உங்களைக்

கூப்பிட்டேன்.'' ''சொல்லுங்க டாக்டர்''

''உங்கப்பாவுக்கு உடனடியா அதாவது இன்னும் கொஞ்ச நேரத்தில விடிஞ்சிடும். காலையிலேயே ஆபரேஷன் பண்ணியாகணும். அப்பத்தான் அவரைக் காப்பாத்த முடியும்''

''உடனே பண்ணுங்க டாக்டர். எங்களுக்கு எங்க அப்பா வேண்டும். அப்பாவுக்கு ஒண்ணுன்னா அம்மாவையும் இழந்திடுவோம் டாக்டர்.''

''ரிலாக்ஸ்மா. ஆபரேஷன் பண்றதுல இங்க எந்த பிரச்சனையும் இல்லே. ஆல்ரெடி எல்லா டாக்டர்ஸூம் தயாராத்தான் இருக்கோம்''

''வேறென்ன டாக்டர்?''

''பணம்... கொஞ்சம் அதிகமாக செலவாகும்மா''

''அதிகம்னா... எவ்வளவு டாக்டர்?''

''ஆபரேஷனுக்கு மட்டுமே ஒன்னேமுக்கால் லட்சம் தேவைப்படும்மா... அப்புறம் மெடிஸன்... சர்வீஸ் பீஸ், டாக்டர் பீஸ், ரூம் சார்ஜ் பெட் சார்ஜ்ன்னு எப்படியும் ஒரு... மூணு லட்சம் தேவைப்படும். உங்களால புரட்ட முடியுமா?''

''மூ...னு... லட்சமா? அக்காள் தம்பி இருவரும் ஒருரையொருவர் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டனர்.

''உங்களால முடியலன்னா ஜி.ஹெச் கொண்டு போயிடுங்க. நான் எல்லா ரிப்போர்ட்டும் தெளிவா எழுதித் தந்திடுறேன். ஆனா, காலம்தாழ்த்தக்கூடாது. அப்புறம் எதுவும் சொல்ல முடியாது'' டாக்டர்களுக்கே உரிய மென்மையும் நிதானமுமான குரலில் அவர் சொல்லி முடிக்க... இருவரும் உறைந்து போயினர்.

சில கணங்கள் இருவரும் அசைவற்று இருக்க... மருத்துவரே கேட்டார்.

''என்னம்மா சொல்றீங்க? யோசிக்க நேரம் இல்லை. இப்போதைக்கு இன்ஜெக்ஷன் போட்டு செயற்கை சுவாசம் பொருத்தியிருக்கோம்.இப்படியே ரொம்ப நேரம் வெச்சிட்டு இருக்க முடியாது. ஸோ....''

''கலக்கமாய் தம்பியை ஏறிட்டாள் ரோஜா. ''சங்கர்! இப்போ என்னடா பண்றது?''

''எனக்கும் புரியலையேக்கா. ஒரு ரெண்டுநாள் டயம் கிடைச்சாலாவது வெளியே ட்ரை பண்ணலாம். உடனேன்னா...''

''நம்ம நகையை எல்லாம் வித்திட்டா என்ன சங்கர்?''

''அ...தை... வித்தாக்கூட மூணுலட்சம் வராதுக்கா.'' இருவரையும் மாறிமாறி பார்த்தார் மருத்துவர்.

''முதல்ல ஆபரேஷனுக்கு கட்ட வேண்டிய பணத்தை ரெடிபண்ணுங்க... மிச்சத்தை டிஸ்சார்ஜ் ஆகும்போது பே பண்ணினாப் போதும்'' என்றவரை நன்றியாய்ப் பார்த்தாள் ரோஜா.

''தேங்க்யூ டாக்டர். அப்போ உடனே ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணுங்க. நான் பணத்தோடு வர்றேன் டாக்டர்''

''ஓ.கேம்மா. இப்படி அன் டைம்ல போகவேண்டாம். விடிஞ்சதும் போயிட்டு



சீக்கிரமா பணத்தோட வாங்க. பணத்தை கட்டின பிறகுதான் பேஷண்ட்டை ஆபரேஷன் தியேட்டருக்கு கூட்டிட்டு போவாங்க.''

''சீக்கிரமே வந்திடுவேன் டாக்டர். தயவுசெய்து நீங்கள் லேட் பண்ணிடாதீங்க.''

''ஓ.கே. நாங்க எல்லாம் ரெடிபண்றோம். நீங்க கிளம்புங்க''

''தேங்க்யூ டாக்டர்'' இருவரும் எழுந்து அறையை விட்டு வெளியே வந்தனர்.

''சங்கர்! நீ அம்மா பக்கத்திலே இரு. அம்மா கண்விழிச்சதும் அப்பாவுக்கு ஒன்னுமில்ல. நார்மலா இருக்காங்கன்னு சொல்லு. நான்போய் நகைகளை வித்து பணமாக்கிட்டு வர்றேன்''

''அக்கா! இப்ப எப்படி போவே? மணி நாலரைதான் ஆகுது''.

''பரவாயில்லடா. இப்பப் போனாத்தான் சரியா இருக்கும்''

''விளையாடாதே அக்கா' இந்த நேரம் போனா ஆட்டோ கூட கிடைக்காது. ஆறுமணியாகட்டும். நீ அம்மாக்கிட்டே இரு. நான் போறேன்.''

''நீயா?''

''ஆமா! நீ எப்படி நகையை எடுத்திட்டு எங்கே போய் அடகு வைப்ப?''

''அடகுவெச்சா பணம் பத்தாதுடா. வித்திடவேண்டியதுதான்''

''அக்கா! அது உன் கல்யாணத்துக்காக அப்பாவும் அம்மாவும் கஷ்டப்பட்டு சேர்த்தது. அதை விக்கணுமா?''

''வேற வழியில்லை சங்கர். நமக்கு இப்போ அப்பாதான் முக்கியம்.''

''அக்கா! நான் சொல்ற மாதிரி செய்யலாம். முதல்ல நகையை அடகுவெச்சி கிடைக்கிற பணத்தை கட்டுவோம். எப்படியும் அப்பாவை டிஸ்சார்ஜ் செய்ய பத்து பதினஞ்சி நாளாகுமில்ல. அதுக்குள்ள நம்ம இடத்தை வித்து அந்த பணத்தை வெச்சி நகையையும் திருப்பிடலாம்.

ஹாஸ்பிடல் செலவையும் சமாளிச்சிடலாம். என்ன சொல்ற?'' சங்கர் கேட்ட பிறகே ரோஜாவின் மூளை விழித்துக்கொண்டது.

''அப்பா ஏற்கனவே அந்த இடத்தை விலைபேசி அட்வான்ஸ் கூட வாங்கிவிட்டாரே. ஐந்து லட்சம் கொடுத்ததாகச் சொன்னானே போனில் பேசியவன். அப்படியென்றால் அந்தப் பணம் வீட்டில்தானே இருக்கும். பேசாமல் அதை எடுத்துவந்து ஹாஸ்பிடலில் கட்டிவிட்டால் என்ன?'' பளிச்சென நிமிர்ந்தாள்.

''சங்கர்! அப்பா ஏற்கனவே அந்த இடத்தை பேசி அட்வான்ஸ் கூட வாங்கிட்டாங்க. பேசாம அந்தப் பணத்தை ஹாஸ்பிடலுக்கு கட்டிடலமா?''

''அட! இதை மறந்திட்டோமே. அக்கா! பணம் கொடுத்த பார்ட்டி யார்ன்னு கூட நமக்குத் தெரியாதே. அவங்ககிட்ட நம்ம அப்பாவோட போனைக்கூட எடுத்திட்டு வரலபார். சங்கர்! அப்பா போன்ல அந்த பார்ட்டியோட நம்பர் இருக்கு. நேற்று கூட நான் அந்த பார்ட்டிகூட பேசினேன்''

''நீயா? நீ என்னக்கா பேசின?''

''அதை ஏன்டா கேக்கிற? நான் என்னவோ நினைச்சி பேசினேன்.

இங்கே என்னவெல்லாமோ நடந்துபோச்சு. சரி. அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். சங்கர்! மணி அஞ்சாகுது. நான் வீட்டுக்குக் கிளம்புறேன். நீ அம்மா கூடவே இரு.

ஹாஸ்பிடல்ல மருந்து மாத்திரை வாங்கச் சொன்னா பைசா இருக்கா?''

சட்டைப்பையில் கைவிட்டு பணத்தை எடுத்துப்பார்த்தான். ''ஒரு ஐநூறு ரூபா இருக்குக்கா. போதும். நீ வரும்போது கொஞ்சம் எக்ஸ்ட்ராவே எடுத்திட்டு வா. ஆமா! அந்தப் பணம் வீட்லதான் இருக்குன்னு என்னக்கா நிச்சயம்? ஒருவேளை தேசிகன் வீட்ல போய் அப்பா கொடுத்திருந்தால்?'' சங்கர் யோசனையாய்க் கேட்க திக்கென அதிர்ந்தாள். மறுகணமே சுதாரித்துக்கொண்டாள்.

''சேச்சே! அப்படியெல்லாம் நமக்குத் தெரியாம கொடுத்திருக்கமாட்டாங்க சங்கர்''

''எனக்கு நம்பிக்கை இல்ல''

இடல்

**நிலாப்பெண் முகம்காட்டும் கண்ணாடி**

*-டி.சந்தியா, கோயம்புத்தூர்.*

''சரி! இங்க நின்னு குழம்புறத விட வீட்ல போய் தேடிப்பார்க்கிறேன். கிடைச்சா பணத்தோட சீக்கிரம் வந்திடுறேன். இல்லன்னா கடையைத் திறந்தபிறகுதான் நகைகளைக் கொண்டு போய் விற்கணும்''

''அது ஒன்னும் அவ்வளவு சுலபமில்லையே அக்கா. மொத்தமா நகையை எடுத்திட்டு போனா கடைக்காரங்க சந்தேகப்படுவாங்க''

''ஏன்?''

''திருட்டு நகையா இருக்கும்னு சந்தேகப்பட்டு ஆயிரம் கேள்வி கேட்பாங்க. ஏதாவது டவுட்னா போலீஸ்ல சொல்லிடுவாங்க''

''ஐயோ''

''அப்படி இல்லன்னா பாதிக்கு பாதிதான் பணம் தருவாங்க''

''கடவுளே! அவசரத்துக்கு பணம் புரட்ட இவ்வளவு சிரமம் இருக்கா. இப்ப என்ன பண்றது சங்கர்?''

''அக்கா! நீ வீட்டுக்குப் போயி அம்மாவுக்கும் அப்பாவுக்கு ரெண்டு செட் துணி எடுத்து வெச்சிட்டு, அப்பா ரூம்ல பணம் இருக்கான்னு பாரு. கிடைச்சா எடுத்திட்டுவா. கிடைக்கலன்னா நகைகளை பத்திரமா ஒரு பொட்டலமாக்கட்டி எடுத்திட்டு ஹாஸ்பிட்டலுக்கு வந்திடு.

''இங்கேயா?''

''நீ வந்த பிறகு உன்னை இங்கே இருக்க வெச்சிட்டு நான் என் பிரெண்ட் கூடப்போயி அதை ஸேல்ஸ் பண்ணிட்டு பணத்தோட வந்திடுறேன் சரியா?''

''சரிடா... அப்போ நான் கிளம்பட்டுமா?''

''அம்மாவைப் பார்க்க வேண்டாமாக்கா?''

''வேண்டாம் சங்கர். பார்த்தால் அழுகை வரும். நமக்கு இப்ப அழக்கூட நேரமில்லையே. நான் சீக்கிரம் வந்தால்தான் அப்பாவுக்கு டீரிட்மெண்டை ஆரம்பிப்பாங்க.''

''சரிக்கா! நீ கிளம்பு. பத்திரம்''

''ம்... நீ அம்மாவைப் பார்த்துக்க''

''சரி... நீ மறக்காம அப்பா போன்ல அவங்களை காண்டாக்ட் பண்ணிச் சொல்லிடு. வரும்போது போனையும் எடுத்திட்டுவா''

''ம்... ம்... '' என்றவாறு விறுவிறுவென மருத்துவமனையை விட்டு வெளியேறினாள் ரோஜா. வலப்பக்க சுவரோரமாய் வரிசையாய் நின்ற ஆட்டோவை நெருங்கினாள். இரண்டு ஆட்டோக்களில் அதன் ஓட்டுநர்கள் பின் இருக்கையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்க, அவர்களை எப்படி எழுப்புவது என தயங்கி நின்றாள்.

மூன்றாவதாய் நின்ற ஆட்டோ ஓட்டுநர் விழித்து தனது ஆட்டோவை துடைத்துக்கொண்டிருக்க, அவனை நெருங்கினாள்.

''ஏங்க! ஆட்டோ வருமா?''

''எங்கேம்மா போகணும்?''

''மாடம்பாக்கம் போகணும்''

''அந்த மொத ஆட்டோவில ஏறுங்கம்மா. அதுதான் முதல்ல போகணும்''

''டிரைவர் தூங்கிட்டு இருக்காரே''

''நீங்க வாங்கம்மா. நான் எழுப்பிவிடுறேன்.'' என்றவன் அதன் ஓட்டுநரைத் தட்டி எழுப்பி, விஷயத்தைச் சொல்ல, அவன் கண்களைத் திறவாமலேயே பதில் சொன்னான்.

''ரொம்ப டயர்டா இருக்கு பாண்டி. நீயே இட்டுண்டு போ''

''சரி. வாங்கம்மா'' என்றவாறு தனது ஆட்டோவை உசுப்பினான். ரோஜா ஏறிக்கொண்டதும் ஆட்டோ சீறிக்கொண்டு கிளம்பியது. கோடைக்காலம் என்றபோதும் அதிகாலையில் பனிவிழுந்து குளிரத்தான் செய்தது. புடவைத் தலைப்பால் நன்றாய் போர்த்திக் கொண்டாள்.

இரவெல்லாம் அழுததின் விளைவாக தலை விண்விண்னென்று தெறித்தது. கண்கள் மிளகாயை அரைத்துப்பூசியதைப்போல் எரிந்தது. கண்களை சோர்வாய் மூடிக்கொண்டாள். ஆட்டோவின் ஒலியைவிட மனம் வேகமாய் துடித்தது.

பணம் வீட்டில் இருக்குமா? இல்லை சங்கர் சொன்னது போல் அப்பா தேசிகன் வீட்டில் கொடுத்திருந்தால் என்ன செய்வது? கொடுத்ததற்கு என்ன சாட்சியம் இருக்கிறது? நேற்று வீராப்பாய் அவனிடம் போன் பேசி இடத்தை வாங்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு இன்று அதே பணத்தை மருத்துவமனைக்கு எடுத்து வந்து விட்டால் அவனிடம் எப்படி பணத்தைத் கொடுப்பது?

இடத்தை விற்றுத்தான் ஆக வேண்டுமா? விற்றால் அந்த மாதிரி இடம் மீண்டும் வாங்க முடியுமா? இந்தப் பிரச்சனைகளை எப்படி சமாளிக்கப்போகிறேன்? முதலில் அப்பா பிழைத்து எழுந்தால் போதும். மற்றவை தானாய் நடக்கும்.

பொழுது மெல்ல விடியத்துவங்கும் போது வீட்டை அடைந்தவளை தெருவில்

வாசலை பெருக்கித் தெளித்துக் கொண்டிருந்தவர்கள் மொய்த்துக்கொண்டனர்.

“அப்பாவுக்கு எப்படிம்மா இருக்கு?”

“ஹார்ட் அட்டாக்கா? சாதாரண நெஞ்சுவலியா?”

“ஏன் திடீரென அப்படி விழுந்திட்டாரு? கண் திறந்திட்டாரா?” அனைவரின் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

“நான் சீக்கிரமா ஆஸ்பத்திரிக்கு போகணும். மாத்துத்துணி எடுத்திட்டு போலாம்னு வந்தேன்”

“சரிம்மா.. நீ போ... காபி எடுத்தரவா?” அக்கறையாய்க் கேட்டாள் அடுத்த வீட்டு பெண்மணி.

“வேணாம்மா. வீட்ல பால் இருக்கு. நானே போட்டுக்கிறேன்” என்றவாறு கதவைத் திறந்து வீட்டிற்குள் நுழைந்து முதல்வேலையாய் கதவைப்பூட்டினாள். வீட்டில் எல்லாம் போட்டது கிடக்க, மளமளவென அவற்றை சுத்தப்படுத்தினாள்.

நேராய் தந்தையின் அறையை அடைந்து கப்போர்ட்டை திறந்து பார்த்தாள். வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த துணிகளைத் தவிர வேறு எதுவும் தென்படவில்லை. பீரோ, மர அலமாரி, கல்லுக்கடியில் என ஒவ்வொரு இடமாய்த் தேடிப்பார்த்து ஏமாற்றமாய் சோர்ந்து கட்டிலின் மேல் அமர்ந்தாள்.

இந்த அப்பா அந்த பணத்தை எங்குதான் வைத்தார்? அட்வான்ஸ் வாங்கினாரா இல்லையா? சலிப்பாய் நிமிர்ந்த போது அமர்ந்திருந்த மெத்தையில் ஏதோ நெருடியது. புருவம் சுருக்கியவாறே எழுந்தவள் பரபரப்பாய் மெத்தையைத் தூக்க, அவள் தேடியது இருந்தது.

மறைவாய் பத்திரமாய் வரிசையாய் ஐநூறு ரூபாய் கட்டுக்களை அடுக்கி அதன்மேல் மெத்தையை விரித்திருந்தார் அப்பா. அவசரமாய் எண்ணிப்பார்த்தாள். பத்துக்கட்டுகள் இருந்தது. சரியாய்த்தான் சொல்லியிருக்கிறான். அட! அவனுக்கு போன் செய்ய வேண்டுமே.

முதலில் இதை பத்திரப்படுத்தலாம் என்றவாறே அதிலிருந்து ஆறு கட்டுக்களை எடுத்து பீரோவில் வைத்தாள். மீதம் நான்கு கட்டுக்களை ஒரு துணியில் சுற்றி கைப்பையனுள் திணித்தாள். அப்பாவிற்கு தேவையான மாற்றுடைகளை எடுத்து வைத்துவிட்டு, அவசரம் அவசரமாய் பல்துலக்கி, உடைமாற்றி தலையை உலர்த்தி பின்னலிட்டுக் கொண்டிருந்த போது வாசல் கதவு தட்டப்பட்டது.

யாராய் இருக்கும்? திரும்பும் அப்பாவைப் பற்றி நலம் விசாரிக்க யாரேனும் வந்துவிட்டார்களோ? குழப்பமாய் வாசலை நெருங்க, அதற்குள் மீண்டும் கதவைத் தட்டும் ஒலி அதிகரித்தது. கூடவே அழைப்பு மணியும் ஒலிக்க, வேகமாய் கதவைத் திறந்தாள். “யாரது?” லேசான கோபத்தோடு பார்வையை வெளியே வீசியவள் திடுக்கிட்டாள். வெளியில் நின்றவனும் கதவைத் திறந்தவளை அந்த இடத்தில் எதிர்பாராததால் அவனது முகமும் முதலில் திடுக்கிட்டு பின் மெல்ல மலர்ந்து புன்னகைத்தது.



# 9

ஒன்றும் அறியாத பெண்ணோ
உண்மை மறைக்காத கண்ணோ
மாற்று குறையாத பொன்னோ
மயங்குது நெஞ்சம் தயங்குது கொஞ்சம்!

வாசலில் நின்றவனைக் கண்டு திகைத்த ரோஜா அப்படியே நின்றுவிட, கௌதமின் புன்னகை பெரிதானது.

“ஹலோ ராஜகுமாரி! நீங்க எப்படி இங்கே?” அவன் குறும்பாகவே கேட்க, கடுப்பானாள் ரோஜா.

“இது நான் கேட்க வேண்டிய கேள்வி?”

“வாட்?”

“உங்களுக்கு இங்கே என்ன வேலை?”

“நான் மிஸ்டர் சுந்தரமூர்த்தியைப் பார்க்க வேண்டும். இது அவர் வீடுதானே?”

“நீங்க எதுக்கு எங்க அப்பாவைப் பார்க்கவேண்டும்?” அவளது கேள்வியில் மந்தகாசமாய் சிரித்தான்.

“வாவ்! உங்க அப்பாவா? அப்போ நான் கெஸ் பண்ணியது சரிதானே”

“என்ன?”

“நேற்று எனக்கு போன் பண்ணி உத்தரவு போட்டது இந்த ராஜகுமாரிதானே? நேற்றே எனக்கு டவுட்தான். பட் அதை கிளியர் பண்ணத்தான் பேரைக்கேட்டேன். அதுக்குள்ள ராஜகுமாரிக்கு கோபம் வந்திடுச்சி போலிருக்கு. சொல்லாம கொள்ளாம போனை கட் பண்ணிட்டீங்க” அவன் சிரித்துக்கொண்டே சொல்ல, திண்டாடிப்போனாள் ரோஜா.

இதென்ன சோதனை? பார்க்கும் இடத்தில் எல்லாம் கேட்கும் ஒலியில் எல்லாம் இவனே வந்து நிற்கிறானே. நேற்று இவனிடமா பேசினேன்? ஐயோ! அப்படியென்றால் இது இவன் பணமா? கடவுளே! இவனிடம் போய்எப்படி கடன் கேட்பது. இவனிடம் சொல்லாமல் எப்படி ஹாஸ்பிடலுக்கு இந்த பணத்தைக் கட்டுவது? இவன் எதற்காக வீடு தேடி வந்திருக்கிறான்?” திகைப்பாய் நின்று கொண்டிருந்தவளின் முகத்தின் முன்னால் சொடுக்குப்போட்டான் கௌதம்.

“என்ன ராஜகுமாரி ப்ரீஸாகிட்டீங்க? என்னை பார்த்ததில ஷாக் ஆகிட்டீங்களா? ஆமா! நாம என்ன அடிக்கடி மீட்பண்றோம்? நமக்குள்ள ஏதோ இருக்கு...”

“ஸ்டாப் த நான்சென்ஸ். இப்ப எதுக்காக இங்க வந்தீங்க?”

“அதான் சொன்னேன் மிஸ்டர். சுந்தர...” -

''அவரை இப்போ பார்க்க முடியாது''

''வொய்?''

''அது... எங்க குடும்ப விஷயம்..''

''என்ன? ஏங்க! என்னைப் பார்த்தா இளிச்சவாயன் மாதிரி தெரியுதா? வேலைவெட்டி இல்லாம அலையுறவன்னு நினைச்சீங்களா? கௌதமின் முகத்தில் இருந்த குறும்பு மறைந்து குரல் உயர வெலவெலத்துப்போனாள் ரோஜா.

''இ... இப்ப ஏன் இப்படி கோபப்படுறீங்க?''

''பின்னே? சும்மா இருந்தவன் கிட்ட வந்து எம்பொண்ணு கல்யாணத்திற்கு பணம் தேவைப்படுது. என் இடத்தை வாங்கிக்கங்கன்னு அப்பா விலை பேசுவாராம். யாருகூட பேசுறோம்னு கூட தெரியாம பொண்ணு போன் பண்ணி எங்க இடத்தை வாங்கக்கூடாதுன்னு எனக்கே ஆர்டர் போடுவாங்களாம்.

சரி! விற்கிறவங்களுக்கு மனசில்லாத இடத்தை ஏன் நான் வாங்கணும்னு வேண்டாம்னு சொல்லிடலாம்னு போன் பண்ணினா யாரும் எடுக்கமாட்டாங்களாம். சரி என்ன ஏதுன்னு நேர்ல வந்து பார்க்க வந்தா அட்வான்ஸ் வாங்கினவரை பார்க்க முடியாதாமே. ஒரு ரூபா ரெண்டு ரூபா இல்ல. அவரை நம்பி அஞ்சுலட்சம் கொடுத்திருக்கேன். நினைவிருக்கட்டும்'' ஒற்றைவிரலை உயர்த்தி அவன் கண்டிப்புடன் பேச, இன்னும் வெலத்து வெலத்து போனாள் ரோஜா.

''ஸ...ஸார்! இதையெல்லாம் ஏன் வாசல்ல நின்னு பேசிட்டு...''

''நீங்க இன்னும் என்னை வீட்டுக்குள்ள வான்னு கூப்பிடல்லையே''

''கௌதம் ஸார்! இப்ப வீட்ல வேற யாரும் இல்ல. இந்த நேரம் உங்களை உள்ளே கூப்பிட்டு வெச்சி பேசினா அது தெருவில உள்ளவங்க கண்ணை உறுத்தும். ஆளாளுக்கு ஒன்னா கதைகட்டிவிடுவாங்க. அதான்... உங்களை உள்ளே கூப்பிடல்ல. ஸாரி''

மெல்லிய குரலில் கெஞ்சுதலாய் அவள் சொல்ல, கௌதம் இயல்பாய் பார்ப்பதைப் போல் தெருவை நோட்டமிட்டான். அக்கம்பக்கம் உள்ளவர் ஏதோ ஒரு வேலையை செய்வதாய் பாவனை காட்டினாலும் அவர்களது கண்களும் கவனமும் இவர்கள் மீதுதான் இருந்தது.

''ஓ.கே. ஜஸ்ட் ஒன் மினிட்!'' என்றவன் வாசலருகே நின்ற காரை நோக்கித் திரும்பினான்.

''பிரபா''

''ஸார்'' காரைவிட்டுக் இறங்கினான் ஒருவன்.

''அப்பாவை அழைச்சிட்டுவா''

''எஸ் ஸார்'' என்றவன் காரின் பின்பக்கத் கதவைத்திறந்து கைத்தாங்கலாய் ஒருவரை இறக்கி, அழைத்துவர, தானும் சென்று அவரை ஒரு பக்கமாய் பற்றிக்கொண்டான் கௌதம்.

''நான் மட்டும் வந்தால்தானே பிரச்சனை. இப்போ உள்ளே போலாமா?''





பின்லாந்து மக்கள் ஆண்களும் சரி, பெண்களும் சரி காலையில் எழுந்ததும் தேகப் பயிற்சியை ஒரு தவம் போல் செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் உடல் வலுவோட இருப்பதும் அல்லாமல் அழகாகவும் தோன்றுகிறார்கள் என்பது கூடுதல் சிறப்பு.

-ஆர்.கே.லிங்கேசன்,
மேல கிருஷ்ணன் புதூர்.

''வா... வாங்க ஸார்'' கதவை முழுமையாய் திறந்துவிட்டு சோபாவை துடைத்துவிட்டு வந்தவர்களை அமரச்சொன்னாள். மனம் வேகமாய் அடித்துக்கொண்டது. எதற்காக இத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?

தந்தையை அமரவைத்துவிட்டு நிமிர்ந்தான் கௌதம். ''மிஸ். ராஜகுமாரி! இது என் அப்பா. இது என்னோட செகரட்டரி பிரபாகர்.''

''ஸார்! இவங்கல்லாம் எதுக்காக....''

''நீயும் உட்காரும்மா'' மாயக்கண்ணன் மென்மையாய்ச் சொல்ல, அவஸ்தையாய் மறுத்தாள்.

''மன்னிக்கணும் ஸார். நான் உட்கார்ந்து பேசும் நிலையில் இல்லை. உடனே ஹாஸ்பிடலுக்கு போகணும்''

''ஹாஸ்பிடலுக்கா? எதற்கம்மா?''

அதுவரை மறைந்திருந்த துயரம் மீண்டும் தலைதூக்க, கண்கள் கலங்கியது. ''ஸார்! அப்பாவுக்கு நேத்து நைட் திடீர்னு ஹார்ட்அட்டாக் வந்திடுச்சி. ஏ.கே. ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருக்கோம். உடனே ஆபரேஷன் பண்ணனும்னு டாக்டர் சொன்னாங்க. பணம் கட்டணும். அதான்... வீட்டுக்கு... வந்தேன்'' சொல்லும் போதே கண்ணீர்த்துளிகள் தெறித்துவிட, கௌதம் லேசாய் பதறினான்.

''ஏங்க! இதை வந்த உடனே சொல்வதற்கென்ன?''

''வந்து... ஸாரி''

''ஏம்மா! சுந்தரமூர்த்தியை நேற்று மதியம் கூட பார்த்தேனே. நன்றாய்த்தானே இருந்தார். பிறகெப்படி?'' மாயக்கண்ணனின் நம்பிக்கையற்ற கேள்வியில் துணுக்குற்றாள்.

''ஸா...ர்''

''நீ நேற்று என்பிள்ளைக்கு போன் செய்து இடத்தை விற்க விருப்பமில்லை.

அதனால் வாங்காதிர்கள் என்றாயாமே?''

''ஆ...மா ஸார்''

''உங்க அப்பாக்கிட்ட அட்வான்ஸை திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்றாயாமே''

''ம்... ம்''

''பிறகு ஏனம்மா கொடுத்துவிடவில்லை?''

''அது... அதுக்குள்ள அப்பாவுக்கு இப்படி ஆயிடுச்சி. அந்த பதட்டத்தி....''

''சரிம்மா! நீ சொல்றது உண்மையின்னே வெச்சிக்கலாம். நாங்க செய்த போனைக் கூட யாரும் அட்டென்ட் பண்ணல?''

''ஸார்! ஹாஸ்பிடலுக்கு போற அவசரத்தில அப்பாவோட போனை எடுத்திட்டு போகல. அதனால...''

''நோ... நோ... இப்படி பொறுப்பில்லாம பேசக்கூடாதும்மா. இடத்தை விற்க விரும்பவில்லை என்றால் பணத்தை உடனே திருப்பிக்கொடுத்திருக்க வேண்டும். இல்லையென்றால் ஒரு போனாவது செய்து எங்களுக்கு சொல்லியிருக்க வேண்டும். இப்படி எதுவும் செய்யாமல் இருந்தால் எப்படி?'' அவரது வார்த்தையில் ரோஜாவின் முகம் மாறியது.

''அப்பா'' தவிப்பாய் குரல் கொடுத்த மகனை கை உயர்த்தித் தடுத்தார்.

''நானும் என் பிள்ளையும் பத்துமுறை போன் செய்தும் பதில் இல்லை. நாங்கள் என்னவென்று நினைப்பது? இன்று காலை பத்திரப்பதிவு என்று சொல்லியிருந்தார் உன் அப்பா. இதுவரை ஒரு தகவலும் இல்லையென்று உன் வீட்டிற்கு ஆளை அனுப்பினால் கதவு பூட்டியிருப்பதாக தகவல் வந்தது. என்னவென்று பார்ப்பதற்காகத்தான் நாங்கள் புறப்பட்டு வந்தோம். இங்கு வந்து பார்த்தால் நீ இருக்கிறாய். அதுவும் எங்கோ புறப்பட்டுக் கொண்டு உன் தந்தையைப் பற்றி விசாரித்தால் ஒழுங்காய் பதில் சொல்லாமல் என் பிள்ளை மீதே கோபப்படுகிறாய். இதற்கு என்னம்மா அர்த்தம்?''

''எக்ஸ்கியூஸ்மி ஸார். இப்ப என்ன சொல்ல வர்றீங்க?''

''இல்லம்மா... பணம் கொடுத்தவன் நான்... அதை... ''

''ஓஹோ... உங்க பணத்தைத் தூக்கிட்டு குடும்பத்தோட ஓடிட்டோம்னு சந்தேகப்பட்டீங்களா?'' ரோஜா கடுமையாய்க் கேட்க, கௌதம் பதறினான்.

''நோநோ... அப்படியில்ல ராஜகுமாரி.''

''ஷட்அப் மிஸ்டர் கௌதம். வேற என்ன சொல்ல வருகிறார் உங்க அப்பா.''

''கோபப்படாதேம்மா... சுந்தரமூர்த்தி மீது நான் சந்தேகப்படவில்லை. ஆனா....''

''போதும் ஸார். உங்கள் பேச்சிலேயே தெரிகிறதே. எங்க அப்பாவின் மீது எவ்வளவு நம்பிக்கை வெச்சிருக்கீங்கன்னு. எந்தப் பொண்ணாவது பெத்த தகப்பனை ஹாஸ்பிடல்ல வெச்சிருக்குனு பொய்சொல்வாளா?''

மாயக்கண்ணன் வறட்சியாய் புன்னகைத்தார். ''பணம் எப்படிப்பட்ட பொய்யையும் சொல்ல வைக்கும்மா. நான் பார்க்காத பணமா? பொய் புரட்டா?



ஒரே தாய் புள்ளையா பழகுறவன கூட இந்த பணத்து மேல உள்ள ஆசையில எப்படியெல்லாமோ பேச்சு மாறிடுறான்.''

''நிறுத்துங்க ஸார். எங்கப்பா ஒண்ணும் நீங்க நினைக்கிற மாதிரி ஆளில்ல. இந்த பொய் புரட்டு எல்லாம் உங்களுக்கு வேனா சகஜமா இருக்கலாம். எங்களுக்கு அப்படியில்ல.''

''நான் பொதுவாச் சொன்னேம்மா. உன் அப்பாவை சொல்லவில்லை. அவரை எனக்கு பல வருஷமாத் தெரியும்''

''போதும் ஸார். பேசுவதையெல்லாம் பேசிவிட்டு பூசிமெழுக வேண்டாம். ஒன் மினிட்'' என்றவள் விறுவிறுவென வீட்டிற்குள் நுழைந்து பீரோவில் பத்திரப்படுத்திய பணத்தையும் கைப்பைக்குள் இருந்த பணத்தையும் எடுத்துவந்த அவர் முன் இருந்த குறுமேசையில் வைத்தாள்.

''இந்தாங்க நீங்க கொடுத்த பணம். சரியா இருக்கான்னு எண்ணிப் பார்த்துட்டு எடுத்திட்டு கிளம்புங்க.''

மாயக்கண்ணன் யோசனையாய் மகனைப் பார்த்தார். அவன் பார்வையில் லேசான கோபம் தெரிந்தது. பற்களைக் கடித்துக் கொண்டு நின்றான். மகனின் மனம் புரிந்து போக, புன்னகையோடு ரோஜாவிடம் திரும்பினார்.

''அவசரப்படாதே குழந்த... நான் இந்த பணத்தை கேட்கவே இல்லையே''

''இது உங்கள் பணம். இதை தூக்கிக் கொண்டு ஓடியிருப்போம் என்று தானே தேடி வந்தீங்க. இதுல இருந்து ஒத்தை நோட்டைக்கூட நாங்க எடுக்கல்ல. தயவு செய்து எடுத்திட்டு வெளியே போங்க. நான் ஹாஸ்பிடலுக்கு போகணும்''

''மருத்துவச் செலவுக்கு இந்தப் பணம் தேவைப்படும்மா.''

''தேவையில்லை ஸார். எங்க அப்பாவை எப்படிக் காப்பாத்தணும்னு எனக்குத் தெரியும் நீங்க கிளம்புங்க''

''வெயிட் ராஜகுமாரி. நான் சொல்றதைக் கொஞ்சம்...''

''தயது செய்து கிளம்புங்க. எனக்கு ஆயிரம் வேலை இருக்கு'' வாசலை நோக்கி கை நீட்டினாள் ரோஜா. கௌதம் மௌனமாய் பிரபாகரனை பார்த்தான்.

''அப்பாவை அழைச்சிட்டுப்போ''

''எஸ் ஸார்'' என்றவன் மாயக்கண்ணனை பற்றி எழுப்ப மீண்டும் ரோஜாவிடம் ஏதோ பேசமுயன்றார் அவர். கௌதம் குரல் கொடுத்தான்.

''அப்பா! எதுவா இருந்தாலும் பிறகு பேசலாம். காருக்குப் போங்க'' மகனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு மௌனமாய் வெளியேறினர் இருவரும். கோபமாய் நின்று கொண்டிருந்தவளிடம் நெருங்கினான் கௌதம்.

''ஸாரி ராஜகுமாரி. அப்பாவை கவனித்துக்கொள்ளுங்கள். பிறகு பார்க்கலாம்''

''தயவு செய்து இனி ஒருமுறை என் பார்வையில் நீங்கள் படவேண்டாம்''

''ஏன்?''

''உங்களைப் பார்க்க நான் விரும்பவில்லை.''



## வெங்காய விஷயம்

ஜாவா, சுமத்ரா போன்ற தீவுகளில் வசிப்பவர்கள் நோயாளிகள் படுத்து இருக்கும் அறைகளில் நச்சுக் கிருமிகளை அழிக்கும் பொருட்டு, தினமும் வெங்காயத்தைப் போட்டு வைப்பார்கள்.

உலக அற்புதங்களில் ஒன்றாகிய பிரமிட் கோபுரங்களை கட்டிய தொழிலாளார்களுக்கு அவர்தம் உணவிற்காக வெங்காயம் வழங்கும் பொருட்டு 9 டன் பொன் செலவழிக்கப் பட்டதாக வரலாற்று ஏடுகள் புலப்படுத்துகின்றன.

எகிப்தியர்கள் வெங்காயத்தையும், வெள்ளைப் பூண்டையும் தெய்வமாக வணங்கினர்.

-ச.ஹேமலதா, திருச்சி.

"அதான் ஏன் என்று கேட்கிறேன்? என்னைப் பார்த்தால் உன் மனம் தடுமாறுகிறதா?"

"நான்சென்ஸ்"

"இப்படி மொட்டையாகச் சொன்னால் எப்படி? எனக்கு உண்மையான காரணம் தெரியவேண்டும்."

"தெரிய வேண்டுமா? சொல்கிறேன் கேளுங்கள் ஏன் இத்தனை துன்பத்திற்கும் காரணம் நீங்கள்தான்"

"என்ன? நானா? நான் என்ன செய்தேன்?"

"நீங்கள் நேற்று கோவிலில் சந்தித்து பேசியதுதான் இத்தனைக்கும் காரணம். அதை மாப்பிள்ளையின் தாய் பார்த்துவிட்டு என் அப்பாவிடம் தப்புத்தப்பாய் பேசி கல்யாணத்தை நிறுத்தியதால் தான் அப்பா இப்போது ஹாஸ்பிடலில் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார்"

"எனக்கு ஒரு விஷயம் புரியலையே" என்றவனை கோபமாய் முறைத்தாள்.

"அப்பாவுக்கு உடம்பு முடியலன்னு எம்மேல கோபமா? இல்ல கல்யாணம் நின்னுபோச்சேன்னு..."

"அந்த கண்றாவிக் கல்யாணம் நின்னுபோனதுல எங்க எல்லாருக்குமே சந்தோஷம்தான்."

"அப்போ என்னைப் பார்த்து பேசினது எல்லாம் நல்ல விஷயம்தானே?"

"என்ன?"

"ராஜகுமாரி. உங்கிட்ட நிறைய பேசணும். ஆனா அதுக்கான நேரம் இது இல்ல. நீ முதல்ல ஹாஸ்பிடல் கிளம்பு. ஏ.கே. ஹாஸ்பிடல் தானே பார்க்கலாம்."

"நான்..."

"ப்ளீஸ் ராஜகுமாரி. நம்ம சண்டையை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாம். வரட்டுமா?"

"ஒரு நிமிஷம். இந்த பணத்தை எடுத்திட்டு கிளம்புங்க."

"இதற்கு ஒன்றும் அவசரமில்லை.



ஹாஸ்பிடலுக்கு தேவைப்படும்."

"தேவையில்லை. எனக்கு உங்க உதவி வேண்டாம். எங்ககிட்ட பணம் இருக்கு. நீங்க எடுத்திட்டு போகலாம்."

"கோபப்படாதே ராஜகுமாரி."

"இது கோபம் இல்ல தன்மானம். கேவலம் ஒரு அஞ்சலட்சரூபா பணத்துக்காக உங்க அப்பா பேசின பேச்சை கேட்டீங்கள்ல?"

"நோ ராஜகுமாரி. அப்பா பேசினதுக்கு ஆயிரம் காரணம் இருக்கு. பட்! உங்க அப்பா மேல் நம்பிக்கை இல்லாமல் நாங்கள் இங்கு வரவில்லை."

"அப்புறம்?" நக்கலாகவே கேட்டாள்.

"உங்க அப்பாவை எங்களுக்கு ரொம்ப வருஷமாத்தெரியும். இப்பக் கட்டிட்டு இருக்கிற லாட்ஜிக்கு இடம் பார்த்து முடிச்சது கூட சுந்தரமூர்த்தி ஸார்தான். இந்த இடம் கூட எங்களுக்கு திருப்தியா இருந்ததால்தான் வாங்க ஒத்துக்கிட்டோம்.

நேற்று உன் போன் வந்ததும் ஏதோ பிரச்னை என்று புரிந்தது. அதனால்தான் அப்பாவிடம் சொன்னேன். பலமுறை போன் செய்தும் யாரும் அட்டென்ட் பண்ணவில்லை என்றதும்..."

"நம்ம பணத்தோடு எஸ்கேப் ஆகிவிட்டார்கள் என்ற பயந்துபோய் விடிந்ததும் ஓடிவந்தீர்களாக்கும்?"

"என்ன நீ பணம் பணம் என்கிறாய்?"

"இந்த பணத்திற்குத்தானே உங்க அப்பா அத்தனை பேச்சு பேசினார்?"

"ம்ச்! இப்போது உன்னிடம் எது சொன்னாலும் எடுபடாது. நீ கோபத்திலும் பதட்டத்திலும் இருக்கிறாய். முதலில் உன் அப்பா குணமாகி எழட்டும். என்னைப்பற்றியும் என் தந்தையைப் பற்றியும் அவரிடமே கேட்டு தெரிந்துக்கொள். நான் கிளம்புறேன்"

"உங்க பணம்..."

"எடுத்துக்கிறேன்" என்றவாறு பணத்தை கையில் எடுத்துக்கொண்டு திரும்பியும் பாராமல் வெளியேறியவனைக் கண்டதும் மனம் லேசாய் வலிக்கத்தான் செய்தது. கோபித்துக்கொண்டானோ?

மறுகணமே அவனது தந்தையின் பேச்சு நினைவு வர முகம் கருத்தது. போகட்டுமே! எனக்கென்ன வந்தது? அலட்சியமாய் வீட்டுக்குள் நுழைந்தாள்.

## ▸▸▸ 10 ◂◂◂

ஒரு வானவில்போல - என்
வாழ்விலே வந்தாய் - உன்
பார்வையால் எனைவென்றாய்

என்னுயிரிலே நீ கலந்தாய்!

வேலைகளை முடித்து, நகைகளை மொத்தமாய் எடுத்து பத்தரப்படுத்தி, வீட்டைப் பூட்டிக்கொண்டு ஆட்டோ கிடைக்காமல் பஸ்பிடித்து இடிபட்டு நைந்துபோய் ஒருவழியாக மருத்துவமனையை அடைந்த போது மணி பத்தாகியிருந்தது.

அரக்க பரக்க உள்ளே நுழைந்தவளை வாசலிலே நின்று பதட்டமாய் எதிர்கொண்டான் சங்கர்.

''ஏங்க்கா இவ்வளவு நேரம்? உனக்கு என்னவோ ஏதோன்னு பயந்திட்டேன் நான்''

''சங்கர்! ரொம்ப லேட்டாகிப் போச்சே. டாக்டர் எதுவும் சொன்னாங்களா? நகையைத்தான்டா கொண்டுவந்தேன். இதை எப்போ வித்து பணமாக்கி ஹாஸ்பிடல்ல கட்டுறது?'' வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே பதறியவளின் கைப்பற்றி மாடியை நோக்கி அழைத்துச் சென்றான்.

''பதறாம வாக்கா. அப்பாவுக்கு ஆபரேஷன் நடந்திட்டு இருக்கு''

''என்ன?'' நடந்து கொண்டிருந்தவள் நின்றாள். விழிகள் வியப்பால் விரிந்தது.

''தம்பி! என்னடா சொல்ற? எப்படி? எப்படி ஆபரேஷன் பண்ண ஒத்துகிட்டாங்க?''

''எனக்கும் ஒன்னும் புரியலக்கா. ஒரு லேடி டாக்டர் வந்தாங்க. உங்க அப்பாவை ஆபரேஷன் தியேட்டருக்கு கூட்டிட்டு போகணும்னு சொல்லி சில பேப்பர்ல கையெழுத்து வாங்கினாங்க.

''லேடி டாக்டரா?''

''ம்... ஹார்ட் ஸ்பெஷலிஸ்டாம். அவங்கதான் ஆபரேஷன் பண்ணுவாங்க போலிருக்கு''

''பணத்தைப் பத்தி எதுவுமே கேட்கலியா?''

''இல்லக்கா. மெடிஸன் கூட எதுவும் வாங்கச்சொல்லல. நர்ஸ் தான் நிறைய மருந்தெல்லாம் உள்ளே கொண்டு போனாங்க.''

''அது எப்படி? டாக்டர் சொன்னாரே. பணம் கட்டினபிறகு தான் ஆபரேஷன் தொடங்குவோம்னு. இப்ப எப்படி ஆரம்பிச்சாங்க? குழப்பமா இருக்கே?'' நெற்றியைத் தேய்த்துக் கொண்டே நின்றவளை அசைத்தான் சங்கர்.

''ஆபரேஷன் முடிஞ்சதும் டாக்டர்ஸ் வெளியே வருவாங்கள்ல அப்ப அவங்களே சொல்லப்போறாங்க. நீ வாக்கா''

''அம்மா? அம்மாவுக்கு எப்படி இருக்கு சங்கர்?''

''ம்... கண்விழிச்சிட்டாங்க... அப்பாவை ஆபரேஷன் தியேட்டருக்கு கூட்டிட்டு போறாங்கன்னதும் கூடவே எழுந்து வந்திட்டாங்க. இப்ப மாடியில'' தான் இருக்காங்க.''

''தெம்பா இருக்காங்களா?''



''ம்... காபி கொடுத்தேன். டிபன் வேண்டாம்னு சொல்லிட்டாங்க. அப்பாவுக்கு நல்லபடியா ஆபரேஷன் முடிஞ்சாத்தான் சாப்பிடுவங்களாம்'' சொல்லிக்கொண்டே படிக்கட்டில் ஏறி, நீளமான வராந்தாவைக் கடந்த ஆபரேஷன் தியேட்டர்' என்ற ஆங்கில எழுத்துக்களோடு நிலையில் சிவப்பு நிற விடிவிளக்கோடு நின்ற அறையை அடைந்தனர்.

வாசலருகே போடப்பட்டிருந்த இரும்பு நாற்காலியில் துவண்டு சரிந்திருந்தாள் தேவகி. இருகரங்களும் இறைவனை வணங்கிக் கொண்டிருக்க, கண்களில் வழியும் நீரோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தாள். உதடுகள் ஏதோ மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்தது. தாயை நெருங்கி தோளில் கைவைத்தாள் ரோஜா.

''அம்மா'' மகளின் தொடுதலோ அழைப்போ அவளை அசைக்கவில்லை. நீண்ட தவத்தில் ஆழ்ந்திருந்தாள் தேவகி. சங்கர் தமக்கையிடம் கண்ணசைத்தான். ''வேண்டாம்! தொந்தரவு செய்யாதே''

ஒரு பெருமூச்சோடு தாயின் தோளிலிரந்த கரத்தை எடுத்துக் கொண்டாள். கொண்டு வந்திருந்த கூடையோடு தம்பியை நெருங்கினாள். தாயை விட்டு சற்று நகர்ந்து நின்று கிசுகிசுப்பான குரலில் தம்பியை அழைத்தாள்.

''சங்கர்''

''என்னக்கா?''

''நகையெல்லாம் கொண்டு வந்திருக்கேனே. இதை என்ன பண்றது?''

''அதை பத்திரமா வையுக்கா. ஆபரேஷன் முடிஞ்சபிறகு எவ்வளவு பணம் ஆச்சின்னு கேட்டுட்டு அடகுவெச்சிக்கலாம்.''

''சரி''

''எவ்வளவுக்கா இருக்கு?''

''எல்லாம் மொத்தமா ஒரு முப்பத்தி ஆறு சவரன் இருக்கும்''

''சரி... கூடை பத்திரம். கீழே வெச்சிடாதே''

''சரி... சரி...''

''அக்கா! நீ ஏதாவது சாப்பிட்டு வந்தியா?''

''ம்பீச்! அதற்கெல்லாம் டயமிலலடா. பசியும் இல்ல. முதல்ல ஆபரேஷன் முடியட்டும்.''

''ம்... அப்புறம் அந்த லேண்ட் பார்ட்டிக்கு போன் பண்ணி சொல்லிட்டியா?''

''அது... சங்கர்! அந்த பார்ட்டி யார்னு தெரியுமா?''

''யாரு?''

''அதாண்டா! அந்த...'' ரோஜா துவங்கும் போதே அறைக்கதவு திறக்க, இருவரும் பதட்டமாய்த் திரும்பினர். அதற்குள் தேவகியும் தள்ளாடியவாறே எழ, தாயை இருவரும் பற்றிக்கொண்டனர்.

பச்சை நிற ஆடையில் மருத்துவர் முகத்தை மூடிய மாஸ்க்கோடு வெளியே

வர, இரண்டாவதாய் வந்த பெண் மருத்துவர் தனது மாஸ்க்கை கழற்றியவாறே புன்னகைத்தார்.

"தேவகியம்மா! உங்க கணவர் நல்லபடியா பொழைச்சிக்கிட்டார். ஆபரேஷன் சக்சஸ்"

"மகமாய்" கை கூப்பினாள் தேவகி.

"டாக்டர்! அப்பாவை நாங்க பார்க்கலாமா?"

"இப்ப வேண்டாம். வார்டுக்கு கூட்டிட்டு போனபிறகு பார்க்கலாம்."

"தேங்க்யூ டாக்டர்"

"ஓ.கே. இன்னும் ட்டு அவர் கழிச்சு வந்து பார்க்கிறேன்" என நகர முயன்றவளைத் தடுத்தாள் ரோஜா.

"ஒரு நிமிஷம் டாக்டர்"

"யெஸ்"

"ஆபரேஷனுக்கு எவ்வளவு பணம் கட்டணும் சொன்னீங்கன்னா..."

"பணம் கட்டியாச்சே"

"என்ன?"

"சுந்தரமூர்த்தி தானே பேஷண்ட்டோட நேம்"

"ஆமா"

"மார்னிங் செவன் ஓ கிளாக்கே இவர்பேர்ல த்ரீலாக்ஸ் பே பண்ணியிருந்ததே. ரிசிப்ட் தரலையா?"

"மூனு லட்சமா? மேடம்! நான்... இன்னும் பணமே கட்டலையே... வேறயார் பணம் தந்தது?"

"அதை மிஸ்டர் கௌதம் கிட்டத்தான் நீங்க கேட்கணும்"

"வ்வாட்?"

"ம்... அவரோட பி.ஏ.ன்னு ஒருத்தர் வந்துதான் கேஷ் கட்டிட்டுப் போனாரு."

"எ... எப்போ?"

"அதான் சொன்னேனே ஏழு மணிக்குன்னு..."

"ஏழு மணிக்கா?" அப்போது அவன் தன் வீட்டில்தானே இருந்தான்? பிறகெப்படி இங்கு வந்து பணம் கட்டியிருக்க முடியும்" திகைத்து நின்றவளைப் பார்த்து புன்னகைத்தாள் உமா.

"என்னாச்சு மிஸ் ரோஜா?"

"நோ... டாக்டர். ஒரு சின்ன கன்ப்யூஷன்"

"எந்தக் குழப்பமும் வேண்டாம் உங்களுக்கு. இன்னிக்கு மார்னிங் ஒரு ஆபரேஷன் இருக்குன்னு எனக்குத் தெரியும். பட் அதை நான்தான் செய்யணும்னு பணம் தானே வந்து சேரும்னு என் பிரதர் கிட்ட இருந்து ஒரு போன் வந்தது. உடனே நான் புறப்பட்டு ஹாஸ்பிடலுக்கு வந்திடடேன்.



நான் வரும்போதே பிரபாகர் பணத்தைக் கட்டிட்டார். உடனே ஆபரேஷனைத் தொடங்கிட்டோம். ஆபரேஷன் சக்சஸ்ஸுன்னு முதல்ல என் பிரதருக்கு போன் பண்ணனும். ரொம்ப டென்ஷனோட வெயிட் பண்ணிட்டு இருப்பான். வரட்டுமா?"

"ஓ... ஒன் மினிட் மேடம்"

"சொல்லுங்க"

"வந்து... உங்க பிரதர்... யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"கௌதமன். அவரோட ஒரே சிஸ்டர் நான். எம்பேர் உமா" அவள் சிரித்துக்கொண்டே சொல்ல, ரோஜாவின் உடல் ஒருமுறை உதறிக்கொண்டது. பேச்சற்றுப் போனாள்.

"மிஸ்டர் சங்கர்! முதல்ல உங்க அக்காவை ஏதாவது சாப்பிட வையுங்க. பாவம்! காலையில இருந்து ரொம்ப டென்ஷனாவே இருந்திருப்பாங்க. தேவகியம்மா! நீங்களும் சாப்பிட்டு மாத்திரை போடுங்க. நான் அப்புறமா வந்து பார்க்கிறேன்." என்றவாறு உமா விலகிச்செல்ல. ரோஜா இன்னும் அசையாமலேயே நின்றாள்.

"அக்கா! அக்கா"

"ம்?" திடுக்கிட்டுத் திரும்பினாள்

"என்னாச்சுக்கா? ஆமா அந்த லேடி டாக்டர் யாரைச்சொல்லிட்டு போறாங்க? கௌதம்னா..."

"சங்கர்! நீ முதல்ல அம்மாவை ரூமுக்கு அழைச்சிட்டு போ ஏதாவது சாப்பிட வாங்கிக்கொடு."

"நீ?"

"நான் அப்பாவை வெளியே கொண்டு வர்ற வரைக்கும் இங்கே உட்கார்ந்திருக்கேன். நீ அம்மாவைக் கூட்டிட்டு போ"

"நானும் இங்கேயே இருக்கேம்மா"

"அம்மா! உங்களுக்கு மாத்திரை போடணும். நீங்க போங்க. நான் அப்பாவை ஒருவாட்டியாவது பார்த்திட்டு வந்திடுறேன். போங்கம்மா. கூட்டிட்டு போ சங்கர்."

"வாங்கம்மா போலாம். நீங்க சாப்பிட்டு மாத்திரை போடுறதுக்குள்ள அப்பாவைக் கூட்டிட்டு வந்திடுவாங்க. அப்போ பார்க்கலாம். சங்கர் தாயை சமாதானம் செய்தவாறே அழைத்துச் செல்ல, நாற்காலியில் அமர்ந்து

இதயநிலா

ஆசிரியர்:
கருப்பையா நாகராஜன்
உதவி ஆசிரியர்:
அன்புமீனா
நிர்வாகம்:
N.மகேஸ்வரன்
விளம்பர நிர்வாகம்:
எம்.இளமாறன்
வடிவமைப்பு
கலை கிராபிக்ஸ்
கவிதா ஆப்செட்
நிர்வாக அலுவலகம்:
இதயம் மீடியா
எண் 12, அண்ணாநகர் பிளாசா,
C-47, 2வது அவென்யூ,
அண்ணாநகர்,சென்னை-40.
9551296661, 9551286664
mail: idhayammedia@gmail.com

தலையை இறுகப்பற்றிக் கொண்டாள் ரோஜா.

எப்படி? எப்படி இதெல்லாம் நடந்தது. நான் பேசியதில் கோபப்பட்டுத்தானே வெளியேறினான்? பிறகு எப்போது போன் செய்தான்? எப்படி பணம் கட்டினான்? அவன் பணம் கட்டவேண்டிய அவசியம் என்ன? என்ன நடக்கிறது இங்கே? வரிசையாய் தோன்றிய கேள்வியில் தலை இன்னும் பலமாய் வலித்தது.

''ஹாய் ராஜகுமாரி'' காதோரமாய் கிசுகிசுப்பாய் ஒலித்த குரலில் துள்ளி நிமிர்ந்தாள் ரோஜா. அவன்தான். அவனேதான். எப்போதும் போல் ஆளை அசத்தும் புன்னகையோடு நின்று கொண்டிருந்தான்.

ரோஜாவிற்கு படபடப்பு அதிகரிக்க... எழ முயற்சித்தும் கால்கள் ஒத்துழைக்க மறுத்தன. அவளின் நிலை உணர்ந்து தானும் அவளருகே அமர்ந்து கொள்ள, ரோஜாவின் இதயத்துடிப்பு எகிறியது.

''நீ... நீங்க... இங்க... எங்கே?''

''மிஸ்டர் சுந்தரமூர்த்தியை பார்த்திட்டு போகலாம்னு வந்தேன்''

''ம்...''

''உன்னைப் பார்க்க வரவில்லை என்று சொன்னேன்?'' அவன் சற்று அழுத்தமாய்ச் சொல்ல, முகம் கடுக்க, சட்டென எழுந்தாள் ரோஜா.

''நாங்கள் ஒன்றும் யாரையும் எதிர்பார்த்து காத்திருக்கவில்லை.''

''இல்லையே... எதிர்பார்த்திருப்பாயே... என்னைப் பார்க்க வேண்டும் என்று...''

''நோ''

''யெஸ். என்னிடம் நாலு கேள்வியாவது கேட்கவேண்டும் என்று நினைத்திருப்பாயே! உண்டா இல்லையா?''

''ஆமாம்... உங்களை யார் பணம் கட்டச்சொன்னது?''

''உனக்கு வேண்டுமானால் உன் அப்பாவின் மேல் அக்கறை இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கும் என் அப்பாவிற்கும் சுந்தரமூர்த்தி மீது அக்கறையும் மதிப்பும் எப்போதும் உண்டு''

''என்ன? எனக்கு என் அப்பாவின் மேல் அக்கறை இல்லையா?'' சிறியவளை அலட்சியமாய் ஒதுக்கினான் கௌதம்.

''ஆமாம்! ஆமாம்!''

''எ...ன்ன?''

''ஆமா... அக்கறை இருந்தா ஒழுங்கா நான் சொன்னதும் பணத்தை எடுத்துவந்து ஹாஸ்பிடலில் கட்டியிருப்பாயே... செய்தாயா நீ?''

''உங்கள் பணம் ஒன்றும் எனக்குத் தேவையில்லை. நானே நகைகளை எடுத்திட்டுத்தான் வந்தேன்''

''போ... ஒவ்வொரு கடையா ஏறி இறங்கு. அப்பத்தெரியும் நகையை விற்பது எவ்வளவு சிரமம் என்று. உன் அப்பாவின் உயிர் அதுவரைக்கும்



துடித்துக்கொண்டிருக்க வேண்டுமா? வயதான மனிதராயிற்றே. ஏதேனும் அசம்பாவிதம் நடந்திருந்தால்...''

''ஐயோ'' பதறி காதை மூடிக்கொண்டாள் ரோஜா.

பயத்தில், அவளது முகம் வெளிரியிருந்தது. புன்னகையோடு அவளது கைகளை விலக்கினான். ''இதே முகத்தோடு நீ போய் நகையை விலைபேசியிருந்தேன்னு வை. சந்தேகமேயில்லாம அதை திருட்டு நகைதான்னு முடிவு பண்ணி போலீஸூக்கு போன் செய்திருப்பாங்க. அப்புறம்...''

''போதும். இப்ப ஏன் இப்படியெல்லாம் பேசி பயமுறுத்துறீங்க?''

''இந்த மாதிரி உனக்கு எந்த கஷ்டமும் வந்திடக்கூடாதுன்னு தான் இந்த பணத்தை எடுத்திட்டு ஹாஸ்பிடலுக்கு போன்னு சொன்னோம். நீதான் கேட்கவில்லை.''

''என்னை என்ன மானரோஷம் இல்லாதவன்னு நினைச்சீங்களா?''

''ஹேய்! என்ன இது?''

''உங்க அப்பா பேசினதையெல்லாம் கேட்டுட்டு உங்கிட்டயே கைநீட்டி

LIC LIC OF INDIA
GET REGULAR MONTHLY INCOME
• Bright career • endless income
• Value added work • Full time/ part Time
• All Segment Persons can join as an advisor
• No Risk - No Investment
• Convert Your Contacts in to Huge Regular monthly income.
Contact:
K. MOHANRAJ
DEVELOP MENT OFFICER
98840 27940, Mail: k.mohanrajdevpt@g-mail.com


பணம் வாங்குவேன்னு எப்படி மிஸ்டர் நீங்க நினைச்சீங்க?''

''ராஜகுமாரி! இப்பவும் சொல்றேன். அப்பா பேசினதுக்கு வேற காரணம் இருக்கு.''

''என்ன பொல்லாத காரணம்? ஒரு அஞ்சுலட்சருபாயை கொடுத்திட்டு என் அப்பாமேலே நம்பிக்கை இல்லாமத்தானே எங்க வீடுதேடி வந்தீங்க? இப்ப மட்டும் எந்த நம்பிக்கையில பணத்தை கட்டுனீங்க? இல்ல இந்த மூனு லட்ச ரூபாய்க் கட்டிட்டு எங்க இடத்தை அப்படியே அமுக்கிடலாம்னு உங்க அப்பா சொல்லிவிட்டாரா?'' சற்று ஏளனமாகவே ரோஜா கேட்க, கௌதமின் முகம் இருண்டது.

ஆத்திரமாய் எழுந்து அவளை முகத்தைப் பற்றித் திருப்பினான். அவனது ஆவேசம் கண்டு வெலவெலத்துப்போனவளை சில கணங்கள் உற்றுப் பார்த்துவிட்டு உதறினான்.

''அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படும் கேவலமானவர்கள் என்று நினைத்தாயா? இல்லையென்றால் ஏமாற்றி அடுத்தவரின் வயிற்றில் அடிக்கும் நயவஞ்சகர்கள் என்று நினைத்தாயா?''

''கௌ...த...ம்''

''நாங்கள் நினைத்திருந்தால் இந்த இடத்தை எப்படி வேண்டுமானாலும் வாங்கியிருக்கலாம். உனக்கு தெரியப்படுத்தாமலேயே இன்று பத்திரத்தை பதிவு செய்திருக்கலாம். தெரியுமா?''

திகைப்பாய் அவனை ஏறிட்டாள் ரோஜா. மென்மையும் குறும்பும் தவழ்ந்த அவனது முகம் கடுமையாய் மாறியிருந்தது. அதைக் காணவே அச்சப்பட்டுப் போனாள்.

''நீ நினைப்பது போல் ஏமாற்றிப் பிழைப்பது எங்கள் தொழிலாக இருந்திருந்தால் என் பணத்தைக் கொண்டு வந்து மருத்துவமனையில் கட்டிவிட்டு இப்படி உன்னிடம் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருக்கமாட்டேன்.

உங்களிடம் இருந்து எந்த ரெஸ்பான்ஸும் இல்லையென்றதும் என்னிடம் முன்பணம் வாங்கிவிட்டு தலைமறைவாகிவிட்டார் என்று உன் அப்பாவின் மீது என்னால் புகார் செய்திருக்க முடியும். ஆனால் அப்படி நான் செய்யமாட்டேன்.

ஏன்னா ஒரு உயிரோட மதிப்பு எனக்கும் தெரியும். ஒரு குடும்பத்துக்கு தந்தையோட அவசியம் எவ்வளவு முக்கியம்னு எனக்குத் தெரியும். அதை உணர்வு பூர்வமா உணர்ந்தவன் நான். சாவோட விளிம்புல போராடிட்டு இருந்த என் தந்தையை மீட்டுக்கொண்டு வர நான் பட்டப்பாடு எனக்கு இன்னும் மறக்கல.

எங்க அப்பாவைப் பத்தி உனக்கு என்ன தெரியும்? அவர் எப்படி வாழ்ந்த மனிதர் தெரியுமா? இப்ப எப்படி இப்படி ஆனார்ன்னு தெரியுமா? நடக்கிறதுக்கும் சாப்பிடறதுக்கும் கூட இன்னொருத்தர் உதவி வேண்டும் என் அப்பாவுக்கு. இந்த அளவுக்கு அவரை முடக்கிப்போட்டது எது தெரியுமா?

அவன் தொடர்ச்சியாய் கேட்க கேள்விகளால் திணறிப்போனாள் ரோஜா.



அவன் முகத்தைவிட்டு பார்வையை விலக்காமல் கண்களில் பயத்தோடு அசையாமல் நின்றாள்.

''நீ எங்க மேல வைக்காத நம்பிக்கையை அளவுக்கு அதிகமாக தன்னோட நண்பர் மேலே என் அப்பா வைத்ததுதான் இன்றைக்கு அவரை இந்த நிலைக்கு தள்ளியிருக்கு. எங்க அப்பா யார்ன்னு தெரியுமா உனக்கு?

அன்றைக்கு வேலைகேட்டு போனாயே ஹோட்டல் சொர்க்கபுரி. அதோட உண்மையான உரிமையாளர் என் அப்பாதான்.''

''எ...ன்...ன?''

''நண்பன் மேல உள்ள அதீத நம்பிக்கையை அந்த சொர்க்கபுரியோட பொறுப்பை மிஸ்டர் சபாபதி கிட்ட ஒப்படைச்சார். என் அப்பாவோட நட்பை நம்பிக்கையை சபாபதி ரொம்ப சாமர்த்தியமா பயன்படுத்தி அந்த சொர்க்கப்புரிக்கே ஓனராகிட்டார்.

சொத்து பறிபோனது கூட என் அப்பாவை பாதிக்கவில்லை. ஆனா உயிருக்கு உயிரான நண்பன் ரொம்ப சாமர்த்தியமா ஏமாத்தின வலியைத்தான் அப்பாவால தாங்க முடியவில்ல. அந்த அதிர்ச்சியில ஸ்ட்ரோக் வந்து சாவோட போராடினவரை இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா மீட்டுட்டு வர்றேன்.

ஏமாத்திறது எத்தனை கேவலமான செயல்ன்னு அனுபவபூர்வமா உணர்ந்தவன் நான். அதனால நீ இதை மாதிரி இனிமே பேசி என்னை அவமானப்படுத்தாதே. சுந்தரமூர்த்தி ஸார் எங்களுக்கு நிறைய ஹெல்ப் பண்ணியிருக்கார். அந்த உதவிக்கு பிரதிபலனாத்தான் இந்த உதவியைச் செய்தோம். உனக்காக இல்லை'' என்றவாறு அழுத்தமாய்ச் சொன்னவனை பிரமிப்பு மாறாமல் பார்த்துக்கொண்டே நின்றாள் ரோஜா.



கொசு ஒரு முறை கடிக்கும் பொழுது தன்னுடைய எடையைப் போல் ஒன்றரை மடங்கி எடை இரத்தத்தை உறிஞ்சுகிறது.
-டி.பச்சமுத்து, கிருஷ்ணகிரி.

அவளது முகத்தைப் பார்த்தவனது சினம் சற்று தணிந்துவிட, முகம் மீண்டும் இயல்பாக மாறியது. ''என்ன பயந்திட்டியா? சரி. நான் கிளம்புறேன். அப்பாவை பார்த்துக்கோ. வரட்டுமா?'' சிலையாய் நின்றவளின் கன்னங்களை லேசாய் தட்டிவிட்டுச் சென்றான் கௌதம்.

ரோஜா என்ற சிலைக்கு உயிர்வந்தது. அவன் தட்டிவிட்டுச் சென்ற கன்னம் பனிக்கட்டியாய் குளிர, சில்லிட்டுப்போனாள்.

****

விழியில் என் விழியில்

வந்து விழுந்தாய் அந்த
நொடியில் என்எதிர்காலம்
நீதான் என்று உயிர் சொன்னதே!

காரை விட்டு இறங்கி வீட்டிற்குள் நுழைந்த மகனை, மகளின் உதவியோடு சாப்பிட்டுக் கொண்டிருந்த மாயக்கண்ணன் தன் அருகே வருமாறு அழைத்தார். புன்னகையோடு தந்தையை நெருங்கினான் கௌதம்.

''என்னப்பா?''

''உட்காருப்பா. நீயும் சாப்பிடு''

''இருக்கட்டும்ப்பா. நான் அப்புறமா சாப்பிடுறேன்''

''ஏன்? இப்ப சாப்பிட்டா என்னவாம்?'' என்றாள் உமா தந்தையின் வாயைத் துடைத்துக்கொண்டே.

''பசிக்கலடா. ஆமா! நீ எப்போ வந்தே?''

''நான் வந்து இரண்டு மணிநேரமாச்சு. நீ எங்கே போய் சுத்திட்டு வர்றே?''

''ஏய்! நான் ஒன்னும் பொறுப்பில்லாம ஊர்சுத்திட்டு வரல்ல. ஹோட்டலுக்குத் தான் போயிட்டு வர்றேன்.''

''யாரு? நீயா? ஆமா... நம்ம ஹோட்டலை எப்போ ஏ.கே.ஹாஸ்பிடலுக்கு மாத்தின?''

''மாயக்கண்ணன் வியப்பாய் மகளிடம் திரும்பினார். ''உமா! என்னம்மா சொல்ற?''

''ஆமாம்பா! இப்ப ஒரு பத்து நாளா எங்க ஹாஸ்பிடலைத்தான் துரை சுத்திசுத்தி வர்றார். என்னன்னு கேளுங்கப்பா''

''என்னப்பா! உன் தங்கை சொல்றதெல்லாம் உண்மையா?''

''ஏம்ப்பா இவசொல்றதெல்லாம் நம்பி என்னை விசாரிக்கணுமா?'' அலட்சியமாய் சொல்லிவிட்டு எழ முயன்றவனை கோபமாய் பிடித்து அமர வைத்தாள் உமா.

''டேய்! எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லு நீ எங்க ஹாஸ்பிடலுக்கு வரல?''

''ம்... வந்திருப்பேன். உன்னைப் பார்க்கலாம்னு...''

''கதைவிடாதே. நான் ட்யூட்டியில இல்லாத நேரம்தான் நீ போயிருக்கே.''

''சரி! சுதாகரை பார்க்கப் போயிருப்பேன்''

''யாரை? என் புருஷனையா? அவர் மெடிக்கல் கான்ப்ரன்ஸுக்காக ஊட்டி போய் ஒன் வீக் ஆகுது. இந்த ரீல் விடுற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம். ஒழுங்கா நான் கேட்கிற கேள்விக்கு மட்டும் பதிலைச் சொல்லு.'' உமா மிரட்டலாய்ச் சொல்ல, பவ்யமாய் கைகளைக் கட்டிக்கொண்டான்.

''கேளுங்க டாக்டர்''



''அடிக்கடி ஹாஸ்பிடலுக்கு வர்றியாமே''

''ஆமா டாக்டர்''

''ஏன்டா? உனக்கு அங்கே என்னவேலை?''

''என் தங்கை சின்சியரா ஒர்க் பண்றாளான்னு பார்க்க வந்தேன்.''

''தலையில ஓங்கி குட்டுவேன். ஒழுங்கா பதில்சொல்லு.''

''சொல்றேன் டாக்டர். எங்க அப்பாவின் நண்பரை உங்க ஹாஸ்பிடல்லதான் அட்மிட் பண்ணியிருக்கு. அதான் பார்த்திட்டு நலம் விசாரிக்க வந்தேன்.''

''தினமுமா விசாரிப்ப?''

''ஒரு அக்கறை தான்.''

''யார் மேல?''

''சு... சுந்தரமூர்த்தி மேலதான்.''

''இல்லையே. உன் அக்கறையெல்லாம் அவர் பொண்ணு மேலேதான்னு சொல்றாங்களே''

''நோ டாக்டர்''

''ஏய்! பொய் சொல்லாதே''

''அவங்க பேமிலியில உள்ள எல்லார் மேலயும் எனக்கு அக்கறை இருக்கு''

''கேட்டீங்களாப்பா? இவருக்கு அவங்க குடும்பத்து மேலே உள்ள அக்கறையாம்''

''அது மட்டுமில்ல டாக்டர். எங்குடும்பத்து மேலயும் உள்ள அக்கறையாலத்தான் அங்கே அடிக்கடி வர்றேன்.''

''இது என்ன புதுக்கதை?''

''இல்ல டாக்டர். என் தங்கை ஒரு வீம்புக்காரி. தான் நினைச்சதை சாதிக்கணும்னு ஒரே பிடிவாதம்...''

''டேய்! என்னை ஏன் இதுல இழுக்கிற?''

''உண்மையைத் தான் சொல்றேன். எனக்கு கல்யாணம் ஆன பிறகுதான் நான் குழந்தை பெத்துப்பேன்னு என் தங்கை அடம்பிடிக்கிறாள். சீக்கிரமே குழந்தை பெத்துக்கணும்னு என் மாப்பிள்ளை ஆசைப்படுகிறார்.''

''டேய்...''

''அதோட என் அப்பாவும் என்னைக் கல்யாணக் கோலத்திலே பார்க்கணும்னு ரொம்ப ஆசைப்படுறாங்க. ஸோ! இவங்க எல்லாருடைய ஆசையையும் நிறைவேத்தலாம்னு முடிவு பண்ணிட்டேன்.'' கௌதம் தீர்மானமாய்ச் சொல்ல, உமாவின் முகம் மலர்ந்தது.

''வாவ்! என்ன அண்ணா சொல்ற?''

''யெஸ்! கூடிய சீக்கிரமே நீ அம்மா ஆகப்போறே.''

''ம்ப்ச்! நான் அதைக் கேட்கல. நீ கல்யாணம் பண்ணிக்கபோறியா?''

"யெஸ்"

"யாருண்ணா பொண்ணு? அந்த ரோஜாவா?"

"பரவாயில்லையே. உன் மூளைகூட கொஞ்சம் வேலை செய்கிறதே"

"உன் மூளையை விட எனக்கு மூளை அதிகம்தான். அதான் எல்லா விஷயத்தையும் உன் வாயால் சொல்லவைத்தேன்"

மாயக்கண்ணன் செருமிக்கொண்டார். "உங்கள் இருவரை விட என் மூளைக்கு கூர்மை அதிகம்"


"அப்பா"

"இந்தப் பய மனசு எனக்கு எப்பவோ புரிஞ்சுபோச்சு. சரி... அவனே சொல்லட்டும்ன்னு வெயிட் பண்ணினேன்."

"அப்பா! இதுல உங்களுக்கு ஒன்னும் ஆட்சேபணை இல்லையே."

"இருக்கு"

"அப்பா" அண்ணன் தங்கை இருவரும் அதிர்ந்தனர்.



ஜப்பானில் 'கோசி' என்ற இடத்தில் காணப்படும் 'அனகடோரி' என்ற இனச் சேவல்களுக்கு 20 அடி நீளமான வால் இறகு உண்டு. உயரமும் அதிகம்.

-ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி.

"அந்தப் பொண்ணு அன்னிக்கு எங்கிட்டயே ரொம்ப கோபமா பேசினாளேடா."

"நீங்க மட்டும் அன்னிக்கு பேசினது சரியா? உண்மையைச் சொல்லப்போனா அவ இன்னும் கோபமாத்தான் இருக்கா. நான்தான் போய் அவகிட்ட பேசிட்டு இருக்கேன்."

"என்ன சொல்றீங்க ரெண்டு பேரும்?"

"அது ஒரு கதை. எனக்கு இப்ப பசிக்குது. சாப்பாடு போடு."

"முதல்ல அந்தக்கதையைச் சொல்லு. அப்பத்தான் சாப்பாடு கிடைக்கும்"

"ம்... பாவம்தான் சுதாகர்."

"அண்ணா! பேச்சை மாத்தாதே. விஷயத்தைச் சொல்."

"விஷயம் ஒன்னும் பெரிசில்லம்மா. அன்னிக்கு..." கௌதம் சொல்லத் துவங்க, உமாவின் செல்போன் கிணுகிணுத்தது. டேபிள் மீது இருந்த போனை எடுத்துப் பார்த்துவிட்டு புன்னகைத்தாள்.

"அப்பா! அவர்தான் பண்றார்."



"போடாக்கண்ணு. போய்ப் பேசு"

"ம்" என்றவாறே போனோடு அவள் விலக, தந்தையிடம் திரும்பினான் கௌதம்.

"அப்பா! உங்களுக்கு அந்தப்பொண்ணை பிடிக்கலையாப்பா?"

"உனக்கு பிடிச்சிருக்காப்பா?"

"ம்... ரொம்ப பிடிச்சிருக்குப்பா... முதன்முதலா அவளை நம்ம ஜூஸ் கார்னர்லதான் பார்த்தேன். எவ்வளவு இயல்பான அழகு. அமைதியான முகம். என்னவோத் தெரியலப்பா. அப்பவே அவளை ரொம்ப பிடிச்சிப்போச்சு. அதுக்கப்புறம் அடிக்கடி அவளைப் பார்க்க சான்ஸ் கிடைச்சது. அவளைப் பார்க்கும் போதெல்லாம் மனசு லேசாகி மிதக்கிற மாதிரி இருந்ததுப்பா.

இதையெல்லாம் விட, நாம வசதியானங்கன்னு தெரிஞ்சும்கூட அவ எங்கிட்ட ஒருநாள்கூட வழியல்ல. அதே மிடுக்கு. அதே கோபம். நம்ம பணத்தை தூக்கிக் கையில கொடுத்தா பாருங்கப்பா. அந்த நிமிஷமே முடிவு பண்ணிட்டேன். வாழ்ந்தா இவ கூடத்தான் வாழணும்னு."

"ஓ! முடிவே பண்ணிட்டியாப்பா?"

"ஆமாம் டாடி. அவ நம்ம வீட்டுக்கு வந்தா நம்ம அம்மாவே திரும்பக் கிடைச்சமாதிரி இருக்கும்ப்பா. இதுக்கு முன்னால நீங்க பேசினது வியாபாரம்ப்பா. அது பணத்தை மட்டும்தான் பார்த்தது. ஆனா என்னோட ராஜகுமாரி எதுக்கும் ஆசைப்படாதவப்பா. குடும்பத்து மேல அன்பும் அக்கறையும் உள்ளவ அவ. அவ எனக்கு மனைவியா வந்தா என் ஆயுசுக்கும் சந்தோஷமா இருப்பேம்ப்பா."

"சொல்லிட்டியா?"

"அப்பா?"

"இதையெல்லாம் அவகிட்ட சொல்லிட்டியா?"

"எங்கே? என்னைப் பார்த்தாலே எரிஞ்சித்தான் விழுறா? நீங்க பேசினதைத்தான் சொல்லிக் காட்டுறா.."

"அப்போ அவ கோபம் உம்மேல இல்ல. என் வார்த்தைமேலதான்"

"அப்பா"

"கவலைப்படாதே! நாளைக்கு சுந்தரமூர்த்தியை பார்க்கிறதுக்கு என்னையும் கூட்டிட்டுபோ."

"அப்பா! நீங்களா? நீங்க எதுக்கு?"

"எம்மருமகளோட கோபத்தை போக்க வேண்டாமா? அதோடு கல்யாண விஷயமல்லாம் பெரியவங்கதான் பேசி முடிவெடுக்கணும்"

கௌதமின் முகம் பிரகாசமாய் மின்னியது. "டாட்! யூ மீன்... உங்களுக்கு ஓ.கே.ன்றீங்களா?"

"எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லப்பா. பொண்ணு மகாலக்ஷ்மியாட்டம் இருக்கா. சுந்தரமூர்த்தி மாதிரி ஒரு நேர்மையான மனுஷன் எனக்கு சம்பந்தியா வர்றதுல எனக்கு பரிபூரண சம்மதம்" என்ற தந்தையை இறுக்கமாய்

கட்டிக்கொண்டான்.

''தேங்க்யூப்பா. தேங்க்யூ ஸோ மச். மை ஸ்வீட் டாட்'' அவரது கன்னத்தில் முத்தமிட, மாயக்கண்ணன் பூரித்துப்போனார். பிள்ளையின் முகத்தில் வெகுநாட்களுக்குப் பிறகு பழைய உற்சாகமும் சந்தோஷமும் தாண்டவமாடியதில் பெற்றவரின் மனம் குளிர்ந்தது.

இந்த சந்தோஷத்திற்காக, இந்த இன்பம் நிலைப்பதற்காக கண்டிப்பாய் அந்தப் பெண்ணை தன் மகனுக்கு மணமகளாய் முடித்தே ஆக வேண்டும். உறுதியாய் முடிவெடுத்துக் கொண்டார் மாயக்கண்ணன்.

அதே நேரம் தேசிகனின் மனைவியும் இதே முடிவைத்தான் கணவனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

''இதோ பாருங்க! நீங்க என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ விடிஞ்சதும் முத வேலையாப் போய் உங்க நண்பரைப் போய் பாருங்க.''

''எதுக்குடி?''

''எதுக்கா? இவ்வளவு நேரமா என்ன சொல்லிட்டு இருந்தேன்? காதுல என்ன பஞ்சையா வெச்சிட்டு இருந்தீங்க?''

''இதோ பாரு! எது பேசுறதா இருந்தாலும் புரியுற மாதிரி பேசு.''

''விட்ட சம்பந்தத்தை பேசி முடிங்கன்னும் சொல்றேன்''

''சுந்தரமூர்த்தியை என்ன என்னை மாதிரி மானரோஷம் இல்லாதவன்னு நினைச்சியா?'' கோபமாய் எழுந்தார் தேசிகன்.

''என்ன? குரல் ரொம்ப உயருது''

''பின்ன என்னடி? அருமையானபொண்ணு. கௌரவமான குடும்பம். நமக்கேத்த சம்பந்தம்ன்னு எல்லாம் பேசி வெச்சிருந்தேன். உன் பேராசையால என் நண்பன் இப்ப சாவு வரைக்கும் போய் மீண்டு வந்திருக்கான். அவனை ஒருமுறை கூட பார்க்க முடியலயேன்னு நான் கலங்கிப் போயிருக்கேன். இப்பப்போயி திரும்பவும் சம்பந்தம் பேசுன்னு சொல்ற?''

''இப்ப ஏன் குதிக்கிறீங்க? நானா உங்க நண்பரை சாவு வரைக்கும் அனுப்பினேன்?''

''ஆமாம்... நீதான்... உன் பேச்சுத்தான் அவனை படுக்கையில தள்ளிச்சி.''

''நான் என்னய்யா பண்ணினேன்?''

''நீ என்ன பண்ணல? கொஞ்ச பேச்சாபேசினே? நீ பணம் பணம்ன்னு பேயா அலைஞ்சியே. எழுபத்தி அஞ்சி சவரன் கேட்டப்பவே அவனுக்கு பாதி உயிர் போயிடுச்சி. இதுல அவனுக்குன்னு இருந்த ஒரே ஆதாரம் அந்த இடம்தான். அதையும் விக்கச்சொன்னியே! பிறகெப்படி அவனுக்கு நெஞ்சுவலி வராம இருக்கும்.

அதோடயாவது விட்டியா? ஒரு பாவமும் அறியாத அந்த பொண்ணோட நடத்தையையே சந்தேகப்பட்டியேடி! அதையும் பெத்த தகப்பன் கிட்டயே சொல்லியிருக்க. இதைவிட வேற என்ன வேணும் அவனைக் கொல்ல, ஏதோ அவன் புண்ணியம் பண்ணினவன்றதால பொழைச்சிக்கிட்டான். நமக்கெல்லாம் இப்படி ஒரு நிலமை வந்தது. பச்சைத்தண்ணி தரக்கூட ஆளில்லாமத்தான் சாவோம்''

''இந்தா! வாயை மூடுய்யா. நல்ல காரியம் நடக்கப்போகிற நேரம் என்னப் பேச்சு பேசுற?''

''என்ன? நல்ல காரியம்மா?''

''ஆமாங்க! குறிச்ச தேதியில கல்யாணம் பண்ணிடலாம். நீங்க போய் பேசுங்க''

''யாருக்கிட்ட?''

''சுந்தரமூர்த்தி அண்ணன் கிட்டதான்'' வெகு குழைவாய்ச் சொன்ன மனைவியை வினோதமாய்ப் பார்த்தார்.

''ஏய்! என்னடி! உனக்கு புத்திகித்தி பேதலிச்சிபோச்சா?''

''என்னங்க இப்படி கேட்கிறீங்க?''

''பிறகென்னடி! நீ தானே போன் பண்ணி சம்பந்தம் முறிஞ்சிப்போச்சுன்னு சொன்னே. இப்ப எந்த மூஞ்சிய வெச்சிட்டு என்னை பேசச்சொல்றே?''

''கல்யாணம்னா ஆயிரம் பேச்சு இருக்கும் தான். அதுக்காக சட்டுன்னு முறிச்சிட முடியுமா? அதுவும் ஒப்புத்தாம்பூலம் மாத்தியிருக்கோம்''

''ஏன்? ரெண்டு நாள் முன்னே நீயும் உன்பிள்ளையுமாய் போயி பொண்ணு பார்த்தீங்களா. அந்த மரக்கடைக்கார வீட்டு சம்பந்தம் என்னாச்சு?'' புருவம் நெறியக் கேட்டவரைப் பார்த்து சமாளிப்பாய் புன்னகைத்தாள் ராஜேஸ்வரி.

''அது... அதெல்லாம் நமக்கு சரிப்படாது. ஆயிரம் இருந்தாலும் உங்க சிநேகிதர் குடும்பம் மாதிரி வருமா? சும்மா பழங்கதையை பேசி நேரத்தை வீணாக்காம படுங்க. காலையில எழுந்ததும் ஆஸ்பத்திரியில போயி அவரை பார்த்து கல்யாணம் குறிச்ச தேதியில நடக்கும். ஆக வேண்டிய ஏற்பாடுகளை பாருங்கன்னு சொல்லிட்டு வாங்க.''

''என்னால முடியாது. அவன் முகத்தை நேருக்க நேரா பாக்குற யோக்யதை கூட எனக்கு இல்ல. உன்னை மாதிரி நாக்கை புரட்டிபுரட்டி என்னால பேசவும் முடியாது.''

''அப்போ நானும் வாறேன். சேர்ந்து போவோம்''

''வேண்டாம் தாயே! என்னை விட்டுடு. நீ போய் பேசு. உன் மூஞ்சில காறித்துப்புவாங்க. வாங்கிட்டு வா. இத்தனை வயசுக்கு மேல என்னால அவமானப்படமுடியாது'' என்றவாறு தேசிகன் எழுந்து உள்ளே போய்விட. சில கணங்கள் அமைதியாய் நின்றாள். மறுகணமே அலட்சியமாய் உதட்டைச் சுளித்தார். ''ஹூம்! சுந்தரமூர்த்தியிடம் பேசுவதா கஷ்டம். விடியட்டும். நானே பேசிக்கிறேன்'' என்றாள் கர்வத்தோடு.

சென்றது கண் உறக்கம்

நெஞ்சில் நின்றது உன் மயக்கம்

இங்கு ஓய்வதேது தேய்வது

ஏது உந்தன் ஞாபகம்!

விடியும் முன்பே எழுந்துவிட்டாள் ரோஜா. வாசல் பெருக்கி தெளித்து முந்தைய நாள் மருத்துவமனையில் இருந்துகொண்டு வந்து அழுக்குத்துணிகளை சர்ப்பில் ஊறவைத்தாள். அடுப்பை பற்ற வைத்து சமையலில் ஈடுபடத்துவங்கிய போது வாசலில் பைக் சத்தம் கேட்டது. வெளியே எட்டிப் பார்த்தாள். சங்கர் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

''வாடா! அப்பாவுக்கு எப்படி இருக்கு? நல்லாத் தூங்கினாங்ளா?''

''ம்... தூங்கினாங்க. அக்கா! சீக்கிரமா சமையல் பண்ணு. இன்னிக்கு ரசம் இல்லன்னா கீரை சாதம் கொடுக்கச் சொன்னாங்க.'' என்றவாறே வீட்டிற்குள் நுழைந்து, கொண்டுவந்த சாப்பாட்டு கூடையை தமக்கையிடம் நீட்டினான்.

''கீரையா? கீரை வாங்க மார்க்கெட் போகணுமே சங்கர்''

''நான் வண்டியில போயிட்டு வந்திடுறேன். வேற எதுவும் வேணுமா?''

''பால் மட்டும் இரண்டு கவர் வாங்கிட்டு வா சங்கர். மற்றதெல்லாம் இருக்கு''

''சரி! நான் கிளம்பறேன்''

''இருடா... காபி குடிச்சிட்டுப் போ''

''இல்லக்கா! கடைக்கு போயிட்டு வந்திடுறேன். குளிச்சிட்டுத்தான் காபி டிபன் எல்லாம். உடம்பெல்லாம் ஒரே பேட்ஸ்மெல்.''

''இன்னும் ஒரு ரெண்டு மூணுநாள் தானே சங்கர்.''

''சரிக்கா! நீ சீக்கிரமா சாப்பாட்டை ரெடி பண்ணு. அக்கா! அப்புறம் இன்னொரு விஷயம்''

''என்ன?''

''நேற்று நீ ஹாஸ்பிடல்ல இருந்து கிளம்பின கொஞ்சநேரத்துல கௌதம் ஸார் வந்தாருக்கா'' தம்பியின் வார்த்தையில் ரோஜாவின் முகம் குப்பென சிவந்தது. உள்ளே எழுந்த ஆவலை வெளிக்காட்டாமல் சாதாரணமாய்க் கேட்டாள்.

''என்னவாம்?''

''என்னன்னு என்கிட்ட சரியாச் சொல்லல. ஆனா அப்பாக்கிட்ட ரொம்ப நேரம் பேசினாங்க. அப்பாவோட முகத்தைப் பார்க்கணுமே... அவ்வளவு சந்தோஷமாம். கௌதம் ஸார் சொன்னதற்கெல்லாம் உற்சாகமா தலையாட்டிட்டே இருந்தாங்க. அம்மா முகத்துல கூட பயங்கர சந்தோஷம்

''என்னவா இருக்கும் சங்கர்''

''தெரியல. ஆனா இன்னிக்கு காலையில நம்ம வீட்டுக்கு வர்றதாச் சொன்னார்.''

''எ...ன்ன? நம்ம வீட்டுக்காக?''

''ம்... உங்கிட்ட பேசணுமாம். ஏதோ முக்கிய முடிவு எடுக்கணுமாம்'' சங்கர்



"என்னடி உன் புருஷனை திருடங்க தாக்கீனப்ப நீ சாமர்த்தியமா அவங்கல அடிச்சு போலிஸ்கிட்டே சேர்த்தீயே... புருஷன் மேலே அவ்வளவு பாசமாடி?"

"நீ வேற! என்னை தவிர என் புருஷன் மேலே யாரும் கை வைக்கக்கூடாது... அதான்"

-வண்ணை கணேசன், சென்னை.



சொல்ல, ரோஜாவிற்கு வியர்த்தது.

''எ...ன்...ன பேசணுமாம்?''

''அவர்தான் வருவாரே. அப்போ கேட்டுக்கலாம். நான் போய் கீரை வாங்கிட்டு வந்திடுறேன்'' என்றவாறே சங்கர் புறப்பட்டு வெளியேற ரோஜாவின் இதயம் ஆர்ப்பரிக்கத்துவங்கியது. எதற்காக இங்கு வருகிறான்? என்னிடம் என்ன பேச வேண்டுமாம்? ஐயோ! அவனைக் கண்டாலே இந்த மனமும் உடலும் பதறுமே! அவனிடம் என்ன பேசுவது? அப்பாவிடம் என்ன பேசியிருப்பான்?

கைகள் தானாக தன் பணிகளைச் செய்து கொண்டிருக்க, இதயமும் மூளையும் கௌதமனின் நினைவிலேயே மூழ்கி தவித்தது. தெருவில் செல்லும் வாகனங்கள் ஒலியெல்லாம் அவனது வாகனமாக எண்ண வைத்து பதற வைத்தது. கண்கள் நொடிக்கொருதரம் வாசலுக்கு சென்று மீண்டது.

கீரையோடு வந்த தம்பியிடம் எதுவும் பேசாமல் மௌனமாய் வாங்கி அவற்றை சுத்தம் செய்து, பக்குவமாய் சமைத்து, பாலைக் காய்ச்சி, பிளாஸ்கில் ஊற்றி, காலையில் சாப்பிடுவதற்கும் மதியம் சாப்பிடுவதற்குமாய் சாப்பாட்டை எடுத்து வைத்தாள்.

அவன் சாப்பிட்டு எழும்வரை மனம் உதறிக்கொண்டே இருந்தது.

''அக்கா! என்னாச்சு உனக்கு?''

''எ...என்னடா?''

''ஏன் இப்படி பேயறைஞ்சமாதிரி இருக்க?''

''இ... இல்லையே..''

''உன் முகம் அப்படித்தான் இருக்கு. சரி. நான் கிளம்பறேன்''

''ச... சங்கர்''

ஏது உந்தன் ஞாபகம்!

விடியும் முன்பே எழுந்துவிட்டாள் ரோஜா. வாசல் பெருக்கி தெளித்து முந்தைய நாள் மருத்துவமனையில் இருந்துகொண்டு வந்து அழுக்குத்துணிகளை சர்ப்பில் ஊறவைத்தாள். அடுப்பை பற்ற வைத்து சமையலில் ஈடுபடத்துவங்கிய போது வாசலில் பைக் சத்தம் கேட்டது. வெளியே எட்டிப் பார்த்தாள். சங்கர் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

''வாடா! அப்பாவுக்கு எப்படி இருக்கு? நல்லாத் தூங்கினாங்களா?''

''ம்... தூங்கினாங்க. அக்கா! சீக்கிரமா சமையல் பண்ணு. இன்னிக்கு ரசம் இல்லன்னா கீரை சாதம் கொடுக்கச் சொன்னாங்க.'' என்றவாறே வீட்டிற்குள் நுழைந்து, கொண்டுவந்த சாப்பாட்டு கூடையை தமக்கையிடம் நீட்டினான்.

''கீரையா? கீரை வாங்க மார்க்கெட் போகணுமே சங்கர்''

''நான் வண்டியில போயிட்டு வந்திடுறேன். வேற எதுவும் வேணுமா?''

''பால் மட்டும் இரண்டு கவர் வாங்கிட்டு வா சங்கர். மற்றதெல்லாம் இருக்கு''

''சரி! நான் கிளம்பறேன்''

''இருடா... காபி குடிச்சிட்டுப் போ''

''இல்லக்கா! கடைக்கு போயிட்டு வந்திடுறேன். குளிச்சிட்டுத்தான் காபி டிபன் எல்லாம். உடம்பெல்லாம் ஒரே பேட்ஸ்மெல்.''

''இன்னும் ஒரு ரெண்டு மூனுநாள் தானே சங்கர்.''

''சரிக்கா! நீ சீக்கிரமா சாப்பாட்டை ரெடி பண்ணு. அக்கா! அப்புறம் இன்னொரு விஷயம்''

''என்ன?''

''நேற்று நீ ஹாஸ்பிடல்ல இருந்து கிளம்பின கொஞ்சநேரத்துல கௌதம் ஸார் வந்தாருக்கா'' தம்பியின் வார்த்தையில் ரோஜாவின் முகம் குப்பென சிவந்தது. உள்ளே எழுந்த ஆவலை வெளிக்காட்டாமல் சாதாரணமாய்க் கேட்டாள்.

''என்னவாம்?''

''என்னன்னு என்கிட்ட சரியாச் சொல்லல. ஆனா அப்பாக்கிட்ட ரொம்ப நேரம் பேசினாங்க. அப்பாவோட முகத்தைப் பார்க்கணுமே... அவ்வளவு சந்தோஷமாம். கௌதம் ஸார் சொன்னதற்கெல்லாம் உற்சாகமா தலையாட்டிட்டே இருந்தாங்க. அம்மா முகத்துல கூட பயங்கர சந்தோஷம்''

''என்னவா இருக்கும் சங்கர்''

''தெரியல. ஆனா இன்னிக்கு காலையில நம்ம வீட்டுக்கு வர்றதாச் சொன்னார்.''

''எ...ன்ன? நம்ம வீட்டுக்காக?''

''ம்... உங்கிட்ட பேசணுமாம். ஏதோ முக்கிய முடிவு எடுக்கணுமாம்'' சங்கர்



"என்னடி உன் புருஷனை திருடங்க தாக்கீனப்ப நீ சாமர்த்தியமா அவங்கல அடிச்சு போலிஸ்கிட்டே சேர்த்தீயே... புருஷன் மேலே அவ்வளவு பாசமாடி?"

"நீ வேற! என்னை தவிர என் புருஷன் மேலே யாரும் கை வைக்கக்கூடாது... அதான்"

**-வண்ணை கணேசன், சென்னை.**



சொல்ல, ரோஜாவிற்கு வியர்த்தது.

''எ...ன்...ன பேசணுமாம்?''

''அவர்தான் வருவாரே. அப்போ கேட்டுக்கலாம். நான் போய் கீரை வாங்கிட்டு வந்திடுறேன்'' என்றவாறே சங்கர் புறப்பட்டு வெளியேற ரோஜாவின் இதயம் ஆர்ப்பரிக்கத்துவங்கியது. எதற்காக இங்கு வருகிறான்? என்னிடம் என்ன பேச வேண்டுமாம்? ஐயோ! அவனைக் கண்டாலே இந்த மனமும் உடலும் பதறுமே! அவனிடம் என்ன பேசுவது? அப்பாவிடம் என்ன பேசியிருப்பான்?

கைகள் தானாக தன் பணிகளைச் செய்து கொண்டிருக்க, இதயமும் மூளையும் கௌதமனின் நினைவிலேயே மூழ்கி தவித்தது. தெருவில் செல்லும் வாகனங்கள் ஒலியெல்லாம் அவனது வாகனமாக எண்ண வைத்து பதற வைத்தது. கண்கள் நொடிக்கொருதரம் வாசலுக்கு சென்று மீண்டது.

கீரையோடு வந்த தம்பியிடம் எதுவும் பேசாமல் மௌனமாய் வாங்கி அவற்றை சுத்தம் செய்து, பக்குவமாய் சமைத்து, பாலைக் காய்ச்சி, பிளாஸ்கில் ஊற்றி, காலையில் சாப்பிடுவதற்கும் மதியம் சாப்பிடுவதற்குமாய் சாப்பாட்டை எடுத்து வைத்தாள்.

அவன் சாப்பிட்டு எழும்வரை மனம் உதறிக்கொண்டே இருந்தது.

''அக்கா! என்னாச்சு உனக்கு?''

''எ...என்னடா?''

''ஏன் இப்படி பேயறைஞ்சமாதிரி இருக்க?''

''இ... இல்லையே..''

''உன் முகம் அப்படித்தான் இருக்கு. சரி. நான் கிளம்பறேன்''

''ச... சங்கர்''

''என்னக்கா?''

''இப்பவே போகணுமா?''

''என்னக்கா கேள்வி இது? அம்மாவும் அப்பாவும் பசியோட வெயிட் பண்ணுவாங்களே''

''ஆ...மா... இல்ல.. சரி நீ கிளம்பு''

''என்னக்கா! என்ன பிரச்சனை உனக்கு?''

''இல்லடா! அவர் ... வருவார்ன்னு சொன்னியே... அதான் ஒரே உதறலா இருக்கு'' தயக்கமாய்ச் சொன்னவளைப் பார்த்து சிரித்தான் சங்கர். ''ப்பூ! இதுதான் மேட்டரா! ஏன்க்கா! நீ அவரை பார்த்தாலே படபடன்னு பொரிஞ்சிடுவியே. பிறகென்ன பயம் உனக்கு?''

''இல்லடா! இருந்தாலும்... தனியா இருக்கேனில்ல... அதான்... பேசாம நானும் ஹாஸ்பிடலுக்கு வந்திடவா?''

''என்னக்கா இது? ஒருத்தர் வீட்டுக்கு வர்றேன்னு சொன்ன பிறகு நம்மபாட்டுக்கு வீட்டைப்பூட்டிட்டு வெளியே போனா அது நல்லாவா இருக்கும்?''

''ஆமா! நல்லா இருக்காததுதான்''

''அதுக்குத்தான் சொல்றேன். நீ உன் வேலையெல்லாம் முடி. நான் வேணா சாப்பாட்டைக் கொடுத்திட்டு வந்திடுறேன். ஈவ்னிங் ரெண்டுபேரும் ஹாஸ்பிடலுக்கு போகலாம். சரியா?'' தம்பியன் பதிலில் சட்டென முகம் மலர்ந்தாள்.

''குட் ஐடியா சங்கர்! சீக்கிரமாக சாப்பாட்டைக் கொடுத்துட்டு வந்திடுறியா?''

''சரி... அப்ப நான் கிளம்பட்டுமா?''

''ம்...'' வாசல்வரை வந்து தம்பியை வழியனுப்பிவிட்டு, வீட்டிற்குள் திரும்பயத்தணிக்கையில் வாசலில் வந்து நின்றது இளம்பச்சை நிறக்கார். உள்ளம் திடும்திடும்மென அதிர, தயக்கமாய் நின்றாள். கார்க் கதவைத் திறந்து ஆளை அசரவைக்கும் புன்னகையோடு இறங்கினான் கௌதம்.

''ஹாய் ராஜகுமாரி! என் வருகைக்காகத்தான் வழிமேல் விழி வைத்து காத்திருக்கிறாயா?'' உற்சாகமாய்க் கேட்டவனைக் கண்டதும் முகம் கடுத்தாள்.

''ஆமா! எங்களுக்கு வேற வேலையில்லையாக்கும்? யாரையும் எதிர்பார்த்துட்டு இருக்கல.''

''வாட்?''

''சரிசரி... வாசல்ல வெச்சி சண்டைபோட வேண்டாமே. உள்ளே போய் பேசலாமா?''

''எ...ன்ன பேசணும்?''

''நிறைய பேசணும்.''

''ஸாரி! எனக்கு உங்ககிட்ட பேச எதுவும் இல்ல.''



# JRE FINANCIAL SUPPORT

WE UNDERTAKE TO ARRANGE LOANS

- Home Loan
- NRI Home Loan
- Mortgage Loan
- Personal Loan
- Business Loan

With all leading Banks and Financial Institutions

If required kindly Contact:

**J.ELUMALAI**

**9941596688, 9444126688, 9841441555**

No.19, First Floor, Anna Nagar Plaza, C-47,
2nd Avenue, Anna Nagar, Chennai-40.
email: jrefinancial@gmail.com

''ஆனா எங்களுக்கு நிறைய இருக்கே. ஒன் செகண்ட்'' என்றவன் காரின் பின்பக்கத் கதவைத் திறக்க, முகம் மாறினாள் ரோஜா. எதற்காக தகப்பனையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கான்? ஓ! அந்த இடம் விஷயமாக பேசத்தான் வந்திருக்கிறார்களோ?

முடிவெடுக்க வேண்டும் என்றதும் இந்த பாழாய்ப்போன மனம் ஏதேதோ கற்பனை செய்துவிட்டதே. இடத்தை விற்கக்கூடாது என்று என்மகள் அடம்பிடிக்கிறாள் என்று சொல்லியிருப்பார். நாங்கள் பேசுகிறோம் என்று வந்திருக்கிறார்கள் போல. முகமும் மனமும் வெறுப்பாய் எதுவும் பேசாமல் கதவை திறந்து வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

தந்தையை கைப்பிடித்து அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் இருக்கையில் அமர வைத்துவிட்டு தானும் அமர்ந்தான்.உள்பக்க அறை வாசலில் நின்று நகத்தைக் கடித்துக்கொண்டு நின்றிருந்தவளை கனிவான குரலில் அழைத்தார் மாயக்கண்ணன்.

"வாம்மா! இப்படி வந்து உட்கார்"

"பரவாயில்ல. என்ன விஷயம்ன்னு சொல்லுங்க."

"அட உட்காரும்மா. இதெல்லாம் பொறுமையா பேசவேண்டிய காரியம்."

"எங்கிட்ட பேச வேண்டிய அளவுக்கு என்ன பெரிய காரியம்?"

"உங்கிட்டதாம்மா பேசணும். இப்படி வாம்மா. அன்னிக்கு உன்னை நான் சரியாக்கூட பார்க்கலியே" மாயக்கண்ணன் அதே குரலில் பேச, இருவரையும் குழப்பமாய் பார்த்துக்கொண்டே வந்து அமர்ந்தாள்.

"சொல்லுங்க! என்ன விஷயம்?"

"எம்பையன் சொன்னது ரொம்பச் சரி"

"என்ன?"

"மகாலக்ஷ்மியாட்டம் தான் இருக்கே.அதோட எம்மேல உள்ள கோபமும் போகல போலிருக்கு"

"அ... அப்படியெல்லாம் இல்ல"

"உன் மேல தப்பு இல்லம்மா. உன் கோபம் நியாயமானதுதான். நானும் அப்படி பேசியிருக்கக்கூடாது. மன்னிச்சிடும்மா"

"ஐயோ! என்ன ஸார் இது? பெரியவங்க நீங்க. எங்கிட்ட போய்..."

"ரொம்ப நன்றிம்மா... நான் எதிர்பார்த்தத விட நீ தங்கமான பொண்ணாத்தான் இருக்க. ஆனா அன்னிக்கு அப்படி பேசினதுக்கான காரணத்தை உங்கிட்ட சொன்னாத்தான் உன்னோட கோபம் முழுமையா போகும்."

"ஸார்?"

"ஏம்மா! உனக்கு ஹோட்டல் சொர்க்கபுரி தெரியுமாம்மா?"

"தெரியும் ஸார்"

"அந்த ஹோட்டலை கௌதம் பொறக்கிறதுக்கு முன்னால நானும் என் நண்பன் சபாபதியும்தான் தொடங்கினோம். உங்க அப்பாதான் அந்த இடத்தை விலைபேசி முடிச்சுத்தந்தார். சுந்தரமூர்த்தியை எனக்கு அப்பவே பழக்கம். அந்த இடத்தை வாங்கும்போதே உங்க அப்பா அதை என்பேருக்கு பதிவு செய்யச் சொன்னார்.

ஏன்னா பணம் என்னது. வொர்க்கிங் பார்ட்னரா சபாபதி இருந்தான். ஆனா நான் உங்க அப்பா பேச்சைக் கேட்கல. என் நண்பன் மேல உள்ள நட்பால அபரிமிதமான நம்பிக்கையால ரெண்டுபேர் பேரிலயும் அதை பதிவு பண்ணினோம்.

ஹோட்டலும் அமோகமா நடந்தது. ரிசார்ட்ஸ் சில்ரன்ஸ் பார்க், நீச்சல்குளம்ன்னு இடத்தை விரிவுபடுத்தினோம். சொர்க்கபுரின்னு சொன்னாலே சிட்டி முழுக்க தெரியுற அளவுக்கு பிரபலமாக்கிட்டோம். பிள்ளைகள் பிறந்து வளர்ந்திட்டாங்க. எங்க வருமானமும் பெருகிடுச்சி.

இந்த நேரம்தான் சபாபதிக்கு மூளை தப்பான வேலைகளைச் செய்ய



ஆரம்பிச்சது. என் மனைவியோட உடல்நிலை சரியல்லாம நான் கொஞ்ச நாளா ஹாஸ்பிடல் வீடுன்னு அலைஞ்சதுல நிர்வாகப் பொறுப்பு முழுக்க சபாபதி பார்த்துக்கிட்டான்.

அவன் என்ன பண்ணினான் ஏது பண்ணினான் தெரியாது. தொடர்ந்து நஷ்டக்கணக்கைத் தான் காட்டினான். இந்த சூழல்ல என் மனைவியோட உடல்நிலை மோசமானதால கௌதமுக்கு உடனே கல்யாணம் பண்ணி வெச்சிடலாம்னு முடிவெடுத்தோம்" அவர் நிறுத்த ரோஜாவின் கண்கள் தானாக கௌதமிடம் சென்றது.

கைகளைக் கட்டிக்கொண்டு இறுக்கமாய் அமர்ந்திருந்தான் அவன். மாயக்கண்ணன் தொடர்ந்தார்.

"என் மனைவி வழி உறவினர் பெண்ணை பேசி முடிச்சோம். பத்து நாள்ல கல்யாணம். அந்த நேரத்தில வந்து ஹோட்டல்ல இன்னும் நிறைய புதுமைகளைச் செய்யணும். அதுக்கு சில பார்மல், உன் ஸைன் வேணும்னு கேட்டான் சபாபதி. கல்யாண டென்ஷன்ல அது என்ன ஏதுன்னு தெரியாம கையெழுத்து போட்டுக் கொடுத்திட்டேன் ம்ப்ச்! எல்லாமே மாறிடபோச்சு" மாயக்கண்ணனின் தொண்டை அடைக்க, பேச்சை நிறுத்தினார். ரோஜா தயக்கமாய்க் கேட்டாள்.

"என்ன ஸார் ஆச்சு?"

"எல்லாமே போச்சும்மா... சபாபதிகிட்ட நான் கடன்வாங்கினதாகவும் அதை அடைக்க வழியில்லாம அந்த ஹோட்டலை அவனுக்கே வித்திட்டதாகவும் பேப்பர்ஸ் ரெடிபண்ணியிருக்கான். அது தெரியாம நான் கையெழுத்தும் போட்டுட்டேன்."

"ஐயோ"

"மறுநாளே சொர்க்கபுரி என் கையை விட்டுப் போச்சு. கோடிக்கணக்கான சொத்து போயிடுச்சின்னு கேள்விப்பட்டதும் பொண்ணு வீட்ல கல்யாணத்தை நிறுத்திட்டாங்க. அடுத்தடுத்த அதிர்ச்சியில என் மனைவியும் கண்ணை மூடிட்டா" கண்கள் கலங்க பேசமுடியாமல் தடுமாறிய தந்தையின் தோளை அணைத்துக் கொண்டான் கௌதம்.

"தொடர்ச்சியா விழுந்த அடியில அம்மாவை இழந்த துக்கத்தில அப்பாவுக்கு ஸ்ட்ரோக் வந்திடுச்சு. நிறைய ட்ரீட்மெண்ட் பண்ணினோம். அப்பாவோட



நீ கடித்து
வெளியே துப்பும்
உன் விரல் நகங்கூட
பிறை நிலவாகி
விடுகிறது.
அப்படியென்றால்?
என்னை கொஞ்சம்
காதலிப்பதாகச்
சொல்லி
காயப்படுத்தி விடு
நான் கவிஞனாகி
விடுகிறேன்!

– சங்கர், வந்தவாசி.

உடம்பை விட மனசுதான் ரொம்ப நொறுங்கிப்போச்சு. அப்போவோட, கனவு அந்த சொர்க்கபுரி போலவே நிறைய ஹோட்டல் கட்டணும்றதுதான்.

அந்தக் கனவை நனவாக்கணும்னுதான் நான் உங்கப்பாக்கிட்ட வந்தேன். இப்ப தாம்பரத்தில இருக்கே அந்த ஹோட்டல் கட்டுறதுக்கு உங்க அப்பாதான் இடம்பார்த்துத் தந்தாங்க. யூ நோ ராஜகுமாரி? அந்த இடத்துக்காக உங்க அப்பா பத்து பைசா கூட எங்ககிட்ட கமிஷன் வாங்கல. நாங்க இருந்த சூழ்நிலையை மனசில வெச்சிக்கிட்டு நான் கொடுத்த பணத்தைக்கூட அவர் வாங்கல. இப்பப் புரியுதா?-உங்க அப்பா மேல எங்களுக்கும் அக்கறை இருக்குன்னு?''

''வந்து... ஸாரி... வெரி... ஸாரி''

''அன்றைக்கு உங்க வீட்டுக்கு வந்தது உங்க அப்பா மீது சந்தேகப்பட்டு இல்ல. பெண்ணோட கல்யாணத்துக்காக இடத்தை விலை பேசினாரே. வீட்ல எதுவும் பிரச்சனையோ என்னவோ? போனைக்கூட எடுக்கவில்லையே அவருக்கு எதுவும் ஆகிவிட்டதோன்னு பயந்துதான் அவரைப் பார்க்க வந்தோம். ஆனால் நீதான் எதையும் முழுதாய்க் கேளாமல் கோபப்பட்டுவிட்டாய்.''

''ஸாரி ஸார். நான்... நீங்கள் பேசியதைக் கேட்டு...''

''பரவாயில்லம்மா. நான் பேசியதும் தப்புதான். கொஞ்ச காலத்திற்கு முன்னாலே சபாபதி வீட்ல நடந்த நாடகம் நினைவுக்கு வந்திடுச்சி. அந்த நினைப்புல உங்கிட்ட யோசிக்காம பேசிட்டேன்''

''ஸார்?''

''ஆமாம்மா! சபாபதி என்னை ஏமாத்தி இடத்தை வாங்கிட்டான்னு அவன் மேல கேஸ் போடலாம்னு கௌதம் சொன்னான். அதுக்கு முன்னால ஒரு வாட்டி நேர்ல பேசிப்பார்க்கலாம்னு அவன் வீட்டுக்குப் போனோம். ஆனா நான் போனப்போ அவன் வீட்ல இல்ல''

''எங்கே போயிட்டார்?''

''ஹார்ட் அட்டாக்னு சொல்லி ஹாஸ்பிடல்ல போய் படுத்துகிட்டான். அதுக்குக் காரணம் நான்தான்னு சொல்லி போலீஸ்ல கேஸ் கொடுத்திட்டான்''

''ஐயோ! ஏன்?''

''நான் அந்த இடத்தைக் கேட்டு மிரட்டுறேன்னு கேஸ் போட்டு என்னவெல்லாமோ செய்து கடைசியா நானே அந்த இடம் வேணாம்னு உதறிட்டேன். ஒரே வயித்து பிள்ளையா இருந்தோம். ஏதோ பொல்லாத நேரம். அவனுக்கு பணத்தாசை பிடிச்சிடுச்சி. அவன் எங்கிட்ட கேட்டிருந்தா நானே முழுமனசோட எழுதிகொடுத்திருப்பேன்.

ஆனா என்னை ஏமாத்தி என் மேலே வீண்பழியெல்லாம் சுமத்தி எங்குடும்பத்தையே சீர்குலைச்சிட்டான். அன்றையில் இருந்து என் பிள்ளை முகத்தில நான் சிரிப்பை பர்க்கலம்மா. கல்யாணப் பேச்சை எடுத்தாலே கோபப்பட்டான். ஆனா, உன்னைப் பார்த்தப்பின் ரொம்ப மாறியிருக்காம்மா.'' மாயக்கண்ணன் புன்னகையோடு சொல்ல, ரோஜாவிற்குள் பட்டாம்பூச்சிகள் வண்ணமயமாய் சிறகடித்து பறந்தன.



''எம்புள்ளைக்கு நான்தாம்மா பிரெண்ட். உன்னைப் பார்த்த நாள்ல இருந்து தினமும் எங்கிட்ட சொல்லுவான். ஆனா நீ சுந்தரமூர்த்தி பொண்ணுன்னு எனக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தா நாங்கதான் முதல்ல பெண் கேட்டு வந்திருப்போம்.''

''அப்பா! இப்பவும் நாமதான் முதல்ல பெண் பார்க்க வந்திருக்கோம். இதுக்கு முன்னால வந்தவங்க பேரம் பேசத்தான் வந்திருக்காங்க. பெண் பார்க்க வரல... சரிதானே ராஜகுமாரி?'' கௌதம் கேட்க. ரோஜாவிற்கு படபடப்பு அதிகமானது. சட்டென்று எழுந்து கொண்டாள்.

''என்னம்மா எழுந்திட்டே?''

''ஸார்! நீங்க... என்னவெல்லாமோ பேசுறீங்களே?''

''பயப்படாதம்மா. இதையெல்லாம் ஏற்கனவே உன்னைப் பெத்தவங்கிட்ட பேசிட்டோம். இருந்தாலும் உன்கிட்ட சம்மதம் கேட்டால்தானே மனசுக்கு நிறைவா இருக்கும்னு வந்தோம். நீ என்னம்மா சொல்றே?''

''நான்... நான்... என்ன சொல்ல?''

''எதுவா இருந்தாலும் சொல்லும்மா. எங்க குடும்பத்துக்கு வந்து வாழப்போற பொண்ணுகிட்ட எதையும் மறைக்கக்கூடாதுன்னுதான் எங்க கதை முழுவதும் என் பையனோட கல்யாணம் நின்னுபோனது உட்பட நான் எதையும் மறைக்காமச் சொல்லிட்டேன். நீயும் உன் மனசில உள்ளத சொல்லிடும்மா.''

''எங்க அப்பா என்ன சொல்றாங்களோ அந்த பதில்தான் என்னுடையது. நீங்க... அப்பாக்கிட்டேயே...''

''அவருக்கு முழு சம்மதம் ராஜகுமாரி ஆனா எனக்குத் தேவை உன் சம்மதம்தான். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா? நேரிடையாகக் கேட்டவனை நிமிர்ந்தும் பாரக்க முடியாமல் தடுமாறினாள்.

''ஒரு நிமிஷம்! காபி எடுத்திட்டு வர்றேன்''

''வெயிட்! இந்த நழுவல் எல்லாம் வேண்டாம். எனக்கு பதில் சொல்லு. பிடிச்சிருக்கா? பிடிக்கலையா?''

''மகனே! என்னைக் கொண்டுபோய் கார்லவிட்டுடு''

''ஏம்பா?''

''நான் இப்படி நந்தி மாதிரி உட்கார்ந்திருந்தா அந்தப் பொண்ணு எப்படி பதில் சொல்லும்?''

''இல்ல... அப்படியெல்லாம் இல்ல.'' அவசரமாய் மறுத்தாள் ரோஜா.

''அப்ப பதிலைச் சொல்லு''

''அதுக்கு முன்னால உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்''

''என்னம்மா?''

''வந்து... இதுக்கு முன்னால வந்த வரன்கிட்ட அப்பா.... அவசரப்பட்டு ஒப்புத்தாம்பூலம் கூட மாத்திட்டாங்க. அதான் கொஞ்சம்... பயமா...''

"அதை அப்பாவே சொல்லிட்டாரும்மா. அவங்களே வேணாம்னு சொன்னபிறகு என்னம்மா பயம்? எம்புள்ள கல்யாணம் நிச்சியம் முடிஞ்ச பிறகுதான் நின்னது. கடவுள் செயலா உனக்கு அப்படி எந்த கஷ்டமும் இல்ல. நீ எதை நினைச்சும் கலங்காதம்மா. உங்கப்பா எங்கிட்ட எதையும் மறைக்கல. அவர்கிட்ட எனக்கு பிடிச்சதே அவரோட நேர்மைதாம்மா.

நீ மத்ததெல்லாம் மறந்திடு. நீ எம்புள்ளைக்குத்தான்னு அந்த ஆண்டவனே முடிவு பண்ணிட்டானோ என்னவோ? உன் மனசுல உள்ளதை மட்டும் சொல்லும்மா...அதுபோதும்."

"சீக்கிரம் ராஜகுமாரி. என்னோட ஹார்ட் பீட் தாறுமாறா எகிறுது. கமான் ஆன்ஸர் மீ" கௌதம் அவசரப்படுத்த முகம் மலர்ந்தாள் ரோஜா.

"வந்து... எனக்கு... எனக்கு சம்மதம் மாமா" என்றவள் நேர மாயக்கண்ணன் காலில் விழ, பரவசமான தந்தையை உற்சாக கூக்குரலுடன் கட்டிக்கொண்டான் கௌதம்.

## ▸▸▸ 11 ◂◂◂

மனதில் நின்ற காதலியே
மனைவியாக வரும்போது
சோகம் கூட சுகமாகும்
வாழ்க்கை இன்ப வரமாகும்!

"சுந்தரம் அண்ணே! நான் எங்களுக்காக இவ்வளவு தூரம் வரல்ல. ஏதோ உங்க உடம்புநிலையை யோசிச்சுத்தான் எங்க நிலைமையை விட்டு இறங்கி வந்திருக்கேன். அவரும் வர்றேன்னுதான் சொன்னார். திடீர்னு வேற ஒரு வேலை வந்திடுச்சி. அதான் நானே பேசி முடிச்சிட்டு வர்றேன்னு வந்தேன்" ராஜேஸ்வரி ஏற்ற இறக்கத்துடன் நீட்டி முழக்க, அதுவரை பற்களைக் கடித்துக்கொண்டு நின்ற சங்கர் வாயைத் திறந்தான்.

"பேசி முடிச்சிட்டீங்கள்ல. கிளம்புங்க"

"என்ன தம்பி இப்படிச் சொல்ற? வந்துதுல இருந்து நான்தான் பேசிட்டு இருக்கேன். அப்பா இன்னும் ஒன்னுமே சொல்லலையே"

"என்ன சொல்லணும்னு எதிர்பார்க்கிறீங்க?"

"இல்ல. கல்யாணத்தை அதே தேதியில வெச்சிக்கலாமான்னு..."

"இதை நீங்க மரக்கடைக்காரர் கிட்ட இல்ல கேட்கணும். இடம் மாறி வந்திட்டீங்களா?" சங்கரின் ஏளனமான குரலில் ராஜேஸ்வரி தடுமாறினாள்.

"த...ம்பி... என்ன சம்பந்தம் இல்லாம எதையோ பேசுது"

"நான் சரியாகத்தான் பேசுறேன். நீங்க தான் சம்பந்தமில்லாம வந்து எங்க டயத்தை வேஸ்ட் பண்றீங்க. அப்பா மாத்திரை போட்டுட்டு ரெஸ்ட் எடுக்கணும். கிளம்புங்க" சங்கர் கறாராய் சொல்ல, சுந்தரமூர்த்தி சற்று கலக்கமாய் அருகே நின்ற மனைவியைப் பார்த்தார். தேவகி 'நாம எதுவும் பேச வேண்டாம்' என சைகை செய்ய..... நாற்காலியை விட்டு எழுந்தாள்.

"என்ன அண்ணே! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பேசிட்டு இருக்கேன். நீங்க என்னன்னா எதுவுமே பேசாம சின்னப்பயல பேசவிட்டு வேடிக்கைப்பார்த்திட்டு இருக்கீங்க?"

"இதோ பாரும்மா! எதுவா இருந்தாலும் எங்கிட்ட பேசு. அப்பா பேசமாட்டாங்க."

"ஏன்? நெஞ்சுவலி வந்ததுல வாய் பேசமுடியாம போயிடிச்சா?"

"அந்த மாதிரியெல்லாம் எங்களுக்கு நடக்காது. தேவையில்லாம யாரோடவும் பேசக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காருங்க."

"அதுக்காக. பொண்ணைக் கட்டிக்கொடுக்கப் போற சம்பந்தி வந்தாக்கூட பேசமாட்டாரா?"

"ஓ! பேசுவாங்களே! என்ன சுந்தரம்? உடம்பு இப்ப எப்படி இருக்கு?" என்றவாறே மகனின் உதவியோடு வந்து நாற்காலியில் அமர்ந்தார் மாயக்கண்ணன். அவர்களின் பின்னே முகம் முழுக்க பூரிப்போடு ரோஜாவும் வர, தேவகிக்கு முன்னே ராஜஸ்வேரி எழுந்து வந்து அவளது கைகளைப் பற்றிக்கொண்டாள்.

"என்னம்மா மருமகளே! எப்படி இருக்கே?" குழைவாய்க் கேட்டவளிடமிருந்து கைகளை உருவிக்கொண்டாள் ரோஜா. முகம் கடுக்க, தாயிடம் சென்றாள்.

"என்னம்மா இது?"

"எனக்கும் புரியலம்மா. அவங்களே வந்தாங்க. ஏதோதோ சொல்றாங்க. எனக்கு ஒண்ணுமே புரியல?"

"அம்மா! இன்னுமா புரியல? அவங்க புள்ளைக்கு பேசினபடி விலைபடியில போலிருக்கு. அதான் அப்பா தலையிலயே மொளகா அரைச்சிடலாம்னு கிளம்பி வந்திருக்காங்க." சங்கர் காட்டமாய்ச் சொல்ல, கௌதம் திரும்பினார்.

"சங்கர்! யூ...மீன்..."

"ஆமா கௌதம் ஸார்!

"என்ன தம்பி! வார்த்தை தடிக்குது; மட்டுமருவாதியில்லாம பேசுற?"

"உனக்கு என்னம்மா மரியாதை? மரக்கடைக்காரர் பொண்ணுக்கு எண்பது சவரன் போடுறதாச் சொன்னதும் எங்க அப்பாவை சுலபமா கழட்டிவிட்டுட்ட. கல்யாணத்தை நிறுத்த நீ என்ன காரணம் சொல்லியிருந்தாலும் நாங்க மன்னிச்சிருப்போம். ஆனா நீ... எங்க அக்காவையே கேவலமாய் பேசிட்டு இப்ப எந்த மூஞ்சிய வெச்சிட்டு இங்கே சம்பந்தம் பேச வந்தே?"

"என்ன? சம்பந்தம் பேசவா?" மாயக்கண்ணன் லேசாய் பதற, சுந்தரமூர்த்தி இயலாமையாய் கண்ணை மூடித்திறந்தார்.

"ஆமா ஸார். குறிச்ச தேதியில கல்யாணம் வெக்கணும்னு சொல்றாங்க"

''ஆமாங்க. எம்புருஷனும் இவரும் சிநேகிதங்க. இவருக்கு இப்படி ஆனதால, பையனும்தான் தோளுக்குமேல வளர்ந்திட்டானே. அதனால பொறுப்பை அவன்கிட்ட விட்டுட்டேன். என்னால... தொடர்ச்சியா... பேசவும் முடியலையே'' திணறியவரை லேசாய் தட்டிக்கொடுத்து படுக்கவைத்தான் கௌதம்.

''இது எங்களோட பிரச்சனை. நாங்களே பேசி சரி செய்து விடுகிறோம். நீங்க அமைதியா ரெஸ்ட் எடுங்க.''

''தம்பி! நான்...''

''படுங்க அங்கிள். நானும் சங்கரும் எதற்கு இருக்கிறோம்?

அப்பாக்கிட்ட கூட சொல்லல''

''இப்பச் சொல்லேன். எல்லாருமே கேட்போம்''

''அப்பா! இந்த அம்மாவந்து தேனாப் பேசினதும் இளகிடாதீங்க. இது காரியக்கார அம்மா. எதுக்காக இவ்வளவு மெனக்கெட்டு வந்திருக்காங்க தெரியுமா?''

''எதுக்கு சங்கர்?'' கோபமாய் கேட்டாள் ரோஜா.

''அக்கா! இந்த அம்மா அன்னிக்கு பெரிசா அளந்தாங்களே எம் மகன் ஒரு கடைக்கே முதலாளி. நாலுபேரை வெச்சு வேலைவாங்குகிறான். அப்படி இப்படின்னு...''

''ஆமா''

''இப்ப அந்தக்கடையே இல்லையாம்.''

''என்ன?'' சுந்தரமூர்த்தி அதிர்வாய்க் கேட்டார்.

''ஆமாம்மா! ரோட்டோரமா கவர்ன்மென்ட் இடத்தில கடையை கட்டியிருப்பாங்க போலிருக்கு. ரோட்டை அகலப்படுத்தும் போது கடையத்தூக்கியாச்சு. விஷயம் மரக்கடைக்காரருக்கு தெரிஞ்சு போச்சு. கடை இல்லாதவனுக்கு எண்பது சவரன் போட்டு பொண்ணைக் கொடுக்க அவருக்கு என்ன பைத்தியமா?

''அதான் இந்த அம்மா நம்மை உதறினமாதிரி அவர் இவங்களை உதறிட்டாரு. அம்மாவுக்கு வேற வழியில்ல. கடைபோன விஷயம் ஊர் முழுக்க தெரிஞ்சிடுச்சி. நாம ஹாஸ்பிடல்ல இருக்கிறதால நமக்கு எதுவும் தெரியாதுன்னு முடிவுபண்ணி இங்க வந்து ட்ராமா பண்ணிட்டு இருக்கு. இந்த ட்ராமாவோட ஹைலைட் என்ன தெரியுமா?''

''எ...ன்ன?''

''நம்ம இடம். தாம்பரத்தில் உள்ள இடத்தை அக்கா பேர்ல எழுதினாப்போதும். அதுல இவங்க பையனுக்கு கடையவெச்சு பொழைச்சிக்கலாம்ன்னு கண்ணு நிறைய கனவோட வந்திருக்காங்க.



''சங்கர்! முதல்ல அவங்களை வெளியே போகச்சொல்லு''

''அதைத்தான் நான் ரொம்பநேரமாச் சொல்லிட்டு இருக்கேன். ஆனா போற மாதிரித் தெரியல''

''ஹாஸ்பிடல் வொர்க்கர்ஸக் கூப்பிட்டு வெளியே தள்ளச்சொல்லு'' ரோஜா ஆவேசமாய்ச் சொல்ல, சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள் ராஜேஸ்வரி. அதற்குள் சுந்தரமூர்த்தி பதறினார்.

''ரோஜாம்மா. தப்புடா. பெரியவங்கள இப்படி மரியாதை குறைவா பேசக்கூடாது.''

''அவங்க பெரியவங்க மாதிரி அன்னிக்கு பேசலையேப்பா. நல்லா இருந்த உங்களை இப்படி படுக்கையில தள்ளிட்டு கொஞ்சம் கூட ஈவிரக்கமில்லாம திரும்பவும் வியாபாரம் பேசத்தானே வந்திருக்காங்க. இவங்களுக்கு மரியாதை ஒரு கேடா?''

''இதோ பாரும்மா! ரொம்பக் குதிக்காதே. ஏதோ போனப்போகுதுன்னு பாவப்பட்டு வந்தா ரொம்பத்தான் எகிறுறியே?''

''நீங்க பாவப்படுற அளவுக்கு எங்க நிலைமை மோசமாகிடல. கிளம்புங்க.''

''கல்யாணம் பேசி நாள் குறிச்சாச்சு. இப்ப...''

''இதோ பாருங்க! உங்க வீட்டுக்கு எங்க அக்கா மருமகளா வருவான்னு கனவுகூட காணாதீங்க. போய் வேற இடம் பாருங்க''

''என்னடா கண்ணா பேசுற. உன் அக்காளை என் புள்ளைக்கு பேசி ஒப்புத்தாம்பூலம் கூட மாத்தியாச்சி. இது ஊருக்கே தெரியும். என்னையும் பகைச்சிட்டா உன் அக்கா காலம் பூரா உங்க வீட்டுல தான் இருக்கணும்.''

''ஏன்?''

''பிறகு? இவளை வேற எவன் கட்டுவான்?''

''நான் கட்டுவேன்'' கௌதமின் உறுதியான குரலில் எக்காளமாய் திரும்பிப்பார்த்தாள் ராஜேஸ்வரி. புன்னகைத்தான் கௌதம்.

''உங்களுக்கு இவளைப் பத்தின கவலை வேண்டாம். உங்க வேலையை மட்டும் பார்த்துக்கொண்டால் போதும். இனி இவள் என் மனைவி'' என்றவாறே ரோஜாவை நெருங்கி அவளைத் தன் தோளோடு சேர்த்துக்கொள்ள, சுந்தரமூர்த்தி பேச்சுவராமல், கண்களில் நன்றியோடு மாயக்கண்ணனை ஏறிட்டார்.

''மருமககிட்ட எல்லாம் பேசிட்டோம் சுந்தரம். உன் உடம்பு குணமாகட்டும். கல்யாணத்தை வெச்சிடலாம்'' என்றவரது கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக்கொண்டார் சுந்தரமூர்த்தி.

''ஸார்! உங்க... உங்க சம்பந்தத்துக்கு நான் தகுதியானவன்தானா?''

''என்ன சுந்தரம் இது? தகுதின்றது வெறும் காசு பணத்துல இல்ல. மனசுல, நாம நடந்துக்கிற நடத்தையில இருக்கு. அப்படிப் பார்த்தா நீங்க எங்களைவிட உயர்ந்தவர் சுந்தரம். உங்க வீட்ல பெண்ணெடுக்கிறது பெரிய பாக்கியம்.''

''கண்கள் கலங்க, பேச்சின்றி கைகளைக் கூப்பினாள் தேவகி. ராஜேஸ்வரியால் பொறுக்க முடியவில்லை.

''ஐயோ ஐயோ! இது என்ன அநியாயம்? எம் புள்ளைக்கு பேசி வெச்ச பொண்ணை எவனுக்கோ கல்யாணம் பண்ணிக்கொடுக்கப் போறீங்களா? இதை நான் விடப்போறதில்ல... நான்''

''இதோ பாருங்கம்மா. என் மருகளுக்கு எந்த தொந்தரவும் தராம நீங்களா விலகிட்டா நல்லது. இல்லன்னா...''

''எம்மகனுக்கு பேசி முடிவான பெண்ணை தன் பிள்ளைக்குக் கேட்டு தொந்தரவு செய்யறாங்க. இவங்க டார்ச்சர் தாங்க முடியாம எங்க சம்பந்தி உடம்பு முடியாம ஹாஸ்பிடல்ல இருக்கார். அப்படியும் வரதட்சணை கேட்டு ரொம்ப டார்ச்சர் பண்றிங்கன்னு மகளிர் போலீஸில கம்ளைண்ட் பண்ணிடுவேன்'' மாயக்கண்ணன் சற்று கடுமையான குரலில் சொல்ல, லேசாய் மிரண்டாள் ராஜேஸ்வரி.

''என்னய்யா பூச்சாண்டி காட்டுறியா? இதுக்கெல்லாம் பயப்படுறவ நானில்ல.'' என்றாள் வீராப்பாய்.

''பொம்ளை ஆளாப்போச்சே. பொறுமையா பேசினாப் போதும்னு நினைச்சேன். நீங்க கேட்கிறமாதிரியில்லை. சரி... சுந்தரம்! நான் சொன்ன மாதிரி போலீஸ்ல சொல்விடலாமா? நான் புகார் கொடுக்கிறத விட நீங்க கொடுத்தா அதுக்கு பவர் அதிகம். நான் வேணா போன் பண்ணித் தரவா?''

''ஐயோ! அதெல்லாம் வேண்டாங்க. ஆயிரம் இருந்தாலும் இவங்க என் நண்பனோட மனைவி. இவங்களைக் கஷ்டப்படுத்த வேண்டாம்''

''கேட்டீங்களம்மா? உங்களால இவ்வளவு கஷ்டப்பட்டும் உங்களைத் தண்டிக்கற அளவுக்கு மனசு வரல பார்த்தீங்களா? இதான். இந்த குணம்தான் அவர்கிட்ட உள்ள பெரிய சொத்து. இவர் பெத்த பொண்ணுக்கும் இதே குணம் தானே இருக்கும். இதைவிட பெரிய சொத்து என்னம்மா வேணும்?''

''போங்க! போய் உங்க பையனுக்கு இனிமேலாவது குடும்பம் நடத்த பொண்ணை மட்டும் தேடுங்க. கல்யாணத்தை பேரம் பேசி வியாபாரம் ஆக்காதீங்க. இந்தப் பொண்ணை நினைச்சி நல்லா வாழட்டும்னு ஆசீர்வதிங்க. இதுக்கு மேலயும் கஷ்டப்படுத்தாதீங்க'' மாயக்கண்ணன் பணிவாய்ச் சொல்ல, அலட்சியமாய் உதட்டைச் சுளித்தாள்.

''ஹூம்! பொல்லாத பொண்ணு. நீங்களே வெச்சிக்கங்க. எம் புள்ளைக்கு என்ன வேற பொண்ணா கிடைக்காது? அவன் ஆம்பிளை



சிங்கம். ஆயிரம் பொண்ணு நான்பார்ப்பேன்''

''ரொம்ப சந்தோஷம். அப்போ கிளம்புறது'' என்ற சங்கரைப் பார்த்து முகத்தைத்திருப்பிக் கொண்டு வெளியேறினார். அதே நேரம் உள்ள வந்த நர்ஸ் அனைவரும் பார்த்து கோபமானாள்.

''என்ன இது? இத்தனை பேர் நிற்கிறீங்க? ஆபரேஷன் பண்ணின பேஷண்ட் ஜாஸ்தி பேசக்கூடாதுன்னு சொன்னேனே?''

''ஸாரி சிஸ்டர். கொஞ்சம் முக்கியமான விஷயம் பேசணும்''

''நோ... நோ... எதுவா இருந்தாலும் டிஸ்சார்ஜ் பண்ணின பிறகு பேசுங்க. டாக்டர் ரவுண்ட்ஸ் வர்ற நேரம். ஒருத்தர் மட்டும் கூட இருங்க. மத்தவங்க எல்லாம் வெளியே போங்க. ப்ளீஸ்...''

''தேங்க்யூ சிஸ்டர்'' என்ற கௌதம் முதல் ஆளாய் ரோஜாவை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான்.

''ஐயோ! என்ன இது? முதல்ல கைய விடுங்க''

''நோ! இப்ப பிடிச்ச கையை என்னிக்குமே விடமாட்டேன்.''

''ம்... டயலாக் நல்லாத்தான் இருக்கு. இது என்ன பொது இடத்தில... கைய விடுங்க'' என கையை உருவிக்கொண்டாள்.

''ஓ.கே. ராஜகுமாரி. எல்லாரும் வெளியே வர்றதுக்குள்ள சீக்கிரமா சொல்லு''

''என்ன சொல்லணும்?''

''என்னைக்கட்டிக்க உனக்கு சம்மதமா இல்லையான்னு''

ரோஜாவின் முகம் சிவந்தது. ''அதான்... அப்பவே சொல்லிட்டேன்''

''எங்கிட்ட சொல்லலையே. உன் மாமனார் கிட்டதானே சொன்னே?'' கமான்! டெல் மீ''

''ம் ஹூம், முடியாது'' புன்னகையோடு தலையசைத்தாள்''

''சொல்லலேன்னா உன்னைக் கட்டிக்க மாட்டேன்''

''நோ ப்ராளம். எனக்கொன்னும் இல்ல''

''அடிப்பாவி! அப்போ உனக்கு என்னை பிடிக்கலையா?''

''அப்படின்னும் சொல்ல முடியாது''

''பின்னே?''

''எங்க அப்பாவுக்கு பிடிச்சதால நானும் ஓ.கே. சொல்லிட்டேன்''

''அப்போ உனக்கு எம்மேல எதுவுமே இல்லையா?''

எல்லாமே இருக்கு என்று சொல்லி கௌதமைப் பார்த்த பார்வையில் காதல் கசிந்தது.

(முற்றும்)